# முயற்சியாண்மைக் கல்வி

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம்-11

(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)

வணிகக்கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா
Web:www.nie.lk
Email: info@nie.

# முயற்சியாண்மைக் கல்வி

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம்-11

வணிகக்கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா

**முயற்சியாண்மைக் கல்வி**
தரம் - 11
ஆசிரியர் வழிகாட்டி

முதலாம் பதிப்பு: 2015

தேசிய கல்வி நிறுவகம்
ISBN

வணிகக் கலர்வித்துறை
விஞ்ஞான தொழினுட்பப்பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கடந்த காலந்தொட்டு கல்வியானது தொடர்ந்து மாற்றங்களுக்குட்பட்டு வருகின்றது. அண்மிய யுகத்தில் இம்மாற்றங்களானவை மிக வேகமாக ஏற்பட்டன. கற்றல் முறைகளைப் போன்று தொழில்நுட்பக் கருவிகளின் பாவனை மற்றும் அறிவுத் தோற்றங்கள் தொடர்பாகவும் கடந்த இரு தசாப்தங்களில் கூடியளவு மறுமலர்ச்சி ஏற்பட்டு வருவதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதற்கமைய, தேசிய கல்வி நிறுவகமும் 2015 ஆம் ஆண்டுக்குரிய கல்வி மறுசீரமைப்பிற்காக எண்ணிலடங்காத பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. பூகோளமய ரீதியாக ஏற்படும் மாற்றங்கள் தொடர்பாகச் சிறந்த முறையில் அறிந்து உள்நாட்டுத் தேவைக்கமைய இசைவுபடுத்தி மாணவர் மையக் கற்றல் - கற்பித்தல் முறையை அடிப்படையாகக் கொண்டு புதிய பாடதிட்டம் திட்டமிடப்பட்டு பாடசாலை முறைமையின் முகவர்களாகச் சேவையாற்றும் ஆசிரியர்களாகிய உங்களிடம் இவ்வாசிரியர் வழிகாட்டியை ஒப்படைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாறான புதிய வழிகாட்டல் ஆலோசனையை உங்களுக்குப் பெற்றுக் கொடுப்பதன் நோக்கம், அதன் மூலம் சிறந்த பங்களிப்பை பெற்றுத் தரமுடியும் என்ற நம்பிக்கையாகும்.

இவ்வாறான ஆசிரியர் வழிகாட்டியானது வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கின் போது உங்களுக்குக் கைகொடுக்கும் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை. அதேபோன்று இவ்வழிகாட்டியின் துணைகொண்டு நடைமுறை ரீதியான வளங்களையும் பயன்படுத்தி மிகவும் விருத்தி கொண்ட விடயப் பரப்பினூடாக வகுப்பறையில் செயற்படுத்து வதற்கு உங்களுக்கு முழுமையான சுதந்திரமுண்டு.

உங்களுக்கு வழங்கப்படும் இவ்வாசிரியர் வழிகாட்டியைச் சிறந்த முறையில் விளங்கி, மிகச் சிறந்த ஆக்கபூர்வமான மாணவர் சமூகமொன்றை உருவாக்கி, இலங்கையை பொருளாதார மற்றும் சமூக ரீதியில் முன்னேற்றிச் செல்வதற்குப் பொறுப்புடன் செயற்படுவீர்கள் என நான் நம்பிக்கை கொள்கின்றேன்.

இவ்வாசிரியர் வழிகாட்டியானது இப்பாடத்துறையுடன் தொடர்புடைய ஆசிரியர்கள், வளவாளர்கள் என்போர்களின் சிறந்த முயற்சியினாலும் அர்ப்பணிப்பினாலும் உருவாக்கப் பட்டுள்ளது.

கல்வித் துறையின் அபிவிருத்திக்காக இக்கருத்தை மிக உயர்ந்ததாகக் கருதி அர்ப்பணிப்புடன் செயற்பட்ட உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**எம். எப். எஸ். பி. ஜயவர்தன**
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
விஞ்ஞான தொழில்நுட்பப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்.

## வளவாளர்கள்

| | | |
|---|---|---|
| **ஆலோசனையும் அனுமதியும்** | : | கலைப்பீடக் கருமங்கள் தொடர்பான குழு<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **பாட இணைப்பாளர்கள்** | : | டப்ளியு.எம்.எ.பி.விஜயசூரிய<br>சிரேஷ்ட விரிவுரையாளர்<br>வணிக கல்வித்துறை,<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **எழுத்தாளர் குழு<br>(உள்ளக ரீதியான பங்களிப்பு)** | : | டப்ளியு.எம்.எ.பி.விஜயசூரிய<br>சிரேஷ்ட விரிவுரையாளர்<br>எம்.ஏ.ஐ.பி.பெரேரா<br>சிரேஷ்ட விரிவுரையாளர்<br>எஸ்.கே.பிரபாகரன்<br>விரிவுரையாளர்<br>எஸ்.ஆர்.ரத்னஜீவ<br>உதவி விரிவுரையாளர் |
| **எழுத்தாளர் குழு<br>(வெளியக பங்களிப்பு)** | : | டி.எஸ்.ராஜபக்ஷ<br>இலங்கை அதிபர் சேவை<br>இரா/ப/உடகம மகா வித்தியாலயம்<br>பலாங்கொடை<br>சிரிமா நாணயக்கார - ஆசிரிய ஆலோசகர்<br>வலயக் கல்வி அலுவலகம், எல்பிட்டிய<br>எம்.எச்.எம்.புஹாரி<br>முன்னாள் ஆசிரிய ஆலோசகர்<br>வலயக் கல்வி பணிமனை கேகாலை<br>எல்.எம்.நவாஸ் - ஆசிரிய ஆலோசகர்<br>வலயக் கல்வி அலுவலகம் இப்பாகமுவ |
| **தமிழ் சரவை நோக்கு** | : | எஸ்.கே.பிரபாகரன்- விரிவுரையாளர்<br>தேசிய கல்வி நிறுவகம்<br>எல்.எம்.நவாஸ்<br>ஆசிரிய ஆலோசகர், இப்பாகமுவ |

## ஆசிரியர் வழிகாட்டியினைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்

2007 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பாடத்திட்ட மறுசீரமைப்பின் அடிப்படையில் இலங்கையின் பாடசாலை முறைமையில் சிரேஷ்ட, இடைநிலை மட்டங்களில் தரம் 10, 11இல் முயற்சியாண்மைக் கல்விப் பாடம், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டது. பூகோளமயமாதலின் ஒன்றாக புது யுகத்தில் இப்பாடம் பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்பட முடியும். முயற்சியாண்மைத் திறன்கள் தனிநபர்களினுள் காணப்படுகின்றதும் கட்டியெழுப்பக்கூடியதுமான மிகப் பெறுமதி வாய்ந்த உயர்மட்டத்திலான திறன்களாகும். முயற்சியாண்மையானது தனி நபர்கள் எனும் முறையில் செயற்படும் முறை தொடர்பானதொன்றாகும். இதன் காரணமாக முயற்சியாண்மைக் கல்விப் பாடம் தனி நபர்களிடத்தில் எண்ணங்களடங்கிய புரட்சியொன்றை உருவாக்கி மனப்பாங்கு ரீதியான மாற்றங்களை ஏற்படுத்த முடியும். இதற்கமைய அவர்கள் சமூக, பொருளாதார நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு அதனது பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

முயற்சியாண்மை தொடர்பில் ஆசிரியர் வகிபாகத்திற்குக் கூடிய கடப்பாடு எதிர்பார்க்கப்படுகிறது. மாணவர்களுக்கு முயற்சியாண்மைக் கல்வியைப் பெற்றுக் கொள்ள வழிகாட்டும் போது ஆசிரியர் சம்பிரதாய முறையிலான ஆசிரியர் வகிபாகத்திலிருந்து நீங்குவதற்கும் மாணவர்கள் இயங்கக் கூடியவாறு கற்றலைப் பெறக்கூடிய பிரிவினர்களாக மாற்றமுற வேண்டிய நிலையேற்படும். வினாத்தொடுத்தலுடன் கூடிய கற்றல் முறையொன்றைப் பின்பற்றிச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்வதற்கு ஆசிரியர்கள் ஆயத்தமாதல் முக்கியமானதாகும். இவ்வாசிரியர் வழிகாட்டியில் பாடத்திட்டத்திற்குரிய அனைத்துத் தேர்ச்சி மட்டங்களுக்குமான கற்றல் கற்பித்தல் செயன்முறைகளுக்கான செயற்பாடுகள் முன்மொழியப்பட்டுள்ளன.

அச்செயற்பாடுகள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி உத்தேச கற்றல் விளைவினை அடைந்து கொள்ளக் கூடியவாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்வதில் அவதானம் செலுத்துதல் முக்கியமானதாகும். அத்துடன், மேலதிகமாக இதில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தேச செயற்பாடுகளில் மட்டும் தங்கியிராது ஆசிரியர்கள் அறிந்துள்ளதும் பழக்கப்பட்டதுமான செயற்பாடுகளிலும் பாடத்தைப் பயன்படுத்துவது சிறந்தது. எவ்வாறாயினும் முயற்சியாண்மைக் கல்வியைக் கற்கும் மாணவர்கள் 10, 11 ஆம் தரங்களில் காணப்படும் பாடங்களுக்கமைய அவர்களுக்கு முயற்சியாண்மையின் மீது நாட்டம் ஏற்பட்டு முயற்சியாளர்களாக எண்ணக்கூடிய பிரிவினர்கள் எனும் நிலைக்கு மாற்றப்படுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்திற்குரிய அனைத்து நாடுகளிலும் உள்ள பாடசாலைகளில் முயற்சியாண்மைக் கல்வி நடைமுறைப்படுத்தப்படும். அவ்வொன்றியத்தின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட முயற்சியாண்மைக் கல்வி ஆசிரியர்களுக்கான வழிகாட்டலொன்றின் மூலம் எவரேனுமொருவர் முயற்சியாண்மையாளராவது எப்படி? எனும் விளம்பரத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக நீங்களும் கவனஞ் செலுத்துவது முக்கியமானதாகும்.

- முயற்சியாண்மைக் கல்வியானது யாதேனும் வணிகமொன்றை நடாத்திச் செல்லல் எவ்வாறு? என்பதனை விட அதிக விடயங்களைக் கொண்டதொன்றாகும். அது முயற்சியாண்மை மனப்பாங்கு, திறன், அறிவு என்பவற்றை விருத்தி செய்தல் எவ்வாறு என்பது தொடர்பானதாகும். சுருக்கமாகக் குறிப்பிட்டுக் கூறுவதாயின், எண்ணமொன்று செயலுருப் பெறுவதற்கான இயலுமையை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும்.

- ஆசிரியர்கள் தாம் முயற்சியாளர்களாக மாற்றமுறாது முயற்சியாளர்கள் எனும் நிலைக்கு எவ்வாறு மாற்றமுறுவது என்பதனை கற்பிக்க முடியாது.
- மாணவர்கள் ஆக்கபூர்வமானவர்களாகவும் புத்துருவாக்கத் தன்மையுடையவர்களாகவும் தம்மை வெளிப்படுத்தக்கூடிய முறைகளில் இயங்குவதற்கு முயற்சியாண்மைத் திறன்கள் தேவையானதாகும்.
- செயல்முறை ரீதியிலும் உண்மை இயல்பு நிலைக் கற்றல் திறன்களினூடாகவும் முயற்சியாண்மைத் தேர்ச்சிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.
- அனைத்துப் பாடங்களினூடாக மட்டுமின்றி வேறு தனியான பாடங்கள் மூலமும் முயற்சியாண்மைத் திறன்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.
- முயற்சியாண்மையானது கம்பனிகளைப் போன்று அரச நிறுவனங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருவதனால் முயற்சியாண்மைக் கல்வியில் முயற்சியாண்மைகளைப் போன்று உள்ளக முயற்சியாளர்கள் மீதும் கவனஞ் செலுத்தப்பட வேண்டும்.
- முயற்சியாண்மைக் கல்வியினை முழுமையாக உள்வாங்கிக் கொள்வதற்காக கல்வித் திட்டத்தில் அனைத்து மட்டங்களிலும் முயற்சியாண்மைக்குரிய கற்றல் விளைவினை கணிப்பீட்டு முறை, தரப் பாதுகாப்புச் செயற்பாட்டு விதிமுறைகள் என்பவற்றை விருத்தி செய்தல் வேண்டும். ஆசிரியர்களிடத்தே முயற்சியாண்மை அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை மேலெழச் செய்வதற்கு ஏற்றவகையில் இவற்றைத் திட்டமிடுதல் வேண்டும்.

கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கின் போது முயற்சியாண்மைக் கல்விக்குரிய பாடப் புத்தகத்தில் காணப்படும் ஒவ்வொரு தேர்ச்சிகளுக்குமேற்பப் பாடங்களின் உள்ளடக்கங்கள் தொடர்பாகச் சிறந்த முறையிலான விளக்கத்தினைப் பெற்றிருப்பது முக்கியமானதாகும். இவ்வாசிரியர் வழிகாட்டிற்கமைவாக மாணவர் பாடப் புத்தகத்தினையும் பயன்படுத்தி கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளைத் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும்.

**பாட இணைப்பாளர்**

# உள்ளடக்கம்

**பக்க இலக்கம்**


| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | vi |
| வளவாளர்கள் | v |
| ஆசிரியர் வழிகாட்டியினைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள் | vi |
| கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கிற்கான ஆலோசனைகள் | 1--67 |

# பாடத்திட்ட உள்ளடக்கம்

# அறிமுகம்

சிரேஷ்ட இடைநிலை மட்டங்களில் தரம் 10, 11 மாணவர்கள் கற்பதற்குரிய தெரிவுப் பாடமொன்றாக ‘முயற்சியாண்மைக் கல்வி காணப்படுகின்றது. 2007ம் ஆண்டில் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்வி மறுசீரமைப்பில் சிரேஷ்ட இடைநிலைப் பாடவிதானத்தில் தரம் 10, 11 வகுப்புகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடமொன்றாக முயற்சியாண்மைக் கல்விப் பாடத்தை குறிப்பிட்டுக் காட்ட முடியும். முயற்சியாண்மைக் கல்வியைக் கற்பதன் மூலம் கல்வியினால் விருத்தி செய்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் பொதுத்திறனான ஆளுமை விருத்திக்குரிய தேர்ச்சிகளையும் வேலை உலகிற்கு ஆயத்தமாகக் கூடிய தேர்ச்சிகளையும் சிறந்த முறையில் அடைந்து கொள்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. முயற்சியாண்மைக் கல்வியானது உயிரோட்டம் கொண்ட பாடமொன்றாகும். அதே போன்று 21 ஆம் நூற்றாண்டின் புதிய அலையொன்றை ஏற்படுத்தும் பாடமொன்றாகவும் முயற்சியாண்மைக் கல்வி காணப்படுகிறது. ஐரோப்பிய ஒன்றியத்திற்கு உட்பட்ட நாடுகளை உள்ளடக்கிய அனைத்து நாடுகளில் மாணவர்களுக்கு முயற்சியாண்மைக் கற்கைப்பாடத்தில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு கொள்கை ரீதியாகத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பாடத்தைக் கற்பதற்கு வசதி செய்து கொடுப்பதன் மூலம் 21 ஆம் நூற்றாண்டில் தோன்றக் கூடிய பூகோளமய ரீதியான சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு மாணவர்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள முடியும்.

இப்பாடமானது கனிஷ்ட இடைநிலைப் பாட விதானத்தில் 6 முதல் 9 வரையிலான தரங்களில் முதற்படியாக ‘‘பிரயோகமும் தொழினுட்பமும்’’ எனும் பாடத்தினூடாக அறிமுகப்படுத்திக் கற்பிக்கப்படுகின்றது என்பதனைக் காணக்கூடியதாக உள்ளது. இப்பாடத்தினைக் கற்கும் மாணவர்களுக்கு ‘‘முயற்சியாண்மை’’ தொடர்பான அடிப்படை விளக்கங்களைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன் அம்மாணவர்களினால் 10, 11 ஆம் தரங்களில் ‘முயற்சியாண்மை’ எனும் பாடத்தினூடாக சுயமான அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றினை விருத்தி செய்து கொள்வதற்கு முடியுமாக இருக்கின்றது. அத்துடன் க.பொ.த. உயர்தரத்தில் ‘வணிகக்கல்வியினைக்’ கற்கும் பொழுது முயற்சியாண்மை தொடர்பாக மேலும் விளக்கத்தைப் பெற்றுக் கௌள்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இம் மாணவர்கள் உயர்கல்வியில் பிரவேசிக்கும்பொழுது பல்கலைக்கழகங்களிலும் இதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

2007 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட முயற்சியாண்மைக் கற்கைப் பாடத்தை வகுப்பறையினுள் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களையும் குறிப்பிட்ட முறையில் பெற்ற அனுபவங்கள் என்பவற்றை கருத்திற்கொண்டு இப்பாடத்தினை மாணவர்கள் மிக பயனுள்ள பாடமாக மாற்றுவதற்காகச் இம்முறை சிற்சில மாற்றங்களைச் செய்து இப்பாடம் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய முக்கியமாக பாடப்பரப்பின் ஆழத்தைக் குறைத்ததுடன் மிகவும் எளிமையான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டது மட்டுமன்றி மிகவும் தர்க்க ரீதியாக செயற்பாட்டு முறையில் தேர்ச்சிகள் துணைத் தேர்ச்சிகளாக படிமுறைப்படுத்தப்பட்டு அதற்குப் பொருத்தமான வகையில் பாடப் பரப்புக்கள் வடிவமைக்கப்பட்டன.

முயற்சியாண்மைக் கற்கையைக் கற்பதன் மூலம் தனிநபர்களுக்கும், நாட்டிற்கும் கூடுதலான பயன்கள் கிடைக்கப் பெற்றாலும் தரம் 10 இல் பிரவேசிக்கும் மாணவர்கள் பொதுவாக இப்பாடத்தை தெரிவு செய்யும். சந்தர்ப்பங்கள் மிகக் குறைந்த மட்டங்களிலே காணப்படுகின்றன. எனவே மாணவர்கள் இப்பாடத்தைத் தெரிவு செய்வது கல்வி அதிகாரிகளதும், ஆசிரியர்களதும் பொறுப்பாகும். இதற்கமைய இப்பாடத்தை தெரிவுத் செய்வதற்கு மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்கும், பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களை ஊக்கப்படுத்துவதற்கும், வணிகக் கல்விப் பணிப்பாளர்கள், பாட அபிவிருத்திப் பணிப்பாளர்கள், அதிபர்கள், பகுதிக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் தேவையான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும்.

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலம் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தி செய்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(மூலம் தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

   தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

   எழுத்தறிவு: கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்

   எண்ணறிவு: பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்

   சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

   தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ஐஊவு) பயன்படுத்தல்.

2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்
   - ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
   - நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
   - மன எழுச்சிகள், நுண்ணறிவு

3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

   இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

   சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை

   உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்
அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்
அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்
அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

7. ‘‘கற்றலுக்குக் கற்றல்’’ தொடர்பான தேர்ச்சிகள்
விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(மூலம் தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## நோக்கங்கள்

01. ‘முயற்சியாண்மை’ தொடர்பில் அடிப்படை எண்ணக்கருக்கள் தொடர்பான அறிவினைப் பெறுதல்.

02. வணிக நடவடிக்கைகளின் தன்மை, வணிகங்களது சமூக மற்றும் பொருளாதார தேவைப்பாடு என்பவை தொடர்பான அடிப்படை விளக்கத்தினைப் பெறுதல்.

03. முயற்சியாண்மையின் மீது நாட்டம் ஏற்பட்டு அதன் உண்மையான செயற்பாட்டாளராக மாறுதல்.

04. சமூகத்தின் எந்தவொரு தனிநபர் வகிபங்கிலும் வெற்றிகரமான கருமங்களை ஆற்றுவதற்குரிய தகைமையைப் பெற்றுக் கொள்வதற்குரிய முயற்சியாண்மைத் தேர்ச்சிகளைப் பெற்றுக் கொள்ளல்.

05. முயற்சியாண்மைக் கல்வித்துறையில் மேலதிக கல்வி நடவடிக்கைகள் மற்றும் தொழிலொன்றில் ஈடுபடுதல் என்பவற்றிற்குத் தேவைப்படும் அடிப்படை அறிவினைப் பெறுதல்.

06. சமநிலையான ஆளுமையுடன் கூடிய உயர் வினைத்திறன் கொண்ட தனிநபர் ஒருவராக மாற்றம் பெறுதல்.

07. மாறும் வணிகச்சூழலுக்குப் பொருத்தமாக மாற்றமடைந்து வெற்றிகரமான முயற்சியாளர் என்ற வகையில் கருமங்களை ஆற்றுவதற்கான இயலுமையைப் பெறுதல்.

08. வணிகமொன்றை மேற்கொள்வதற்குரிய வெற்றிகரமான ஆரம்பத்தினைப் பெற்றுக் கொள்ளலும் சுயமாகத் தொழிலொன்றை ஆற்றக்கூடியவராக மாற்றம் பெறுதலும்.

09. உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்தி இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதன் மூலம் நாட்டிற்குக் கூடிய வருமானங்களைப் பெற்றுக் கொடுக்கும் தனிநபரொருவராக மாறுதல்.

10. பொருளாதார, சமூக ரீதியில் கூடிய அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளும் தன்னம்பிக்கையுடைய தனிநபர் ஒருவராக மாறுதல்.

## கணிப்பீடும் மதிப்பீடும்

### பாடசாலை மட்டம்

முயற்சியாண்மையானது மிக நடைமுறை ரீதியானதும் சமூக ரீதியானதுமான பாடமொன்றாகும். இப்பாடத்தில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் இயன்றளவு மாணவரை மையமாகக் கொண்டதாக நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், அதற்குப் பொருத்தமான வகையில் மதிப்பீட்டுக் கருவிகள் பாடசாலைகளால் திட்டமிடப்படல் வேண்டும். இங்கு கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறும் வேளையில் மதிப்பீட்டினையும் மேற்கொள்ள வேண்டியதுடன் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத் திட்டத்தினடிப்படையில் (SBA) கணிப்பீட்டுக் கருவிகளைத் தயாரிக்கும் பொழுது அதற்குப் பொருத்தமான நியதிகளைக் கட்டியெழுப்பி மதிப்பீட்டினை மேற்கொள்ளுதல் வேண்டும். இப்பாடத்திற்காகத் திட்டமிடப்பட்ட ஆசிரியர் வழிகாட்டியில் முன்மொழியப்பட்ட செயற்பாடுகளில் எதிர்பார்கக்ப்பட்ட கற்றல் பேறுகள் காணப்படும் முறைக்கேற்ப கணிப்பீடு, மதிப்பீடு என்பன இடம்பெற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வருட இறுதித் தவணைப் பரீட்சைகளுக்கான வினாப்பத்திரங்களைத் தயாரிக்கும் பொழுது பின்வரும் வினாப்பத்திரங்களின் மாதிரியும் கட்டமைப்பும் பின்பற்றப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

முயற்சியாண்மைக் கல்வியானது வினாப்பத்திரம் I, வினாப்பத்திரம் II எனும் வகையில் 3 மணித்தியாலயங்களில் விடையளிக்கக் கூடிய இரு வினாப்பத்திரங்களைக் கொண்டது.

**தரம் - 10**

**வினாப்பத்திரம் I** - தேர்ச்சி 4 வரை உள்ளடக்கியவாறு பல்தேர்வு வினாக்கள் 25 ஐக் கொண்ட வினாப்பத்திரமாகும். 25x2=50

**வினாப்பத்திரம் II** - தேர்ச்சி 4 வரையில் உள்ளடக்கியவாறு கட்டமைக்கப்பட்ட வினாக்கள் 6 ஐ உள்ளடக்கியது. 5 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். 5 x 10 = 50 புள்ளிகளாகும்.

**தரம் - 11**

**வினாப்பத்திரம் I** - முழுமையான பாடவிதானத்தினை உள்ளடக்கியவாறு தயாரிக்கப்பட்ட பல்தேர்வு வினாக்களையும், சுருக்கமான விடையளிக்கக் கூடிய வினாக்களையும் கொண்ட மொத்தம் 40 வினாக்களை உள்ளடக்கிய வினாப்பத்திரத்தினைக் கொண்டது. மொத்தம் 40 புள்ளிகளாகும்.

**வினாப்பத்திரம் II** - முழுமையான பாடவிதானத்தையும் உள்ளடக்கியவாறு தயாரிக்கப்பட்ட கட்டமைப்பு, கட்டுரை அமைப்புக் கொண்ட 07 வினாக்களை உள்ளடக்கியது. பரீட்சாத்திகள் 05 வினாக்களுக்கு மட்டும் விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் 12 புள்ளிகள் வீதம் 5 வினாக்களுக்கு 60 புள்ளிகளாகும். வினாப்பத்திரம் I, II ற்கான மொத்தக் காலம் 03 மணித்தியாலங்களாகும். மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு வினாக்களைத் தயாரிக்கும்பொழுது விடய ஆய்வினை அடிப்படையாகக் கொண்ட வினாக்களை உருவாக்குவதற்கு முன்மொழியப்படும். வினாப்பத்திரத்தின் அனைத்து வினாக்களும் எதிர்பார்ப்பு கற்றற்பேறினை உள்ளடக்கக் கூடியவாறு உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வினாப்பத்திரத்தின் அனைத்து வினாக்களும் உத்தேச கற்றற் பேறினை அடிப்படையாகக் கொண்டிருக்குமாறு தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஆசிரியர் வழிகாட்டியினைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்

xvii

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 5.0 வணிகமொன்றை ஆரம்பிப்பதற்காகத் திட்டமொன்றைத் தயாரிப்பார். | 5.1 வணிகமொன்றை ஆரம்பிப்பதற்காக வணிகத்திட்டத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவார். | • வணிகத்திட்டம்<br>  • அறிமுகம்<br>  • பயன்கள்<br>  • வணிகத்திட்டமொன்றின் அமைப்பு | • வணிகத்திட்டத்தை அறிமுகப்படுத்துவார்.<br>• வணிகமொன்றை ஆரம்பிக்கும்பொழுது வணிகத் திட்டத்தின் முக்கியத்துவத்தை கலந்துரையாடுவார்.<br>• வணிகத் திட்டமொன்றின் பிரிவுகளை விபரிப்பார். | 45<br>03 |
| | 5.2 வணிக வாய்ப்பிற்காக சந்தைப்படுத்தல் திட்டம் ஒன்றைத் தயாரிப்பார். | • சந்தைப்படுத்தல் திட்டம்<br>  • அறிமுகம்<br>  • சந்தைப்படுத்தல் திட்டத்திற்குரிய தகவல்கள்<br>    • சந்தை தொடர்பான தகவல்கள்<br>    • முன்மொழியப்படும் வணிகத்தின் விற்பனைத் தந்திரோபாய வழிமுறைகள்<br>    • விற்பனை எதிர்வு கூறல்<br>    • விற்பனை வருமானங்களும், விற்பனைச் செலவுகளும்<br>    • விற்பனை விநியோக நீண்டகாலச் சொத்துக்கள் | • சந்தைப்படுத்தல் திட்டத்தைத் தயாரிப்பதற்குத் தேவையான சந்தைப்படுத்தல் தகவல்களை முன்வைப்பார்.<br>• விற்பனைத் தந்திரோபாய முறைகளை உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்துவார்.<br>• வழங்கப்பட்ட சந்தைப்படுத்தல் தகவல்களைத் துணையாகக் கொண்டு விற்பனைத் திட்டத்தினைத் தயாரிப்பார். | 09 |
| | 5.3 பாதிடப்பட்ட விற்பனையைக் கருத்திற்கொண்டு உற்பத்திக் கிரயத் திட்டத்தினைத் தயாரிப்பார். | • உற்பத்திக் கிரயத்திட்டம்<br>  • அறிமுகம்<br>  • உற்பத்திக்குத் தேவையான உள்ளீடுகள்<br>    • நீண்டகாலச் சொத்துக்கள்<br>    • மூலப் பொருட்கள்<br>    • ஊழியர் | • உற்பத்திக்குத் தேவையான வளங்களை உதாரணங்களுடன் விளக்குவார்.<br>• உத்தேச உற்பத்திக்குத் தேவையான உள்ளீடுகளின் பெறுமதியினைக் கணிப்பிடுவார்.<br>• உத்தேச உற்பத்திக்கான மொத்த | 09 |

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | • உற்பத்திக் கிரயம்<br>  • மூலப் பொருட் கிரயம்<br>  • கூலிக்கிரயம்<br>  • மேந்தலைக்கிரயம்<br>• அலகுக் கிரயம் | உற்பத்திக் கிரயத்தைக் கணித்து அலகுக்கான கிரயத்தைக் கணிப்பிடுவார். | |
| | 5.4 முன்மொழியப்படும் வணிகமொன்றின் நிர்வாக நடவடிக்கைகளுக்கான திட்டத்தினைத் தயாரிப்பார். | • நிர்வாக நடவடிக்கைகளுக்கான திட்டம்<br>  • அறிமுகம்<br>  • நிறுவனத்தின் பதவிகளும் பொறுப்புக்களும்<br>  • ஊழியர் சம்பளமும் கூலியும்<br>  • ஏனைய நிர்வாகச் செலவுகள்<br>  • நிர்வாக நிலையான சொத்துக்கள் | • உத்தேச வணிகமொன்றின் நிர்வாக நடவடிக்கைகளுக்குரிய திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பதவிகள் அவர்களுக்குரிய பொறுப்புக்கள் என்பவற்றிற்கான உதாரணங்களை எடுத்துக் காட்டுவார்.<br>• உத்தேச வணிகத்தின் நிருவாக நடவடிக்கைகளுக்கான செலவுகளைக் கணிப்பிடுவார்.<br>• உத்தேச வணிகத்தினது நிர்வாகச் செலவுகளது திட்டத்தினைத் தயாரிப்பார்.<br>• உத்தேச வணிகத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னர் மேற்கொள்ளவேண்டிய கருமங்களுக்கான உதாரணங்களைச் சுட்டிக் காட்டுவார். | 06 |

xviii



J 447/Ri

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 5.5 நிதித்திட்டத்தின் செயற் பாட்டிற்கு முன்னரான செலவுத் திட்டத்தினைத் தயாரிப்பார். | • நிதித் திட்டம்<br>  • அறிமுகம்<br>• வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னரான கருமங்களும், அதற்கான செலவுகளும்<br>  • அறிமுகம்<br>  • சந்தை ஆய்வு<br>  • நிலைய இடத்தை ஆயத்தப்படுத்தல்<br>  • பொருட்களையும், உபகரணங்களையும் தேடியறிதல்.<br>  • பதிவு செய்தல்<br>  • ஏனையவை | • உத்தேச வணிகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் மேற்கொள்ளும் கருமங்களுக்கான உத்தேச செலவுகளைக் கணிப்பிடுவார்.<br>• வழங்கப்பட்ட வணிகத்தின் செயற்பாடடிற்கு முன்னரான செலவுகள் அடங்கிய திட்டத்தினைத் தயாரிப்பார். | 03 |
| | 5.6 உத்தேச வணிகத்தை ஆரம்பிப்பதற்குத் தேவை யான மொத்தச் செலவு களைக் கருத்திற் கொண்டு முதலீட்டுத் திட்டத்தைத் தயாரிப்பார். | • மொத்த முதலீட்டுத் திட்டம்<br>  • அறிமுகம்<br>  • நிலையான சொத்துக்கள்<br>  • ஆரம்பிப்பதற்கு முன்னர் ஏற்படக்கூடிய மொத்தச் செலவுகள்<br>  • அன்றாட கருமங்களை நடாத்திச் செல் வதற்காக தன்னிடம் வைத்திருக்க வேண்டிய காசுப் பெறுமானம் | • உத்தேச வணிகத்தின் மொத்த முதலீட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்படும் உருப்படி களை உதாரணங்களுடன் முன்வைப்பார்.<br>• உத்தேச வணிகத்தின் அன்றாட நடவடிக் கைகளை நடாத்திச் செல்வதற்காக ஏற்படும் செலவுகளை கணிப்பிடுவார்.<br>• வழங்கப்பட்ட வணிகத்திற்கான மொத்த முதலீட்டுத் திட்டத்தினைத் தயாரிப்பார். | 06 |

xx

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 5.7 உத்தேச காசு உட்பாய்ச்சல், காசு வெளிப் பாய்ச்சல் என்பன உள்ளடக் கப்பட்ட அட்ட வணையைத் தயாரிப்பார். | • காசு உட்பாய்ச்சலும், காசு வெளிப்பாய்ச்சலும்<br>• அறிமுகம்<br>• உத்தேச காசு உட்பாய்ச்சல்<br>• உத்தேச காசு வெளிப்பாய்ச்சல் | • உத்தேச வணிகத்தின் காசு உட்பாய்ச்சல் களுக்கான உதாரணங்களை முன் வைப்பார்.<br>• உத்தேச வணிகத்தின் காசு வெளிப் பாய்ச்சலுக்கான உதாரணங்களைக் காட்டுவார்.<br>• வழங்கப்பட்ட வணிகத்தின் காசு உட் பாய்ச்சல், காசு வெளிப்பாய்ச்சல் அடங்கிய அட்டவணையொன்றைத் தயாரிப்பார். | 03 |
| | 5.8 உத்தேச வருமானங்கள், செலவுகளைக் கருத்திற்கொண்டு வணிக நடவடிக்கைகளின் பெறுபேற்றினை கணிப்பிடுவார். | • வணிகப் பெறுபேற்றினைக் கணிப்பிடல்<br>• அறிமுகம்<br>• மொத்த வருமானங்கள்<br>• மொத்தச் செலவினங்கள்<br>• உத்தேச இலாபம் | • குறித்த காலத்திற்குரிய வணிகத்தினது பெறுபேற்றினைக் கணிப்பதற்குத் தேவையான உருப்படிகளை உதாரணங்களுடன் எடுத்துக்காட்டுவார்.<br>• வழங்கப்பட்ட வணிகத்தினது பெறுபேற் றினைக் கணிப்பிடுவதற்குத் தேவையான உருப்படிகளை பெறுமானங்களுடன் சுட்டிக்காட்டுவார்.<br>• வழங்கப்பட்ட வணிகமொன்றினது குறித்த காலப்பகுதிக்குரிய விளைவினைக் கணிப்பிடுவார். | 06 |

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 6.0 வணிகத்தை ஆரம்பிப் பதற்குப் பொருத்தமான வணிக அமைப்புக் களைத் தேடியறிவார். | | | | 24 |
| | 6.1 வணிக அமைப்பு வகைகளை அறிந்து கொள்வார். | • வணிக அமைப்புக்களின் வகைகள்<br>• அறிமுகம்<br>• நோக்கத்தினடிப்படையில் வகைப்படுத்தல்<br>• உரிமையினடிப்படையில் வகைப்படுத்தல் | • வணிக அமைப்புக்களை உதாரணங்களுடன் விளக்குவார்.<br>• வணிக அமைப்புக்களை நோக்கத்தினடிப் படையில் வகைப்படுத்தி உதாரணங்களுடன் காட்டுவார்.<br>• வணிக அமைப்புக்களை உரிமையின் அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுவார். | 03 |
| | 6.2 தனியாள் உடைமை வணிக அமைப்பை அறிந்து கொள்வார். | • தனியாள் உடைமை வணிகம்<br>• அறிமுகம்<br>• அடிப்படைப் பண்புகள்<br>• ஆரம்பித்தல்<br>• அனுகூலங்களும் வரையறைகளும் | • தனியாள் உடைமைகளின் அடிப்படைப் பண்புகளுக்கான உதாரணங்களை சுட்டிக் காட்டுவார்.<br>• தனியாள் உடைமை வணிகங்களை ஆரம்பிப்பதற்கான சட்டவிதிகளை விளக் குவார்.<br>• தனியாள் உடைமை வணிகங்களின் அனு கூலங்களையும், வரையறைகளையும் முன்வைப்பார். | 06 |
| | 6.3 பங்குடைமை வணிக அமைப்பை அறிந்து கொள்வார். | • பங்குடைமை வணிகம்<br>• அறிமுகம்<br>• அடிப்படைப் பண்புகள்<br>• ஆரம்பித்தல்<br>• அனுகூலங்களும், வரையறைகளும் | • பங்குடைமை வணிகத்தின் அடிப்படைப் பண்புகளுக்கான உதாரணங்களை முன்வைப்பார்.<br>• பங்குடைமை வணிகமொன்றை ஆரம்பிப் பதற்கான சட்டவிதிகளை முன்வைப்பார்.<br>• பங்குடைமை வணிகங்களில் காணப்படும் அனுகூலங்களையும், வறையறைகளை யும் முன்வைப்பார். | 06 |

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.4 கூட்டிணைக்கப் பட்ட கம்பனி களை அறிந்து கொள்வார். | • கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்<br>• அறிமுகம்<br>• அடிப்படைப் பண்புகள்<br>• வறையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகள்<br>• ஆரம்பித்தல்<br>• அனுகூலங்களும், வரையறைகளும் | • கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றின் அடிப்படைப் பண்புகளுக்கான உதார ணங்களை முன்வைப்பார்.<br>• வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளை ஆரம்பிப்பதற்கான சட்டவிதிகளை விளக்குவார்.<br>• வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளின் அனுகூலங்களையும், வரையறைகளை யும் முன்வைப்பார். | 06 |
| | 6.5 கட்டளையக வணிகத்தினை அறிந்துகொள்வார். | • கட்டளையக வணிகம்<br>• அறிமுகம்<br>• அடிப்படைப் பண்புகள்<br>• ஆரம்பித்தல்<br>• அனுகூலங்களும், வரையறைகளும் | • கட்டளையக வணிகத்தினது அடிப்படைப் பண்புகளை விளக்குவார்.<br>• கட்டளையக வணிகத்தினை ஆரம்பிப்பதற் குரிய சட்டவிதிகளை சுட்டிக் காட்டுவார்.<br>• கட்டளையக வணிகங்களில் காணப்படும் அனுகூலங்களையும், வரையறைகளையும் முன்வைப்பார். | 03 |

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 7.0 இலங்கையில் முயற்சியாண்மைக் கலாசாரமொன்று தோன்றுவதற்கான சந்தர்ப்பங்களைத் தேடியறிவார். | 7.1 இலங்கையில் முயற்சியாண்மைக் கலாசாரமொன்று உருவாவதில் காணப்படும் சந்தர்ப்பமும், அது தொடர்பாகக் காணப்படும் வரையறைகளையும் தேடியறிவார். | • இலங்கையின் முயற்சியாண்மைக் கலாசாரமொன்று உருவாவதற்காகக் காணப்படும் சந்தர்ப்பம்<br>• முயற்சியாண்மைக் கலாசாரம் - அறிமுகம்<br>• முயற்சியாண்மைக் கலாசாரமொன்று உருவாகுவதன் தேவைப்பாடு<br>• முயற்சியாண்மைக் கலாசாரமொன்றை உருவாகுவதற்குச் சாதகமாகக் காணப்படும் சமூக, பொருளாதாரக் காரணிகள்<br>  • நாட்டின் பொருளாதார, அரசியல் நிலைமை<br>  • அரசினதும், ஏனைய நிறுவனங்களினதும் ஊக்குவிப்புக்கள்<br>  • குடும்ப வணிகத்தை தொடர்ந்து நடாத்திச் செல்லல்<br>  • வளங்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய இயலுமை<br>  • பாரியளவான வணிகங்களால் கிடைக்கும் ஊக்குவிப்புக்கள்<br>  • முன்மாதிரியான நடத்தைகள்<br>  • பல்வேறு பிரிவினர்களினால் கிடைக்கும் ஊக்குவிப்புக்கள்<br>• முயற்சியாண்மையில் நாட்டம் ஏற்படுவதற்கு எதிராக ஏற்படும் சமூக ரீதியான காரணிகள் | • இலங்கையில் முயற்சியாண்மைக் கலாசாரமொன்றின் தேவைப்பாட்டிற்கான காரணங்களை சுட்டிக்காட்டுவார்.<br>• இலங்கையில் முயற்சியாண்மைக் கலாசாரமொன்று ஏற்படுவதில் தாக்கத்தை ஏற்படுத்தும் பொருளாதார சமூகக் காரணிகளுக்கான உதாரணங்களைச் சுட்டிக் காட்டுவார்.<br>• இலங்கையில் முயற்சியாண்மைக் கலாசாரமொன்று உருவாக்குவதற்குத் தடையாக இருக்கின்ற காரணிகளை விளக்குவார். | 21<br>06 |



xxiii

J 447/Ri

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 7.2 இலங்கையின் முயற்சியாண்மைக் கலாசார மொன்றை உருவாக்குவதில் பெண்களது வகிபங்கின் பங்களிப்பினை விமர்சிப்பார். | • முயற்சியாண்மை எனும் வகையில் பெண்களின் வகிபங்கு<br>• அறிமுகம்<br>• பெண்கள் வணிகங்களில் ஈடுபடுத்துவதற்கு முன்வருதலின் தேவைப்பாடும் அதற்கான வழிவகைகளும்<br>• முயற்சியாண்மை எனும் வகையில் பெண்களிடம் காணப்படும் பலங்கள்<br>• பெண்கள் வணிகங்களில் ஈடுபடலும் அது தொடர்பாகக் காணப்படும் தடைகளும் | • பெண்கள் முயற்சியாண்மையில் ஈடுபடு வதன் தேவைப்பாட்டினை உறுதிப்படுத்து வார்.<br>• முயற்சியாண்மைக் கருமங்களை மேற் கொள்வதற்காகப் பெண்களிடம் காணப் படும் பலன்களைக் கலந்துரையாடுவார்.<br>• பெண்கள் வணிகங்களில் ஈடுபடுவது தொடர்பாக இலங்கைச் சமூகத்தினுள் காணப்படும் வரையறைகளை உதாரணங் களுடன் சுட்டிக்காட்டுவார். | 06 |
| | 7.3 சமூக பொறுப்புக்கள் விழுமியங்களைப் பின்பற்றி சிறந்த முயற்சியாண்மைக் கலாசார மொன்றைக் கட்டியெழுப்புவதில் நாட்டம் ஏற்படுவதனைக் காட்சிப்படுத்துவார். | • வணிக சமூகப்பொறுப்புக்களும், வணிக விழுமியங்களும்<br>• அறிமுகம்<br>• வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்<br>• வணிகங்களில் சமூகப் பொறுப்புக் களையும் வணிக விழுமியங்களையும் பின்பற்றுவதன் முக்கியத்துவம் | • வணிக, சமூக பொறுப்புக்கள், விழுமியங் கள் தொடர்பாகச் சுயமான கருத்தினை விளக்குவார்.<br>• வணிகப் பொறுப்புக்களை நிறைவேற்று வதற்குக் கடப்பாடுள்ள பிரிவினர்களை உதாரணங்களுடன் விளக்குவார்.<br>• வணிகங்களில் சமூகப் பொறுப்புக்கள் விழுமியங்கள் பின்பற்றப்பட வேண்டியதன் தேவைப்பாட்டினை கலந்துரையாடுவார். | 03 |

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 7.4 புதிய வணிகங்களை ஆரம்பிப்பவர்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள், அவைகளது வேலைத் திட்டங்கள் என்பன தொடர்பாக தேடியறிதலில் நாட்டம் செலுத்துவதை வெளிப்படுத்துவார். | • புதிய வணிகங்களை ஆரம்பிக்கும் வணிகர்களுக்காக நடைமுறையில் காணப்படும் ஊக்குவிப்புக்களும், நிறுவனங்களும்<br>• அறிமுகமும் அதன் தேவைப்பாடும்<br>• ஊக்குவிப்பு வகைகள்<br>  • நிதி சார்ந்த<br>  • நிதி சாராத<br>• ஊக்குவிப்புக்களை வழங்கும் நிறுவனங்கள்<br>  • நிதி சார்ந்த ஊக்குவிப்புக்கள்<br>  • நிதி சாராத ஊக்குவிப்புக்கள் | • புதிய வணிகங்களுக்கான ஊக்குவிப்புக்களைப் பெற்றுக் கொள்வதன் தேவைப்பாட்டினைக் கலந்துரையாடுவார்.<br>• இலங்கையில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்படும் நிதி மற்றும் நிதி சாராத ஊக்குவிப்புக்களுக்கான உதாரணங்களை சமர்ப்பிப்பார்.<br>• இலங்கையில் முயற்சியாளர்களுக்கு நிதி மற்றும் நிதியல்லாத ஊக்குவிப்புக்களை வழங்கும் நிறுவனங்களுக்கான உதாரணங்களைக் குறிப்பிட்டுக் காட்டுவார். | 06 |
| | | | | 90 |





J 447/Ri

# கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கிற்கான ஆலோசனைகள்

**தேர்ச்சி 5.0** : வணிகமொன்றை ஆரம்பிப்பதற்காகத் திட்டமொன்றைத் தயாரிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 5.1** : வணிகமொன்றை ஆரம்பிப்பதற்காக வணிகத்திட்டத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவார்.

**பாடவேளைகள்** : 03

**கற்றல் பேறுகள்** : இத்தேர்ச்சி மட்டப் பாடவேளைகளின் இறுதியில் மாணவர்கள்,

- வணிகத் திட்டத்தை அறிந்து கொள்வார்.
- வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு வணிகத் திட்டமொன்றின் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடுவார்.
- வணிகத் திட்டமொன்றின் அடிப்படை அம்சங்களை விபரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :**

இத்தேர்ச்சி மட்டத்திற்குரிய பாடத்திட்டத்தின் பாட உள்ளடக்கத்தையும் அது தொடர்பில் பாட நூலிலுள்ள பாடவிடயங்கள் தொடர்பாகவும் சிறந்த விளக்கமொன்றினைப் பெற்றுக் கொள்ளவும். பின்னர், பின்வரும் ஆலோசனைகள் தொடர்பில் கவனஞ் செலுத்தவும்.

- இத்தேர்ச்சி மட்டத்திற்குரிய முதல் பாடத்தில் பிரவேசிக்கும்போது இணைப்பு 5.1.1 இல் உள்ளடக்கப்பட்டுள்ள வீட்டுத் திட்டத்தினை வகுப்பறைக்கு முன்வைக்கவும்.
- வீட்டுத் தோட்டத்திலும், வீட்டுப் பகுதிகளிலும் வீடொன்றை நிர்மாணிக்க முன்னர் அவ்வாறான திட்டமொன்றின் தேவைப்பாட்டினையும் மாணவர்களிடம் வினவியவாறு சிந்தனைக் கிளறலொன்றை மேற்கொள்ளவும்.
- முயற்சியாளரின் வணிகக் கருத்துக்களை, உண்மையான வணிகமொன்றை மாற்றி நடைமுறைப்படுத்துவதற்கு வணிகத் திட்டமானது தயாரிக்கப்படுகின்றது என்பதை மாணவர்களுக்கு உறுதிப்படுத்தவும்.
- மேற்குறிப்பிட்ட செயற்பாட்டின் பின்னர் வணிகத் திட்டத்தினை அறிமுகப்படுத்தி, வணிகமொன்றை ஆரம்பிக்கும்போது வணிகத் திட்டமொன்றின் முக்கியத்துவம் அதன் நன்மைகள் என்பவை தொடர்பில் மாணவர்கள் அறிந்து கொள்ள வழிகாட்டவும்.
- வணிகத் திட்டமொன்றில் உள்ளடங்கியுள்ள பின்வரும் அடிப்படை விடயங்கள் தொடர்பில் சுருக்கமான விளக்கமொன்றை வழங்கவும்.
  - நிறைவேற்றுச் சுருக்கம்
  - சந்தை ஆய்வு
  - சந்தைப்படுத்தல் திட்டம்
  - உற்பத்திக் கிரய மதிப்பீடு
  - நிர்வாகச் செயற்பாடு தொடர்பிலான மதிப்பீடு
  - நிதி மதிப்பீடு
- இணைப்பு 5.1.2 உள்ளடங்கியுள்ள குழுத்தேடல் அறிவுறுத்தல்களையும், இணணப்பு 5.1.3 இல் உள்ளடங்கியுள்ள விசேட பிரமுகரின் உரையினையும் பயன்படுத்தி மாணவர்களைத் தேடலில் ஈடுபடுத்த முடியும்.
- இத்தேர்ச்சி மட்டக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின்போது விடயம் சார்ந்த அல்லது கட்டமைப்புக் கட்டுரை வகையிலான வினாக்களையும் பயன்படுத்திப் பொருத்தமான மதிப்பீடுகளை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கவும்.

உதாரணம் : வணிகத் திட்டமொன்றின் நன்மைகளை முன்வைக்கவும்.
வணிகத் திட்டமொன்றின் அடிப்படை விடயங்களைப் பெயரிடவும்.

**முதன்மைப் பதங்கள் / எண்ணக்கரு :**

- வணிகத் திட்டமும் அதன் அடிப்படை மூலங்களும்.
- நிறைவேற்றுச் சுருக்கம்
- சந்தை ஆய்வு
- சந்தைப்படுத்தல் திட்டம்
- உற்பத்திக் கிரய மதிப்பீடு
- நிர்வாகச் செயற்பாடு தொடர்பான மதிப்பீடு
- நிதி மதிப்பீடு

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- தரம் 11 இன் பாடநூலில் குறித்த பாட அலகு
- இணைப்பு 5.1.1 வீட்டுத் திட்டத்தின் பிரதியொன்று
- இணைப்பு 5.1.2, 5.1.3 என்பவற்றின் பிரதிகள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- வணிகத் திட்டத்தை விளக்குவார்.
- வணிகத் திட்டமொன்றின் பயன்களைச் சுட்டிக்காட்டுவார்.
- வணிகத் திட்டமொன்றின் மூலங்களைப் பெயரிட்டு விளக்குவார்.

இணைப்பு 5.1.1

## வீட்டுத் திட்டம்



**இணைப்பு 5.1.2**

## குழுத் தேடியறிதலுக்கான ஆலோசனைகள்

- உங்களது குழுவிற்குக் கிடைத்த விசேட பிரமுகரின் உரையினை நன்றாக விளங்கிக் கொள்ளவும்
- அவ்வுரையினுள் குறிப்பிடப்பட்டவாறு வணிகத் திட்டமொன்றின் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்திக் காட்டுங்கள்.
- இவை தவிர்ந்த வணிகத் திட்டமொன்றில் காணக்கூடிய வேறு பயன்கள் காணப்படுமாயின் அவற்றினைக் குறிப்பிட்டுக் காட்டவும்.
- உரையில் உள்ளடக்கப்பட்டுள்ள தடித்த எழுத்துக்களால் அச்சிடப்பட்ட பதங்களை அல்லது சொற்றொடர்களை தொகுதிகளாக்குவதில் கவனஞ் செலுத்தவும்.
- அப்பதங்கள் அல்லது சொற்றொடர் தொகுதிகளின் மூலம் தெளிவுபடுத்தப்படும் விடயங்களினால் வெளிப்படுத்தப்படும் கருத்துக்களை விளக்கவும்.
- வணிகத் திட்டமொன்று தொடர்பாக விசேட பிரமுகர்களிடமிருந்து மேலும் விபரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டி இருக்கின்றது எனக் கருதும் விடயங்கள் ஏதுமிருப்பின் அவற்றைக் குறிப்பிட்டுக் காட்டவும்.
- உங்களது தேடியறிதல்களைப் பொருத்தமான வகையில் முழு வகுப்பிற்கும் முன்வைப்பதற்கு ஆயத்தமாகவும்.

இணைப்பு 5.1.3

### விசேட பிரமுகரின் உரை

பாடசாலை வணிகச் சங்கமொன்றினால் ஒழுங்குபடுத்தப்பட்ட வேலைத் திட்டமொன்றிற்கு விசேட பிரமுகராக வருகை தந்த வங்கி முகாமையாளரினால் ஆற்றப்பட்ட உரையிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட பகுதியொன்று கீழே தரப்படுகின்றது.

கடன் வழங்குவதே வங்கிகளின் பிரதான வணிகக் கருமமாக இருக்கின்றது. வணிக நடவடிக்கைகளுக்காகக் கடனைப் பெற்றுக் கொள்ள எங்களை நாடிவரும் அனேகமானவர்கள் தமது வணிகம் தொடர்பான திட்டமொன்றைக் கொண்டிருப்பதில்லை. நாம் வணிகத் திட்டத்தைப் பற்றிய சிறந்த விளக்கத்தைப் பெற்றதன் பின்னர் நிலைமைகளை மதிப்பீடு செய்தே கடன் வழங்குகின்றோம். வணிகத் திட்டத்தின் மூலம் எதற்காகக் கடன் தேவைப்படுகின்றது அக்கடன் தொகை வணிகத்தில் எவ்வாறு முதலீடு செய்யப்படுகின்றது, வணிகரினால் வணிக நடவடிக்கைகளுக்காக அவரது நிதியிலிருந்து எந்தளவிலான தொகை முதலீடு செய்யப்படுகின்றது, எக்காலப் பகுதியில் எத்துறைகளுக்கு கடன் தேவைப்படுகின்றது. வணிகத்தை நடாத்திச் செல்கையில் வணிகத்தினால் ஈட்டப்படும் உழைப்புக்களிலிருந்து எவ்வாறு கடன் மீளச் செலுத்தப்படுகின்றது என்பவைகள் தொடர்பில் நாம் கவனஞ் செலுத்துவோம். உண்மையில் கடனைப் பெற்றுக் கொள்வதற்கு மாத்திரமே வணிகத் திட்டம் பயனுள்ளதாக அமைகின்றது எனக் கருத முடியாது. ஆரம்பிக்கப்படும் வணிகமானது வெற்றிகரமானதாக உள்ளதா? முதலீட்டிற்குத் தேவையான உழைப்பினைப் பெற்றுள்ளதா? அதேபோன்று வணிகருக்குத் தனது வணிகம் தொடர்பில் சிறந்த நம்பிக்கை ஏற்படுகின்றதா? நாங்கள் வங்கியின் பக்கத்திலிருந்து நோக்கும்போது வணிகத் திட்டத்திற்கமைய வணிகம் நடாத்திச் செல்லப்படுகின்றதா? இவ்வாறான நிலையில் எங்களால் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய வேறு சேவைகள் இருக்கின்றனவா? போன்ற விபரங்களைத் தேடியறிவோம்.

உத்தேச வணிகம் தொடர்பாக சிறந்த எண்ணக்கருப் படமொன்றாக வணிகத் திட்டத்தினைக் குறிப்பிடலாம்.

அதேபோன்று வணிகத்தின் செல்நெறியினைக் காட்சிப்படுத்தும் படமொன்றாகக் காணப்படும் வீடொன்றை நிர்மாணிப்பதற்கு முன்னர் திட்டமொன்று வரையப்படும் என்பதனை நீங்கள் அறிவீர்கள். அதேபோன்றுதான் வணிகமொன்றை ஆரம்பிக்கும் போது எழுத்து வடிவில் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். ஆரம்பிக்கப்படும் **வணிகமானது அறிமுகப்படுத்தி விபரிக்கப்பட்டிருத்தல்** வேண்டும். தனது வணிகத்திற்கும் போட்டியாகவுள்ள வணிகர்களைக் குறிப்பிட்டு, அவர்களினால் உரிமைப்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள சந்தையின் பங்கு, அவர்களது வணிக உபாயங்கள், தனது வணிக உபாயங்கள் என்பனவற்றை உள்ளடக்கிச் **சந்தைப் பகுப்பாய்வொன்றில்** ஈடுபடுதல் வேண்டும். அடுத்து சந்தைப்படுத்துவதற்கு தான் எதிர்பார்க்கும் பொருள்கள் அல்லது சேவைகளது அளவுகளை மாதத்திற்கு அல்லது ஒரு வருடத்திற்கென்றவாறு காட்டி அலகொன்றிற்கான விற்பனை விலையைக் குறிப்பிட்டு மாதத்திற்கு அல்லது ஒரு வருடத்திற்கான விற்பனைப் பெறுமானங்களைக் குறிப்பிட்டு **விற்பனைத் திட்டத்தினைத்** தயாரித்தல் வேண்டும். அதன் பின்னர் விற்பதற்கு எதிர்பார்க்கப்படும் பொருள்கள் அல்லது சேவைகளது அளவுகளை உற்பத்தி செய்வதற்கு ஏற்படும் செலவுகளை உள்ளடக்கியதான **உற்பத்தித் திட்டத்தினைத்** தயாரித்தல் வேண்டும். வணிகமானது நிர்வாகக் கருமங்களுக்காக ஏற்படும் செலவுகளைக் கருத்திற் கொண்டு **நிருவாகச் செலவுகளடங்கிய** மதிப்பீடொன்றை உள்ளடக்குதல் வேண்டும். பின்னர் வணிகத்தினால் எதிர்பார்க்கும் செலவுகள், வருமானங்களைக் கருத்திற் கொண்டு **வருமானக் கூற்றொன்றைத்** தயாரித்து அதனையும் வணிகத் திட்டத்தினுள் உள்ளடக்குதல் வேண்டும். இறுதியாக வணிகரின் விபரங்கள் வணிகத்தின் பெயர், உத்தேசக் கடன் பெறுமானம், முதலீட்டிற்கான உழைப்பு என்பனவற்றினைச் சுருக்கமொன்றாகக் காட்டுதல் வேண்டும்.

வணிகத் திட்டமானது வணிகமொன்றை ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்திற்கு மட்டுமன்றி தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் வணிகமொன்றை நவீனமயப்படுத்துவதற்கு தேவைப்படும் கடனைப் பெற்றுக் கொள்வதற்கும் பயனுடையதாக அமையும். வணிகங்களை ஆரம்பிக்கும் அநேகருக்கு வணிகத் திட்டம் தயாரித்தல் தொடர்பான விளக்கமொன்றில்லாதிருத்தல் கூடும். ஆயினும், வணிகத் திட்டங்களைத் தயாரித்து வழங்குவதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கும் தொழில்சார் நிறுவனங்களும் இருக்கின்றன. அவற்றிலிருந்தும் தமக்கும் தேவையான சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**தேர்ச்சி 5.0** : வணிகமொன்றை ஆரம்பிப்பதற்காகத் திட்டமொன்றைத் தயாரிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 5.2 :** வணிக வாய்ப்பிற்காக சந்தைப்படுத்தல் திட்டமொன்றைத் தயாரிப்பார்.

**பாடவேளைகள்** : 09

**கற்றல் பேறுகள்** : இத்தேர்ச்சி மட்டப் பாடவேளைகளின் இறுதியில் மாணவர்கள்,

- சந்தைப்படுத்தல் திட்டமொன்றைத் தயாரிப்பதற்குத் தேவையான சந்தைத் தகவல்களை முன்வைப்பார்.
- சந்தைப்படுத்தல் உபாய வழிமுறைகளை உதாரணங்கள் மூலம் விளக்குவார்.
- வழங்கப்பட்ட சந்தைத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விற்பனை மதிப்பீட்டினை மேற்கொள்வார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :

இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாடத்திட்டத்திலுள்ள பாட உள்ளடக்கத்தினையும் அதனுடன் இணைந்த பாட விடயங்கள் தொடர்பிலும் சிறந்த தெளிவினைப் பெற்றுக் கொள்ளவும். பின்னர் பின்வரும் ஆலோசனை தொடர்பில் கவனஞ் செலுத்தவும்.

இத்தேர்ச்சி மட்டத்தினடிப்படையில் முதல் பாடத்தில் பிரவேசிக்கும் போது ‘‘மீன் பாட்டு ‘‘ எனும் பாடலை வகுப்பில் முன்வைத்து அதில் உள்ளடக்கப்பட்டுள்ள வணிகம் தொடர்பிலான பின்வரும் விடயங்களை வெளிக்கொணரச் செய்யவும். அல்லது கீழே குறிப்பிடப்பட்ட அரும்பொருட் பதங்களின் எண்ணக்கருக்களை வெளிப்படுத்திக் கொள்ளக்கூடியவாறு நீங்கள் அறிந்த கவிதையொன்றை அல்லது கதையொன்றை முன்வைக்க முடியும்.

- பண்டங்கள்
- சந்தை
- நுகர்வோர்
- விற்பனைப் பிரதேசம்
- விற்பனையை அதிகரித்துக் கொள்வதற்கான உபாய வழிமுறைகள்.

- மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கிடையே சந்தைப்படுத்தல் திட்டமொன்றை அறிமுகப்படுத்தி அதில் உள்ளடக்கப்படும் தகவல்கள் தொடர்பில் மாணவர்கள் அறியச் செய்யவும்.
- சந்தைப்படுத்தல் திட்டமொன்றைத் தயாரிப்பது தொடர்பில் முயற்சியாளர் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குச் சந்தை ஆய்வொன்றினை (தேடியறிதல் மூலம்) மேற்கொள்ள வேண்டுமென்பதை விளக்கவும்.
- இத்தேர்ச்சி மட்டத்திற்குரிய அடிப்படை எண்ணக்கருக்களை இனங்காண்பதற்காக 5.2.1 குழுத் தேடியறிதல் ஆலோசனைப் படிவத்தைப் பயன்படுத்தி மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடச் செய்யவும்.
- இத்தேர்ச்சி மட்டத்தின் அடிப்படையில் சந்தைப்படுத்தல் திட்டமொன்று மாணவர்களால் தயாரிக்கப்படல் வேண்டும்.
- இதற்கான பயிற்சியொன்றைச் செய்வதற்கு ஆலோசனைப் படிவத்தையும், இணைப்பு 5.2.3 இல் உள்ளடக்கப்பட்டுள்ள ‘‘சொப்ட் டொய்ஸ்’’ வணிகத்தின் சந்தைப்படுத்தல் திட்டமொன்றையும் மாணவர்களுக்கு வழங்கி செயற்பாட்டில் ஈடுபடச் செய்யவும்.

- மாணவர்கள் ‘‘சொப்ட்டொய்ஸ் ‘‘ வணிகத்தின் சந்தைப்படுத்தல் திட்டம் தொடர்பான தகவல்களைப் பெற்று அவர்கள் தமது சுயஉற்பத்திப் பொருளிற்கான சந்தைப்படுத்தல் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான விளக்கத்தினைப் பெற்றுக் கொடுத்து செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.
- இத்தேர்ச்சி மட்டம் தொடர்பிலான கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டிற்கான விடயம் சார்ந்த அல்லது கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகையிலான வினாக்களைப் பயன்படுத்திப் பொருத்தமான மதிப்பீட்டினை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கவும்.

  உதாரணம் : சந்தைப்படுத்தல் திட்டமொன்றைத் தயாரிக்கும் போது அதில் உள்ளடக்கப்படுகின்ற சந்தைப்படுத்தல் செலவுகள் தொடர்பான பட்டியலொன்றைத் தயாரிக்கவும்.
- உற்பத்திப் பொருளொன்றின் விற்பனையை மேம்படுத்துவதற்காக சிற்றளவு வணிகரொருவர் எடுக்க வேண்டிய வழிமுறைகளைக் குறிப்பிட்டுக் காட்டவும்.
- உங்களது பிரதேசத்தில் செயற்பட்டுவரும் பின்வரும் வணிகங்களின் விற்பனையை அதிகரிப்பதற்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள உபாய வழிமுறைகளை முன்வைக்கவும்.

  உதாரணம் :
  - சொத்து விற்பனை
  - மேலதிக வகுப்புக்கள்
  - வெதுப்பக உற்பத்திகள்

**முதன்மைப் பதங்கள் / எண்ணக்கரு : :**

- சந்தை
- உற்பத்திப் பொருள்
- போட்டித்தன்மை
- சந்தைப்படுத்தல் உபாய வழிமுறைகள் ( உற்பத்திப் பொருள், விலை, இடம், மேம்படுத்தல்)
- விற்பனை எதிர்வுகூறல்
- விற்பனை வருமானம்
- விற்பனைச் செலவுகள்
- விற்பனையை மேற்கொள்வதற்கான நடைமுறையல்லாச் சொத்துக்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- தரம் 11 பாடநூலின் குறித்த பாட அலகு
- இணைப்பு 5.2.1 குழுத் தேடியறிதல் ஆலோசனைப் படிவம்
- இணைப்பு 5.2.2 குழுத் தேடியறிதல் ஆலோசனைப் படிவம்
- இணைப்பு 5.2.3 சொப்ட் டொய்ஸ் வணிகத்தின் சந்தைப்படுத்தல் திட்டம்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- உத்தேச வணிகமொன்றிற்கான சந்தைப்படுத்தல் திட்டமொன்றைத் தயாரிப்பார்.
- வழங்கப்பட்ட உற்பத்திப் பொருளொன்றிற்குப் பொருத்தமான சந்தைப்படுத்தல் உபாய வழிமுறைகளைத் தீர்மானிப்பார்.
- சந்தைப்படுத்தல் திட்டமொன்றைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை முன்வைப்பார்.

## குழுத் தேடியறிதலுக்கான ஆலோசனைகள்

## "திருமண உற்வசம் "

- உங்களது தலைப்புத் தொடர்பாக வெளிப்படுத்தக்கூடிய வணிகச் சந்தர்ப்பங்களை கலந்துரையாடலினூடாகத் தீர்மானித்து அச்சந்தர்ப்பங்களை எழுதிக் காட்டுங்கள்.
- அவ்வணிகச் சந்தர்ப்பங்களிலிருந்து வணிகமொன்றை மேற்கொள்வதற்குப் பொருத்தமானது எனத் தீர்மானிக்கக்கூடிய வணிக சந்தர்ப்பமொன்றைத் தெரிவு செய்யவும்.
- அவ்வணிகச் சந்தர்ப்பத்திற்கமைய உங்களால் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் பொருள் அல்லது சேவைகளை உறுதியாகப் பெயரிட்டு அவற்றினை அறிமுகப்படுத்துங்கள்.
- நீங்கள் அப்பொருள் அல்லது சேவையை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் பிரிவினர்களை (நுகர்வோர் குழு) விபரிக்கவும். (உதாரணம் : வயது, பால், வருமானம், தொழில்)
- அப்பிரிவினர்கள் பூகோள ரீதியில் பரம்பியுள்ள விதத்தினை விளக்கவும் (பிரதேச ரீதியாக, நகர ரீதியாக )
- அந்நுகர்வோர்கள் அப்பொருட்களை அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்யும் முறை எவ்வாறு என்பதனை (உதாரணம் : இடையிடையே, நாளாந்தம் தேவைப்படும் போது மட்டும், எப்போதாவது ஒரு நாளில் மட்டும் ) விளக்கவும்.
- உங்களால் முன்வைப்பதற்கு உத்தேசிக்கும் பொருள் அல்லது சேவைகளைத் தற்போது நுகர்வோர் யாரிடமிருந்து பெற்றுக் கொள்கின்றனர்? எவ்வெவ் இடங்களிலிருந்து?
- நுகர்வோருக்கு எந்தளவிலான பொருட்கள் அல்லது சேவைகள் வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது? (நாளொன்றிக்கு / வாரமொன்றிற்கு / மாதமொன்றிற்கு)
- உங்களது பொருள் அல்லது சேவையை நுகர்வோர் எவ்வாறு கொள்வனவு செய்வதற்குச் சந்தர்ப்பமளிக்கப்பட்டுள்ளது.
- அந்நுகர்வோருக்கு உங்களது பொருள் அல்லது சேவையின் மீது ஈர்ப்பை ஏற்படுத்துவதற்கு உங்களால் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் எவை?
- உங்களது தேடியறிதல்களை முழு வகுப்பிற்கும் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும் / ஆயத்தமாகவும்.

## குழுத் தேடியறிதலுக்கான ஆலோசனைகள்

- பின்வரும் தலைப்புக்களிலிருந்து உங்களுக்குக் கிடைத்துள்ள தலைப்பின் மீது கவனத்தைச் செலுத்தவும்.
    - பாடசாலைப் புத்தகப் பை
    - வாழ்த்து அட்டைகள்
- சொப்ட் டொயிஸ் வணிகத்தின் விற்பனைத் திட்டத்தினை விளங்கிக் கொள்ளவும்.
- உங்களது தலைப்பிற்குரிய சந்தைப்படுத்தல் திட்டத்தைத் தயரிப்பதற்குப் பின்வரும் விடயங்கள் தொடர்பிலான குழுக் கலந்துரையாடலொன்றைக் கட்டியெழுப்புங்கள்.
    - உற்பத்திப் பொருள்
    - இலக்கு நுகர்வோர் குழு
    - இலக்கு சந்தைப் பிரவேசம்
    - போட்டியாளர்களும், அவர்களது சந்தைப் பங்கும்
    - போட்டியாளர்களின் சந்தைப்படுத்தல் உபாய வழிமுறைகள்
    - தனது சந்தைப்படுத்தல் உபாய வழிமுறைகள்
    - உத்தேச விற்பனைத் தொகைகளும், அவற்றின் பெறுமானங்களும் மாதாந்தம் வருடாந்தம் எனும் வகையில்
    - உத்தேச விற்பனைப் புரள்வு மாதாந்தம், வருடாந்தம் எனும் வகையில்
    - உத்தேச விற்பனைச் செலவுகள் மாதாந்தம், வருடாந்தம் எனும் வகையில்
- கலந்துரையாடலினூடாக வெளிப்படுத்திய தகவல்களை மேற்காட்டிய தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கவும்.
- உங்களது தேடியறிதல்களைப் பொருத்தமான முறையில் முழு வகுப்பிற்கும் முன்வைப்பதற்கு ஆயத்தமாகவும்.


**உத்தேச சொப்ட் டொய்ஸ்
வணிகத்தின் சந்தைப்படுத்தல் திட்டம்.**

- உற்பத்தி - அலங்காரப் பண்டாக்கள் (Panda)
- இலக்கு நுகர்வோர் - அலங்காரச் செல்லப் பிராணிகள் மீது அன்பு செலுத்தும் பெண்களும், பிள்ளைகளும்.
- சந்தை - கேகாலை மாவட்டத்தில் அலங்காரப் Panda க்களுக்கு
- புவியியல் பிரதேசம் - கேகாலை மாவட்டத்தின் உத்தேச புவியியல் அதிககாரத்திற்குட்பட்ட பிரதேசம்

**போட்டியாளர்களும் அவர்களின் சந்தைப்பங்கும்.**

- சந்தைப்படுத்தல் உபாய வழிமுறைகள்

சஜி டொய்ஸ் - 20%
சொப்ட் டொய்ஸ் - 20%
ஏனைய வழங்குநர்கள் - 60%




| | போட்டியாளர்கள் | சொப்ட் டொய்ஸ் |
|---|---|---|
| உற்பத்திப் பொருள் | துணியையும் பஞ்சினையும் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட பண்டாக்கள் (Panda) | துணி, பஞ்சு ஆகியவற்றைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட அலங்காரப் பண்டாக்கள் (Panda) |
| விலை | உற்பத்திக் கிரயத்தின் அடிப்படையில் இலாப வீதம் சேர்க்கப்பட்டு வரும் விலை. | போட்டியாளர்களின் விலைக்கு அண்மியதாக குறைந்தபட்ச அலகு விலை ரூபா 300 |
| இடம் - விநியோகம் | சில்லறை வியாபாரிகள் மூலம் காட்சிப்படுத்தப்பட்ட வாகனத்தின் மூலம் ( வாராந்த சந்தைகளில்) | அலங்காரப் பொருட்கள் விற்பனை செய்யும் விற்பனை நிலைய உரிமையாளர் மூலம் நுகர்வோருக்கு விநியோகித்தல். |
| மேம்படுத்தல் | வியாபாரக் கழிவு வழங்கல் விளம்பரப் பலகைகள் | விற்பனை நிலையங்களில் பண்டாக்கலைக் காட்சிப்படுத்தல் எண்மான முறையில் அச்சிடப்பட்ட பதாதைகளின் கண்காட்சி. |

**விற்பனை அலகுகளின் எண்ணிக்கை**

| **உற்பத்திப்பொருள்** | **மாதாந்த உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை** | **வருடாந்த உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| துணி, பஞ்சு என்பனவற்றைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட பண்டாக்கள்(Panda) | 3,000 | 36,000 |

- **விற்பனைப் புரள்வு**

| **உற்பத்திப் பொருள்** | **மாதாந்த விற்பனை அலகுகள்** | **அலகொன்றின் விற்பனை விலை ரூபா** | **மொத்தப் புரள்வு ரூபா** | |
|---|---|---|---|---|
| | | | **மாதாந்தம்** | **வருடாந்தம்** |
| துணி, பஞ்சு என்பவற்றைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட பண்டாக்கள் **(Panda)** | **3,000** | **ரூபா 300** | **900,000** | 10,800,00.00 |

- சந்தைப்படுத்தல் செலவுகள் (விற்பனை விநியோகச் செலவுகள்)

| **உருப்படிகள்** | **மாதாந்த செலவுகள் (ரூபா)** | **வருடத்திற்கானசெலவுகள் (ரூபா)** |
|---|---|---|
| விநியோகச் செலவுகள் | 12,000 | 144,000 |
| விளம்பரச் செலவுகள் | 15,000 | 180,000 |
| எரிபொருள்கள் | 5,000 | 60,000 |
| முச்சக்கர வண்டி - | 4,000 | 48,000 |
| மொத்தம் | 36,000 | 432,000 |

- விற்பனையை மேற்கொள்வதற்குரிய நடைமுறையல்லாத சொத்துக்கள்
  முச்சக்கர வண்டி ரூபா 480,000

**தேர்ச்சி 5.0** : வணிகமொன்றை ஆரம்பிப்பதற்காகத் திட்டமொன்றைத் தயாரிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 5.3:** பாதிப்படைந்த விற்பனையைக் கருத்திற் கொண்டு உற்பத்திக் கிரயத் திட்டத்தினைத் தயாரிப்பார்.

**பாடவேளைகள்** : 09

**கற்றல் பேறுகள்** : இத்தேர்ச்சி மட்டப் பாடவேளைகளின் இறுதியில் மாணவர்கள்,

- உற்பத்திக்குத் தேவையான வளங்களை உதாரணங்களுடன் விளக்குவார்
- உத்தேச உற்பத்திக்குத் தேவையான உள்ளீடுகளின் பெறுமதியினைக் கணிப்பிடுவார்.
- உத்தேச உற்பத்தியொன்றின் மொத்த உற்பத்திக் கிரயத்தினை மதிப்பிட்டு அலகுக் கிரயத்தினை கணிப்பிடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :**

இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாடத்திட்டத்தின்படி பாட உள்ளடக்கம் தொடர்பிலும் அதனுடன் இணைந்த பாடப் புத்தகத்திலுள்ள விடயங்கள் தொடர்பிலும் சிறந்த தெளிவினைப் பெற்றுக் கொள்ளவும்.

அதன் பின்னர் பின்வரும் ஆலோசனைகள் மீது கவனஞ் செலுத்தவும்.

- இத்தேர்ச்சி மட்டத்தினடிப்படையில் முதலாவதாகப் பாடத்தில் பிரவேசிக்கும் போது இலகுவாகக் கிடைக்கக்கூடிய அருமையுடைய பொருட்கள் சிலவற்றை அனைத்து மாணவர்களுக்கும் கிடைக்கக் கூடியவாறு பெற்றுக் கொடுக்கவும்.
    - கடதாசித் துண்டு
    - உறிஞ்சும் குழாய் (Straw)
    - டிமைத்தாள்
    - கை துடைக்கும் தாள்
    - கடின கடதாசி அட்டைத் தட்டு
    - கடின கடதாசி அட்டை
    - வெற்றுப் பேனை வழங்குதல்
- அப்பொருட்களை ஒவ்வொரு மாணவர்களுக்கும் வழங்கி அவற்றைப் பயன்படுத்தி ஏதாவதொன்றை உருவாக்குவதற்கான ஆலோசனையை வழங்கி அச்செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.
- மாணவர்களது வெளியீடுகளை அடிப்படையாகக் கொண்டு உற்பத்திக்குத் தேவையான பின்வரும் உருப்படிகள் தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடலொன்றை நடாத்தவும்.

    உதாரணம் :
    - மூலப்பொருட்களும், அதற்கான கிரயமும்
    - கூலியும் ஊழியக் கிரயமும்
    - உள்ளீட்டிற்கும் வெளியீட்டிற்குமிடையிலான தொடர்பு
    - நடைமுறையல்லாத சொத்துக்கள்
    - உற்பத்திக்குச் செலவிடப்பட்ட ஏனைய செலவுகள் (வெளிச்சம், காற்று)
    - உற்பத்திக் கிரயம்
- உற்பத்திக் கிரய மதிப்பீட்டிற்குரிய எண்ணக்கரு தொடர்பாக மேலும் அனுபவங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு கடதாசித் தாள்களைப் பயன்படுத்தித் தொப்பி செய்யும் விளையாட்டு முன்மொழியப்படுகின்றது. கடதாசித் தாள்களின் மூலம் தொப்பி செய்யும் விளையாட்டுத் தொடர்பிலான ஆலோசனைகள் இணைப்பு 5.3.1இல் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பிலான சிறந்த விளக்கத்தினை ஆசிரியர் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

- மாணவர்களை உத்தேச விளையாட்டில் ஈடுபடச் செய்ததன் பின்னர் உற்பத்திக்குரிய மேலே குறிப்பிட்ட எண்ணக்கருவை மேலும் உறுதிப்படுத்தச் செய்யவும்.
- அவ்வாறின்றேல் இதற்காக இணைப்பு 5.3.2 இல் உள்ளடக்கப்பட்டுள்ள உற்பத்தி விளையாட்டினையும் பயன்படுத்திக் கொள்ள முடியும்.
- விளையாட்டின் பின்னர் இணைப்பு 5.3.3 இல் உள்ள குழுத் தேடியறிதல் ஆலோசனைப் படிவத்தையும் இணைப்பு 5.3.4 இல் உள்ள பிரியா தளபாட உற்பத்தி நிறுவனத்தின் நிகழ்வினையும் மாணவர்களுக்கு வழங்கிக் குழுத் தேடலில் அவர்களை ஈடுபடச் செய்யவும்.
- பிரியா தளபாட உற்பத்தியாளர்கள் எனும் வணிகத்தின் உற்பத்தித் திட்டத்தின் செயற்பாட்டுத் தகவல்கள் மூலம் தயாரிக்கக்கூடிய உற்பத்திக் கிரய மதிப்பீடொன்று கீழே தரப்பட்டுள்ளது.

**உற்பத்திக் கிரயக் கணிப்பீடு**

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| **மூலப் பொருட்கள்** | | |
| விறகு 1000 அடி | 15,000 | |
| ஆணி 2 கிலோ கிராம் | 500 | |
| நிறப் பூச்சு 2 லீற்றர் | 1,500 | |
| ஏனைய பொருட்கள் | 2,500 | |
| | | 19,500 |
| **கூலி** | | |
| தச்சுத் தொழிலாளி 01 | 20,000 | |
| உதவியாளர்கள் 02 (11,000) | 22,000 | |
| | | 42,000 |
| **உற்பத்திக்கான ஏனைய செலவுகள்** | | |
| தொழிற்சாலை மின்சாரம் | 1,000 | |
| தொழிற்சாலை வாடகை | 4,000 | |
| இயந்திரப் பராமரிப்பும் பழுதுபார்த்தலும் | 2,000 | |
| தொழிற்சாலைச் சுத்திகரிப்பு | 500 | |
| இயந்திர உபகரணத் தேய்வு | 1,000 | 8,500 |
| மொத்த உற்பத்திக் கிரயம் | | 70,000 |

அலகொன்றிற்கான கிரயம் $= \dfrac{\text{மொத்த உற்பத்திக் கிரயம்}}{\text{உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை}}$ $\dfrac{70000}{200} = 350$

இத்தேர்ச்சி மட்டத்திற்குரிய கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் விடயம் சார்ந்த அல்லது கட்டமைக்கப்பட்ட கட்டுரை வினாக்களைப் பயன்படுத்திப் பொருத்தமான மதிப்பீடுகளை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கவும்.

உதாரணம் :

தினந்தோறும் பகலுணவிற்காக உணவுப் பொதிகளை விற்பனை செய்யும் தனது வணிகமொன்றின் உத்தேச தகவல்கள் பின்வருமாறு :

- உணவுப் பொதிகளை வழங்குவதற்குத் தேவையான பொருட்கள்

| | ரூபா |
|---|---|
| சம்பா அரிசி 8 கிலோ கிராம் (1 கிலோ கிராம் ரூபா 75) | 600 |
| காய்கறிகள் | 800 |
| மீன் (3 கிலோ கிராம் - 1 கிலோ கிராம் ரூபா 400) | 1,200 |
| ஏனைய பொருட்கள் | 1,000 |
| தேங்காய் 05 ( ஒன்று ரூபா 50 படி) | 250 |
| எரிபொருள் | 500 |
| உணவு தயாரிப்பவரின் சம்பளம் | 500 |

- மொத்த உற்பத்திக் கிரயம்
- அலகுக் கிரயம் என்பவற்றைக் கணிக்கவும்.

**முதன்மைப் பதங்கள் / எண்ணக்கரு :**

- உள்ளீடுகள், வெளியீடுகளுக்கிடையிலான தொடர்புகள்
- நடைமுறையல்லாத சொத்துக்கள்.
- உற்பத்திப் பொது மேந்தலைக் கிரயம்
- உற்பத்திக் கிரயம்
- அலகுக் கிரயம்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- தரம் 11 இற்கான பாடநூலின் குறித்த பாட அலகு
- பிரவேசிப்பதற்காக உத்தேச செயற்பாட்டிற்குத் தேவையான பொருட்கள்
- 5.3.3 குழுத் தேடியறிதல் அறிவுறுத்தல் பத்திரம்
- 5.3.4 பிரியா தளபாட வணிகத்தின் விடய ஆய்வுக்குத் தேவையான பிரதிகள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- உற்பத்திக் கிரய மதிப்பீடொன்றைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை முன்வைப்பார்.
- உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை மொத்தக் கிரயம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு உற்பத்தி அலகுக் கிரயத்தைக் கணிப்பிடுவார்.
- வழங்கப்பட்ட தகவல்களினூடாக உற்பத்திக் கிரய மதிப்பீட்டினைத் தயாரிப்பார்.

## தொப்பியை உருவாக்கும் வணிக விளையாட்டில் ஈடுபடுவதற்கான ஆலோசனைகள்

- மாணவர்களை இரு குழுக்களாக அல்லது அதனைவிக் கூடிய குழுக்களாக உற்பத்தியில் ஈடுபடச் செய்யவும்.
- பின்வரும் விளையாட்டிற்கான இடத்தை வகுப்பறையில் உருவாக்கிக் கொள்ளுங்கள்.
    - வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான இடமொன்று
    - மூலப் பொருட்களை வழங்குவதற்கும் முடிவுப்பொருட்களை கொள்வனவு செய்வதற்குமான இடமொன்று
- ஒவ்வொரு குழுக்களிலிருந்தும் சுயமாக முன்வரும் இரு மாணவர்கள் வீதம் தெரிவு செய்து மேற்காட்டிய இடங்களில் செயற்பாட்டில் ஈடுபடச் செய்யவும். மாணவர்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லாதிருப்பின் ஆசிரியர் மேற்காட்டிய செயற்பாட்டில் ஈடுபடவும்.
    - உற்பத்திக் குழுக்களுக்கு வங்கிக் கடனைப் பெற்றுக் கொடுத்தல் அவ்வாறு வழங்கப்பட்ட கடன் வட்டி என்பவற்றை அறவிட்டுக் கொள்ளுதல், உற்பத்தித் துறையினரால் வழங்கப்படும் பற்றுச்சீட்டுக்களுக்கான பண செலுத்துதலும், அவற்றை அறிக்கைப்படுத்தலும்.
    - மூலப்பொருள் வழங்கல், முடிவுப்பொருட்களை கொள்வனவு செய்யும் இடம் ஒவ்வொரு குழுவிற்கும் மூலப்பொருட்களை விற்பனை செய்தல் ஒவ்வொரு
    - குழுவினாலும் உற்பத்தி செய்யப்பட்ட தொப்பிகளது தரத்தைப் பரிசீலனை செய்து கொள்வனவு செய்தலும் அதனை அறிக்கைப்படுத்தலும்,

**தொப்பி செய்யும் விளையாட்டிற்கான பொதுவான ஆலோசனைகள்.**

- ஒவ்வொரு குழுவிற்கும் விளையாட்டிற்குகாக மூன்று சந்தர்ப்பங்கள் வழங்கப்படும். ஒவ்வொரு குழுவிற்கும் உச்சத்தொகையாக ரூபா 200 வழங்கப்படுவதுடன், மூன்று சுற்றுக்களாக போட்டி நடைபெறும். மூன்றாம் சுற்றின் இறுதியில் கடன் பணத்தை வட்டியுடன் வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும். கடன்தொகைக்கான வட்டி முழுக் காலத்திற்கும் 10% ஆகும். ஒரு அலகு மூலப்பொருளை ரூபா 40/= ப்படி கொள்வனவு செய்ய முடியும்.
- தொப்பியை விற்பனைசெய்தல்- தரமான தொப்பியொன்றின் உச்சவிலை ரூபா 80 ஆகும். தரம் குறைவாக இருப்பின் ரூபா 60 வீதம் விற்பனை செய்யலாம்.
- ஒரு சுற்றிற்கு 03 நிமிடங்களை மாத்திரம் பயன்படுத்தலாம்.
- மூலப்பொருள் வழங்கல் பிரிவுக்கு 25 A4 தாள்களை நான்கு துண்டுகளாக வெட்டி 100 மூலப்பொருள் வகை வழங்கவும்.
- ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு போட்டியைப் பிரதிநிதித்துப்படுத்தும் வகையில் காசு அறிக்கைப்படுத்தலைத் தடுத்தல் வேண்டும்.
- வங்கி நடவடிக்கைகளுக்குத் தேவையான அளவான மாதிரிகள் அல்லது 5,10,50 எனும் வகையில் கடதாசித் துண்டங்களில் எழுதப்பட்ட பணத்தினை வங்கிக்கு வழங்கவும்.
- மூலப்பொருட்களை விநியோகிக்கும்போதும், கொள்வனவு செய்யும்போதும், அப்பிரிவினால் உறுதிச்சீட்டொன்று வழங்க வேண்டியிருப்பதுடன், அதற்குரிய கொடுப்பனவுக்கான பணத்தினை வங்கியினூடாகப் பெற்றுக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கவும்.

- போட்டி நடைபெறுவதற்கு முன்னர் மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு 05 நிமிடங்களும் வணிக நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்காக 2 நிமிடங்களும் முடிவுப்பொருட்களை விற்பனை செய்வதற்கு 02 நிமிடங்களும் வழங்கவும்.
- ஒவ்வொரு உற்பத்திக் குழுவும் தமக்குரிய காசு அறிக்கையினைத் தயாரித்தல் வேண்டும்.
- பின்வரும் வகையில் தொப்பியினை உற்பத்தி செய்து தரத்தினைப் பரிசீலனை செய்யும் முறையை முழு வகுப்பிற்கும் காட்சிப்படுத்திக் காட்டவும்.
- A4 அளவிலான புகைப்படப் பிரதித் தாளொன்றின் 1/4 பங்கினை மூலப்பொருள் அலகொன்றாக பயன்படுத்தவும். பயன்படுத்திய தாளில் 1/3 பங்கிற்கு மூலப்பொருள் அலகொன்றாக அடையாளப்படுத்தி அப்பகுதியை மடிக்கவும்.

  - மடிக்கப்பட்ட விழிப்புகள் வெளியில் இருக்கும் வகையில் கடதாசித் தாளை சுற்றி, பிரிந்துவிடாத வகையில் ஒன்றுடன் ஒன்றைத் தொடர்புபடுத்தவும்.
  - மடிக்கப்பட்ட தொப்பியின் பகுதியினை மேசையினைத் தொடும் வகையில் தட்டிப்பார்த்து அது பிரிந்து விடாது உள்ளதை உறுதிப்படுத்தி, அதன் தரத்தைப் பரிசீலிக்கவும்.
- முன்மாதிரிச் செயற்பாட்டின் இறுதியில் வகுப்பைச் சிறிய குழுக்களாகப் பிரிக்கவும்.
- குழுக்களுக்கு 5 அலகுகள் வீதம் மூலப்பொருட்களை வழங்கி, தொப்பியொன்றைத் தயாரித்து அதன் தரத்தினைப் பரிசீலிப்பதற்கு முன்மாதிரியொன்றை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவும்.

***கவனிக்கவும்.***

- இவ்விளையாட்டில் ஈடுபடுத்துவதற்குப் பொதுவாக ஒரு குழுவில் ஆகக் குறைந்தது இரு உறுப்பினர்களாவது இருத்தல் வேண்டும்.
- இவ்விளையாட்டில் ஈடுபடும் அதேவேளை, காசு தொடர்பில் பதிவு செய்தல், இருப்பு தொடர்பில் இருப்பு அறிக்கை வைத்திருத்தல் என்பவற்றில் ஈடுபடல் வேண்டும்.
- உரியவாறு அறிக்கைகளைப் பேணுவதற்கு மாணவர்களை ஊக்கப்படுத்தவும்.

**இணைப்பு 5.3.2**

## உற்பத்தி விளையாட்டு (தொப்பி தயாரித்தல் விளையாட்டிற்குப் பிரதியீடொன்றாக)

- வகுப்பைச் சிறிய இரு குழுக்களாக அல்லது அதனை விடக்கூடிய குழுக்களாகப் பிரிக்கவும்.
- உங்களது பிரதேசத்திலிருந்து இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய நான்கு வகைப் பொருட்களைத் தெரிவு செய்யவும்.
- உற்பத்தி விளையாட்டிற்குப் பொதுவாகத் தேவைப்படக்கூடிய மேலதிக பொருள்களை வழங்கவும் (உதாரணம் : ஒட்டுதல் பொருட்கள், கத்தரிக்கோல் போன்றவைகள்) அவற்றைத் தேவையான குழுக்களுக்குத் தேவைக்கேற்பப் பெற்றுக் கொள்ளக்கூடியவாறு அருகில் வைக்கவும்.
- பொருட்களின் தொகுதியொன்று வீதம் குழுக்களுக்கு வழங்கவும் (பொருட்கள் சமஅளவில் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை)

- **உத்தேச பொருள்களுக்கான உதாரணங்கள்.**
  - துணித் துண்டுகள், நூல் துண்டுகள், கயிறு
  - தும்புத்தூள், இயற்கையான புற்களது வகைகள்
  - தென்னோலை, பனையோலை போன்ற ஓலை வகைகள்
  - கடதாசித்தாள், பத்திரிக்கைத் தாள்
  - சாக்கு, பொலித்தீன் உறை போன்ற கழிவாக அகற்றப்பட்ட பொதியிடல் பொருட்கள்.
  - சந்தையிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய குண்டுமணிகள், நூல்கள், பேபி ரிபன், டிசுத்தாள் போன்றவைகள்.
- ஒவ்வொரு குழுவிற்குப் பொருத்தமான பொருட்களைத் தெரிவு செய்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கவும். அப்பொருட்களைப் பயன்படுத்தி யாதேனும் உற்பத்திச் செயற்பாட்டினைக் குழுக்களிடையே போட்டித்தன்மை கொண்டதாக நடாத்தவும். தேவையாயின் வெற்றியீட்டும் குழு தெரிவு செய்யப்படும் என்பதை அறிவிக்கவும்.
- செயற்பாடுகளை வழங்கி குழுக்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.

**இணைப்பு 5.3.3**

## குழுத் தேடியறிதலுக்கான ஆலோசனைப்பத்திரம்

- பிரியா தளபாட உற்பத்தி வணிகம் தொடர்பான விடய ஆய்வினை நன்றாக விளங்கிக் கொள்ளவும்.
- உற்பத்திக்குரிய பின்வரும் செலவுகள் தொடர்பாக கவனஞ் செலுத்தவும்.
    - மூலப்பொருட்களுக்குரிய செலவுகள்
    - உழைப்பிற்குரிய செலவுகள்
    - ஏனைய செலவுகள் (மூலப்பொருள், கூலிகள் அல்லாதவை)
- குறிப்பிட்ட செலவு வகைகளை இனங்காண்பதற்காகக் குழு கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளுங்கள்.
- உங்களது தலைப்பிற்குரிய விடய ஆய்வில் உள்ளடக்கப்பட்டுள்ள செலவுகளைப் பெறுமானங்களுடன் இனங்காணுங்கள்.
- அச்செலவுகளை வெவ்வேறாக வகைப்படுத்தி மொத்த உற்பத்திக் கிரயத்தினைக் கணிப்பிட்டுக் காட்டுங்கள்.
- கதிரை ஒன்றுக்கான உற்பத்திக் கிரயத்தினைக் கணிப்பிடுங்கள்.
- உங்களது தேடியறிதல்களை முழு வகுப்பிலும் முன்வைப்பதற்கு ஆயத்தப்படுத்தவும்.

**இணைப்பு 5.3.4**

## பிரியா தளபாட உற்பத்தியாளர்கள்.

தொழில் பயிற்சி அதிகார சபையில் தச்சுத் தொழில் தொடர்பான பாடத்திட்டமொன்றைக் கற்றுள்ள பிரியா அவ்அறிவினைப் பயன்படுத்தி “ பிரியா தளபாட உற்பத்தியாளர்கள் “ எனும் பெயரில் சுயமாக வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு எண்ணுகின்றார். அதற்கேற்ப மேற்கொள்ளப்பட்ட சந்தை ஆய்வின்படி, தனது உற்பத்தியுடன் தொடர்புடைய தகவல்களில் சிலவற்றைப் பின்வருமாறு பெற்றுக் கொண்டார்.

- உத்தேச உற்பத்திப் பண்டம் - சிறுவர் பாடசாலைக்கான மேசைகள், கதிரைகள்
- சந்தைப்படுத்தல் எதிர்வுகூறல் - (மாதாந்தம் ) - 200, கதிரைகள்
- உற்பத்தி செய்ய வேண்டிய கதிரைகளின் எண்ணிக்கை - 200 அலகுகள்
- தேவையான மூலப்பொருட்களும் கிரயமும் (மாதாந்தம்)

| | ரூபா | |
|---|---|---|
| பலகை | 15,000 | (ஒரு அடி ரூபா 15 படி 1000 அடிகள்) |
| ஆணி | 500 | (ஒரு கிலோ ஆணி ரூபா 250) |
| நிறப்பூச்சு | 1,500 | (ஒரு லீற்றர் நிறப்பூச்சு ரூபா 750) |
| தச்சுத் தொழிலாளியின் கூலி | 20,000 | |
| உதவியாளர் கூலி | 10,000 | |
| தொழிற்சாலை வாடகை | 4,000 | |
| தொழிற்சாலை மின்சாரம் | 1,000 | |
| பராமரிப்பும் திருத்தங்களும் | 2,000 | |
| தொழிற்சாலையைத் துப்பரவு செய்யும் செலவு | 500 | |
| இயந்திரங்களும், ஏனைய உபகரணங்களுக்குமான தேய்வு | 1,000 | |
| ஏனைய பொருட்கள் | 2,500 | |
| (ஒரு தச்சுத்தொழிலாளியும் இரு உதவியாளர்களும் வேலை செய்கின்றார்) | | |
| இயந்திரங்களினதும், ஏனைய உபகரணங்களினதும் பெறுமதி | 60,000 | |

- ஒரு தச்சரும் உதவியாளரொருவருமாக இருவர் வேலை செய்கின்றார்.
- இயந்திரங்களுக்கும், ஏனைய உபகரணங்களுக்குமான மொத்த பெறுமதி ரூபா 60,000 ஆகும்.

**தேர்ச்சி 5.0** : வணிகமொன்றை ஆரம்பிப்பதற்காகத் திட்டமொன்றைத் தயாரிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 5.4 :** முன்மொழியப்படும் வணிகமொன்றின் நிர்வாக நடவடிக்கைகளுக்கான திட்டத்தினைத் தயாரிப்பார்.

**பாடவேளைகள்** : 06

**கற்றல் பேறுகள்** :

இத்தேர்ச்சி மட்டத்திற்குரிய பாட வேளைகளின் இறுதியில் மாணவர்கள்.

- உத்தேச வணிகமொன்றின் நிர்வாகக் கருமங்களுக்குரிய செலவுகளை கணிப்பீடு செய்வார்.
- உத்தேச வணிகமொன்றின் நிர்வாக நடவடிக்கைகளுக்குரிய செலவுகள் தொடர்பான மதிப்பீடொன்றைத் தயாாரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :**

இத்தேர்ச்சி மட்டத்திற்குரிய பாடத்திட்டத்தில் காணப்படும் பாட உள்ளடக்கத்தினையும் அதனுடன் தொடர்புடையதான பாடநூலில் உள்ள பாட விடயங்கள் தொடர்பாகவும் சிறந்த விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ளவும். பின்னர் பின்வரும் ஆலோசனைகள் மீது கவனத்தைச் செலுத்தவும்.

- இத்தேர்ச்சி மட்டத்தினடிப்படையில் ஆரம்பத்தில் பாடப் பிரவேசத்தின் போது உங்களது பாடசாலையை உதாரணமாகக் கொண்டு அங்குள்ள பதவிகள், அப்பதவிகளுக்கான கருமங்கள் தொடர்பில் மாணவர்களிடம் கேட்டறிந்து சிந்தனைக் கிளறல் செயற்பாட்டில் ஈடுபடவும்.
- அதன் பின்னர் பாடசாலை ஒழுங்கமைப்பு முறைமையையும் அதிலுள்ள பதவிகளையும் பாய்ச்சல்கோட்டு வரைபடம் மூலம் காட்சிப்படுத்தவும். அல்லது பாடசாலைக் காரியாலயத்திற்குச் சென்று அதனை பரிசீலிப்பதற்கு இடமளிக்கவும்.
- மேற்காட்டிய செயற்பாடுகளிலிருந்து வணிகமொன்றிலுள்ள பதவிகள், கருமங்கள் தொடர்பாகவும் அப்பதவிகளிலுள்ளவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற கொடுப்பனவுகள் தொடர்பாகவும் காரியாலயத்தை நடாத்திச் செல்வதற்கான ஏனைய செலவுகள் தொடர்பாகவும் மாணவர்கள் அறிந்து கொள்ளச் செய்யவும்.
- பின்னர் சுமதி பாதணி வணிகத்திற்குரிய பதவிகள், பணிகள், நிருவாகச் செலவுகள் என்பன அடங்கிய மதிப்பீட்டினை பின்வருமாறு முன்வைக்கச் செய்யவும்.
- இணைப்பு 5.4.1 இல் உள்ளடக்கப்பட்டுள்ள குழுத் தேடியறிதல் அறிவுறுத்தல் பத்திரத்தையும் 5.4.2 இல் உள்ளடக்கப்பட்டுள்ள விடய ஆய்வினையும் மாணவர்களுக்கு வழங்கி செயற்பாட்டில் ஈடுபடச் செய்யவும்.

உரிமையாளர் - சுமதி விஸ்வநாதன், முழு வணிகம் தொடர்பிலும் தானே தீர்மானமெடுப்பார். மேலதிகாரியானவர் பொதுவாக முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்.


முகாமையாளர் - வணிகத்தின் நோக்கங்களைச் செயற்படுத்துவதற்கும் அதனை மேற்கொள்வதற்குமாகப் பணியாளர்களை நெறிப்படுத்தல்.

மேற்பார்வையாளர் - பாதணிகளின் உற்பத்தி, விற்பனை தொடர்பான ஊழியர்களின் கருமங்கயை மேற்பார்வை செய்தல் ஆலோசனை வழங்கல் என்பன இவர் மூலமே இடம்பெறும்.

ஊழியர்கள் -
- இயந்திரத்தை இயக்குதல்
- பாதணிசார் உற்பத்தியின் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.
- பாதணிகளைப் பொதியிடலும், விபரப்பட்டியல் இடலும்.
- கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தலும், எழுத்து ஆவணங்களைப் பேணலும்.
- விற்பனைக்கு உதவுதல் / விற்பனை செய்தல்.

சிற்றூழியர்கள்.
- சுத்தம் செய்யும் நடவடிக்கைகள் முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வைக்குத் துணையாக சேவைகளில் ஈடுபடுதல்.

**சுமதி பாதணி வணிகத்தின் ஒழுங்கமைப்பு அட்டவணையை பின்வரும் முறையில் காட்ட முடியும்.**




- நிர்வாகச் செலவுகளுக்குரிய மதிப்பீடொன்று பின்வருமாறு காணப்படும்.

| **நிர்வாகச் செலவுகள்** | **பெறுமதி (மாதாந்தம்) ரூபா** |
|---|---|
| எழுது பொருள்கள் | 200 |
| காரியாலய மின்சாரம் | 500 |
| உபசரணை நடவடிக்கைகள் | 500 |
| அலுவலக மற்றும் சிற்றூழியர் சம்பளம் | 25,000 |
| தொலைபேசிக் கட்டணம் | 700 |
| அனுமதிப்பத்திரப் புதுப்பித்தல் | 1750 |
| காரியாலய உபகரணத் தேய்வு | 300 |
| மொத்த நிர்வாகச் செலவுகள் | 28,950 |

***கவனிக்கவும்.***

- சந்தைப்படுத்தல், உற்பத்திப் பணியாளர்களுக்கான சம்பளமானது சந்தைப்படுத்தல் உற்பத்தித் திட்டங்களில் உள்ளடக்கப்படும் என்பதையும் முகாமையாளர், மற்றும் மேற்பார்வையாளர்களது சம்பளங்கள் நேரில் செலவுகளின் அடிப்படையில் முன்வைக்கப்படும் என்பதையும் கருத்திற் கொள்ளவும்.

**முதன்மை பதங்கள் /எண்ணக்கரு**

- பதவிகளும் / பணிகளும்.
- ஊழியர் சம்பளமும் கூலியும்
- நிர்வாகச் செலவுகள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- தரம் 11 இற்கான பாடநூலின் குறித்த பாட அலகு
- இணைப்பு 5.4.1 இற்குரிய குழுத் தேடியறிதல் அறிவுறுத்தல் பத்திரம்
- இணைப்பு 5.4.2 இற்குரிய குழுத் தேடியறிதல் அறிவுறுத்தல் பத்திரம்

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- நிறுவனமொன்றின் / வணிகமொன்றில் பதவிகளுக்கான உதாரணங்களையும் அப்பதவிக்குரிய பணிகளையும் சுட்டிக்காட்டுவார்.
- வழங்கப்பட்ட தகவல்களின் துணைகொண்டு நிர்வாகக் கருமங்களுக்குரிய செலவுகளை உள்ளடக்கிய மதிப்பீடொன்றினைத் தயாரிப்பார்.
- நிருவாகச் செலவுகளை மதிப்பீடு செய்வதற்குத் தேவையான உருப்படிகளை முன்வைப்பார்.

இணைப்பு 5.4.1

**குழுத் தேடியறிதல்களுக்கான ஆலோசனைகள்.**

- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுமதி பாதணி உற்பத்தி வணிகம் தொடர்பான விடய ஆய்வினை நன்றாக விளங்கிக் கொள்ளவும்.
- பின்வரும் வணிகத்துறைகளில் உங்கள் குழுவிற்கு கிடைத்த துறையின் மீது கவனம் செலுத்தவும்.
  - பொருள் உற்பத்தி வணிகம்
  - சேவை உற்பத்தி வணிகம்
- உங்களது தலைப்பின் அடிப்படையில் ஆரம்பிப்பதற்குப் பொருத்தமான வணிகமொன்றைத் தீர்மானிக்கவும்.
- குழுக் கலந்துரையாடலின் பின்னர் உங்கள் வணிகத்துடன் தொடர்புடைய பின்வரும் தகவல்களை முன்வைக்கவும்.
  - உங்களது வணிகத்தின் பெயர்
  - வணிகக் கருமங்களுக்குரியதான உங்களால் இனங்கண்ட பதவிகளின் பெயர்கள்.
  - ஒவ்வொரு பதவிகளாலும் நிறைவேற்றப்பட வேண்டிய கருமங்களின் தன்மை
  - அப்பதவிகளுக்குத் தம் தேவையானவை என நீர் கருதும் கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்.
  - நீங்கள் இனங்கண்ட பதவிகளைக் காட்டும் அமைப்பு வரைபடம்
  - உங்களது வணிகத்தின் நிருவாகக் கருமங்களுடன் தொடர்பான நிர்வாகச் செலவுகள்.
- உங்களது தேடியறிதல்களை முழு வகுப்பிற்கும் முன்வைப்பதற்கு ஆயத்தமாகவும்.

இணைப்பு 5.4.2

## சுமதி பாதணிகள்

பாதணி உற்பத்தி நிறுவனமொன்றில் கடமையாற்றிய சுமதி விஸ்வநாதன் தமக்கே உரித்தான பாதணி உற்பத்தி வணிகமொன்றை ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்து அதனை ‘‘சுமதி பாதணி ‘‘ எனும் பெயரில் பதிவு செய்து நடத்திச் செல்வதற்குத் தீர்மானிக்கின்றார். பாதணி உற்பத்தி நிறுவனத்தின் முன்மொழியப்பட்ட சில பதவிகளும் பணிகளும் அவற்றுடன் தொடர்புடைய சில செலவுகளும் பின்வருமாறு திட்டமிட்டப்பட்டுள்ளன.

| பதவிகள் | பணிகள் |
|---|---|
| 1. உரிமையாளர் மேலதிகாரி | • நோக்கம் தொடர்பில் தீர்மானமெடுத்தல். |
| 2. முகாமையாளர்கள் | • நோக்கத்தினைச் செயற்படுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். |
| 3. மேற்பார்வையாளர்கள் | • பாதணி உற்பத்தி, சந்தைப்படுத்தல் என்பவற்றுடன் தொடர்புடைய பணியாளர்களின் பணிகளை மேற்பார்வை செய்தல். |
| 4. ஊழியர்கள் | • பாதணி உற்பத்திக்குரிய பணிகளில் ஈடுபடுதல், பாதணிகளைப் பொதியிடுதல். விபரச் சிட்டைகளை ஒட்டுதல்.<br>• கொடுக்கல் வாங்கல்களை அறிக்கைப்படுத்தல், பதிவு செய்தல் ஆவணக் கோவைகளைப் பராமரித்தல்.<br>• பாதணி விற்பனைக்கு உதவுதல். |
| 5. சிற்றூழியர்கள் | • முகாமையாளர்களினால் வழங்கப்படும் கருமங்களுக்கும் ஏனைய ஊழியர்களுக்கும் உதவியாகச் செயற்படுதல். |

- மாதமொன்றிற்கு முன்மொழியப்பட்ட நிர்வாகச் செலவுகளாக எழுதுகருவிகளுக்கு ரூபா 200 காரியாலய மின்சாரத்திற்கு ரூபா 500 எழுதுவினைஞர் சம்பளத்திற்காக ரூபா 25000 உபசரிப்புக் கருமங்களுக்கு ரூபா 500 தொலைபேசிக் கட்டணத்திற்கு ரூபா 700 அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிப்பதற்கு ரூபா 1750 காரியாலய உபகரணப் பெறுமானத் தேய்விற்கு ரூபா 300 ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேர்ச்சி 5.0** : வணிகமொன்றை ஆரம்பிப்பதற்காகத் திட்டமொன்றைத் தயாரிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 5.5 :** நிதித் திட்டத்தின் செயற்பாட்டுக்கு முன்னரான செலவுத் திட்டத்தைத் தயாரிப்பார்.

**பாடவேளைகள்** : 03

**கற்றல் பேறுகள்** :

இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாடவேளைகளின் இறுதியில் மாணவர்கள்.

- உத்தேச வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய கருமங்களுக்கான உதாரணங்களைச் சுட்டிக்காட்டுவார்.
- உத்தேச வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய கருமங்களுக்கான உத்தேச செலவுகளை இனங்காண்பார்.
- வழங்கப்பட்ட வணிகமொன்றின் செயற்பாட்டுக்கு முன்னரான செலவுகள் தொடர்பாக மதிப்பீட்டுத் திட்டத்தினைத் தயாரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :**

இத்தேர்ச்சி மட்டத்திற்கான பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற பாட உள்ளடகத்தினையும், அதனுடன் தொடர்புடையதாக பாடநூலில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடவிடயங்கள் தொடர்பாகவும் கூடிய விளக்கமொன்றைப் பெற்றுக் கொள்ளவும். அதன் பின்னர் கீழே குறிப்பிடப்படுகின்ற ஆலோசனைகள் தொடர்பில் கவனஞ் செலுத்தவும்.

- வணிகத்திட்ட அமைப்பில் மற்றோர் பிரிவாக நிதித்திட்டம் காணப்படுகின்றது. இதன் மூலம் உத்தேச வணிகத்திற்குத் தேவையான நிதியின் அளவு, அதனைப் பெற்றுக் கொள்ளக்கூடிய முறைகள், வணிக நடவடிக்கைகளினால் எதிர்பார்க்கப்படும் செயற்பாட்டு விளைவுகள் என்பன காட்டப்படும். நிதித் திட்டத்தில் செயற்பாட்டிற்கு முன்னரான முதலீடு, தொழிற்படு மூலதனம், மொத்த முதலீடு, காசுப் பாய்ச்சல், வருமானக்கூற்று என என்பவற்றின் மதிப்பீடுகள் உள்ளடக்கப்பட்டிருக்கும். (இம்மதிப்பீட்டுத் திட்டத்தினை தயாரிப்பது தொடர்பில் பின்னர் வரும் தேர்ச்சி மட்டத்தின் ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்திலும் மேற்கொள்ளப்படும்.)
- இத்தேர்ச்சி மட்டத்தின் அடிப்படையில், முதலில் பாடத்தில் பிரவேசிக்கும் போது, பின்வரும் வினாக்களை வகுப்பில் சமர்ப்பித்துச் சிந்தனைக் கிளறலில் ‘‘மாணவர்களை ஈடுபடுத்தவும். வீடொன்றை நிர்மாணிக்க முன்னர் மேற்கொள்ள வேண்டிய கருமங்கள், செலவுகள் எவை’’ என வினவவும்.
    - மாணவர்களது துலங்கல்களை கரும்பலகையில் எழுதிக்காட்டுங்கள்.
    - பின்னர் வணிகமொன்றை ஆரம்பிக்கும்போது முயற்சியாளரொருவரினால் ஆரம்பத்திலே மேற்கொள்ள வேண்டிய கருமங்கள், செலவுகள் என்பன காணப்படும் என்பதனை உதாரணங்களினூடாக விளக்கவும்.
    - வணிகமொன்றை ஆரம்பிக்கும்போது மேற்கொள்ள வேண்டிய கருமங்கள், செலவுகள் என்பன ஆரம்பிக்க உத்தேசிக்கும் வணிகத்தின் பருமன், அதன் தன்மை என்பவற்றின் அடிப்படையில் வேறுபடும் என்பதனை விளக்கவும். அவற்றுக்கான உதாரணங்களை முன்வைக்கவும்.
- பின்னர் இணைப்பு 5.5.2 இல் உள்ளடக்கப்பட்டுள்ள குழுத் தேடியறிதல் ஆலோசனைப் படிவத்தினையும், இணைப்பு 5.2.2 இல் உள்ளடக்கப்பட்டுள்ள விடய ஆய்வின் பிரதிகளையும் குழுக்களுக்கு வழங்கிச் செயற்பாட்டில் ஈடுபடச் செய்யவும்.

- வழங்கப்பட்ட விடய ஆய்வு தொடர்பில் சிறந்த விளக்கத்தினைப் பெற்று, செயற்பாட்டுக்கு முன்னரான கருமங்கள், அவற்றிற்கான செலவுகள் என்பவற்றை இனங்காண்பதற்கான ஆலோசனைகளை மாணவர்களுக்கு வழங்கவும்.
- இத்தேர்ச்சி மட்டத்திற்கான கற்றல் கற்பித்தல் செயலொழுங்கின் போது விடயம் சார்ந்த அல்லது கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகைகளிலான வினாக்களைப் பயன்படுத்தி பொருத்தமான மதிப்பீடுகளை மாணவர்களுக்கு பெற்றுக் கொடுக்கவும்.

  உதாரணம் :
  - செயற்பாட்டுக்கு முன்னரான செலவுகளை உதாரணங்களினூடாக விளக்கவும்.
  - நீங்கள் எதிர்காலத்தில ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கும் வணிகமொன்றைக் கருதுகோளாகக் கொள்ளவும்.
    - (அ) அவ்வணிகத்தின் பெயரைக் குறிப்பிடவும்.
    - (ஆ) அவ்வணிகத்தை ஆரம்பிக்க முன்னரான கருமங்களையும் அதற்காக ஏற்படும் செலவுகளையும் உள்ளடக்கிய பட்டியலொன்றைத் தயாரிக்கவும்.

**முதன்மைப் பதங்கள் /எண்ணக்கரு :**
- நிதித் திட்டங்கள்
- செயற்பாட்டுக்கு முன்னரான செலவுகள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**
- தரம் 11 இன் பாடநூலில் குறித்த பாட அலகு
- இணைப்பு 5.4.1 இன் குழுத் தேடியறிதல் ஆலோசனைப்படிவம்
- இணைப்பு 5.5.2 இல் உள்ளடக்கப்பட்டுள்ள விடய ஆய்வின் பிரதிகள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**
- வழங்கப்பட்ட வணிகமொன்றின் தகவல்களினூடாக வணிகமொன்றை ஆரம்பிக்க முன்னர் மேற்கொள்ள வேண்டிய கருமங்களைப் பெயரிட்டுக் காட்டுவார்.
- வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய கருமங்களை இனங்காண்பதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டுவார்.
- வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் வணிகமொன்றின் செயற்பாட்டுக்கு முன்னரான செலவுகள் தொடர்பிலான மதிப்பீட்டுத் திட்டமொன்றைத் தயாரிப்பார்.

**குழுத் தேடியறிதல்களுக்கான ஆலோசனைகள்.**

‘‘ நதியா கொமினிகேஷன் ‘‘ வணிகத்தின் விடய ஆய்வு தொடர்பில் சிறந்த விளக்கத்தைப் பெற்று அவ்வணிகத்திற்குத் தேவையான செயற்பாட்டுக்கு முன்னரான செலவுகளை (ஆரம்பிப்பதற்கு முன்னர் ஏற்படக்கூடிய செலவுகள்) இனங்காண்பதற்கான குழுக்கலந்துரையாடலொன்றைக் கட்டியெழுப்பவும்.

- பின்வரும் தலைப்புக்களில் உங்களது குழுவிற்குக் கிடைக்கும் தலைப்பில் கவனஞ் செலுத்தவும்.
  - பொருள் உற்பத்தி வணிகம்
  - சேவை வழங்கும் வணிகம்

- உங்களுக்குக் கிடைக்கும் தலைப்பிற்கேற்றவாறு ஆரம்பிப்பதற்கு பொருத்தமான வணிகமொன்றைத் தீர்மானிக்கவும்.
- அவ்வணிகத்திற்குப் பெயரிட்டு அறிமுகப்படுத்துங்கள்.
- அவ்வணிகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய கருமங்களை எழுதிக் காட்டுங்கள்.
- அக்கருமங்களுக்காக ஏற்படும் செலவுகளை இனங்காணவும்.
- அவ்வாறான செலவுப்பட்டியலொன்றைத் தயாரிக்கவும்.
- வணிகத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான மொத்தச் செயற்பாட்டுக்கு முன்னரான செலவுகளைக் கணிக்கவும்.
- உங்களது தேடல்களை ஆக்கபூர்வமாக முழு வகுப்பிற்கும் முன்வைப்பதற்கு ஆயத்தமாகவும்.

## கமலன் பெட்ரல், டீசல் இன்ஜினியரிங்

- மின்னியல் பாடத்திட்டத்தைக் கற்று வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த பின்னர் கமலன் தனக்கே உரித்தான வணிகமொன்றை ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்தார். தனது விருப்பம், திறன் வணிகத்தின் வளர்ச்சி என்பவற்றைக் கருத்திற் கொண்டு கமலன் அவரது வணிகத்தின் மூலம் மோட்டார் வாகன மின்சாரத் தொழினுட்பச் சேவையை வழங்குவதுடன் அவற்றை பழுதுபார்த்தல் கருமங்களையும் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றார். இதற்காகத் தனக்குத் தேவையான இயந்திர உபகரணங்கள் தொடர்பான தகவல்களையும் சேகரித்திருந்தார். அத்துடன் ரூபா 500,000 பெறுமதியான காணியுடனான கட்டடமொன்றும் அவர் வசம் இருந்தது. வணிகத்தை ஆரம்பிப்பதற்கான அனைத்து ஆயத்தங்களும் செய்யப்பட்டிருந்தன. அவர் வணிகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய கருமங்களையும், அதற்காகத் ஏற்க வேண்டிய செலவுகள் தொடர்பாகவும் தேடியறியப்பட்டது. அத்தகவல்களானவை பின்வருமாறு இருந்தது.

| | ரூபா |
|---|---|
| • சந்தை ஆய்விற்கு | 10,000 |
| • வணிகத்தைப் பதிவு செய்தல் | 1,000 |
| • சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறல் | 650 |
| • வணிகத் திட்டத்தைத் தயாரித்தல். | 12,000 |
| • மின்னிணைப்பைப் பெற்றுக் கொள்ளல் | 15,000 |
| • நீர் வழங்கல்களைப் பெற்றுக் கொள்ளல் | 10,000 |
| • சுத்திகரித்து, இடஅமைப்பினை ஒழுங்கமைத்தல் | 20,000 |
| • வணிகத்தின் ஆரம்ப வைபவத்திற்கான செலவுகள் | 8,000 |
| • இயந்திரங்கள் மற்றும் பொருட்களின் தகவல் அறிதல் | 2,000 |

**தேர்ச்சி 5.0** : வணிகமொன்றை ஆரம்பிப்பதற்காகத் திட்டமொன்றைத் தயாரிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 5.6 :** உத்தேச வணிகத்தை ஆரம்பிப்பதற்குத் தேயைான மொத்தச் செலவுகளைக் கருத்திற் கொண்டு முதலீட்டுத் திட்டத்தைத் தயாரிப்பார்.

**பாடவேளைகள்** : 06

**கற்றல் பேறுகள்** :

இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாடவேளையின் இறுதியில் மாணவர்கள்

- உத்தேச வணிகமொன்றின் மொத்த முதலீட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்படும் உருப்படிகளை உதாரணங்களுடன் விளக்குவார்.
- உத்தேச வணிகமொன்றின் அன்றாடக் கருமங்களை நடாத்திச் செல்வதற்குத் தேவையான செலவுகளை எதிர்வுகூறுவார்.
- வழங்கப்படும் வணிமொன்றிற்கான மொத்த முதலீட்டுத் திட்டத்தைத் தயாரிப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :

இத்தேர்ச்சி மட்டத்திற்கான பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற பாட உள்ளடகத்தினையும், அதனுடன் தொடர்புடையதாக பாடநூலில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடவிடயங்கள் தொடர்பாகவும் கூடிய விளக்கமொன்றைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் கீழே குறிப்பிடப்படுகின்ற ஆலோசனைகள் தொடர்பில் கவனஞ் செலுத்தவும்.

- ஆரம்பத்தில் இத்தேர்ச்சி மடடத்திற்கான பாடப் பிரவேசம் செய்யும் போது பின்வரும் விடய ஆய்வினை மாணவர்களுக்குச் சமர்ப்பித்து செயற்பாட்டில் ஈடுபடக் செய்யவும்.
- உங்கள் பாடசாலையின் நூலகத்திற்கு நூல்களைக் கொள்வனவு செய்வதற்கான நிதியினை திரட்டிக் கொள்வதற்கு சந்தையொன்றை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனக் கருதுக. இதன் அடிப்படையில் உங்கள் வகுப்பிலுள்ள மூன்று குழுக்களுக்கு பின்வரும் வணிகங்களை நடாத்துவதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.
    1. குளிர்களி (Ice cream) ) விற்பனையகம்
    2. காலை, மதிய உணவுப் பொதி விற்பனையகம்
    3. குளிர்பான விற்பனையகம்
- மேற்காட்டிய ஒவ்வொரு வணிகத்திற்கும் தேவையான பொருட்கள், உபகரணங்கள் என்பவற்றுக்கு செலவிடப்படும் பணத்தொகைக்கான மதிப்பீட்டுத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்குரிய செயற்பாட்டை மாணவர்களுக்கு வழங்கவும்.
- மாணவர்கள் முன்வைக்கின்ற தகவல்களைக் கருத்திற்கொண்டு நடைமுறையல்லாத சொத்துக்கள், அன்றாட நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்குத் தேவையான காசு என்பனவை தொடர்பில் மாணவர்களுக்குக் கூடிய விளக்கத்தைப் பெற்றுக் கொடுக்கவும்.
- நடைமுறையல்லாச் சொத்துக்கள் செயற்பாட்டிற்கு முன்னரான செலவுகள் தொடர்பில் மாணவர்கள் இதற்கு முன்னர் விளக்கத்தைப் பெற்றிருப்பதனால் தொழிற்படு மூலதனம் தொடர்பாக கூடிய விளக்கத்தைப் பெற்றுக் கொடுக்கவும்.
- வணிகத் திட்டத்தின் மொத்த முதலீட்டுத் திட்டத்தில் நடைமுறையல்லாத சொத்துக்கள், செயற்பாட்டுக்கு முன்னரான செலவுகள், அன்றாடக் கருமங்களை நடாத்திச் செல்வதற்கான காசு (தொழிற்படு மூலதனம்) போன்ற உருப்படிகள் உள்ளடக்கப்பட்டிருக்கும் என்பதை தெளிவுபடுத்தவும். இங்கு தொழிற்பாட்டிற்கு முன்னரான செலவுகள், தொழிற்படு மூலதனம் என்பன பொதுவாக உரிமையாளர் (முயற்சியாளர்) மூலம் இடப்படல் வேண்டும் என்பதனைச் சுட்டிக்காட்டவும்.

- வங்கியிலிருந்து கடன் பெறப்படுவதனால் மொத்த முதலீட்டில் உரிமையாளரினால் பங்களிப்புச் செய்யப்படும் முதலீடும் வங்கியிடமிருந்து எதிர்பார்க்கப்படும் பணம் தொடர்பாகவும் காட்டப்பட வேண்டி இருப்பதே வணிகத் திட்டம் தாயாரிக்கப்பட வேண்டியதன் பிரதான நோக்கமாக இருக்கின்றது.
- சந்தைப்படுத்தல், உற்பத்தி, நிர்வாக நடவடிக்கைகள், என்பவற்றுடன் தொடர்புபடும் மதிப்பீடுகளில் உள்ளடங்கும் நடைமுறையல்லாத சொத்துக்களே வணிகத் திட்டமொன்றைத் தயாரிக்கும்போது நடைமுறையல்லாத சொத்துக்களாகக் கருதபப்டும் என்பதைத் தெளிவுபடுத்தவும்.
- வணிகத் திட்டமொன்றிற்கான மொத்த முதலீட்டுத் திட்டமொன்றைத் தயாரிக்கக் கூடிய திறனைப் பெற்றுக் கொடுப்பதற்கு இணைப்பு 5.6.1 இன் குழுத் தேடல் ஆலோசனைகளையும் இணைப்பு 5.6.2 இல் உள்ள விடய ஆய்வினையும் பயன்படுத்தி மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.
- நதி கொமினிகேஷன் வணிகத்தின் முதலீட்டு மதிப்பீட்டினைப் பின்வருமாறு முன்வைத்ததன் பின்னர் மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.

**மொத்த முதலீடு தொடர்பான மதிப்பீடு**

| **உருப்படிகள்** | தற்போதுள்ள உரிமையாளரின் சொத்துக்கள் ரூபா | உத்தேச உரிமையாளர் ஈடுபடுத்தும் ரூபா | உத்தேச கடன்கள் மூலம் ரூபா | மொத்த முதலீடு ரூபா |
|---|---|---|---|---|
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | | |
| காணி | 200,000 | - | - | 200,000 |
| கட்டிடம் | 100,000 | - | - | 100,000 |
| இயந்திர உபகரணம் | - | 100,000 | 50,000 | 150,000 |
| தளபாடம் | - | 25,000 | - | 25,000 |
| ஏனைய உபகரணங்கள் | - | 50,000 | - | 50,000 |
| **மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்** | 300,000 | 175,000 | 50,000 | 525,000 |
| **செயற்பாட்டுக்கு முன்னரான முதலீடு** | | | | |
| சந்தை ஆய்வு | - | 15,000 | - | 15,000 |
| வணிகத்தைப் பதிவுசெய்தல் | | 1,500 | - | 1,500 |
| வணிகத் திட்டம் தயாரித்தல் | | 10,000 | - | 10,000 |
| வணிகத்தை ஆரம்பிக்கும் செலவுகள் | | 8,500 | - | 8,500 |
| **செயற்பாட்டிற்கு முன்னரான முதலீடு** | | 35,000 | - | 35,000 |
| **தொழிற்படு மூலதனம்** | | | | |
| அன்றாட நடவடிக்கைகளுக்காக மதிப்பீட்டுக் காசு | - | 48,000 | - | 48,000 |
| மொத்த முதலீடு | 300,000 | 258,000 | 50,000 | 608,000 |

- இத்தேர்ச்சி மட்டத்திற்கான கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கின் விடயம் சார்ந்த அல்லது கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகையிலான வினாக்களைத் தயாரித்து பொருத்தமான மதிப்பீட்டினை மாணவர்களுக்கு வழங்கவும்.

  உதாரணம் : வணிகமொன்றினை பெயரிட்டு அவ்வணிகத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையெனக் கருதும் நடைமுறையல்லாத சொத்துக்களடங்கிய பட்டியலொன்றைத் தயாரிக்கவும்.
- மொத்த முதலீட்டு மதிப்பீடொன்றில் உள்ளடக்கப்படும் அன்றாடச் செலவுகளுக்குரிய உருப்படிகளை பின்வரும் பட்டியலிலிருந்து தெரிவு செய்யவும்.

| | | ரூபா |
|---|---|---|
| 1. | தளபாடங்கள் கொள்வனவு | 100,000 |
| 2. | மின்சாரப் பட்டியலுக்கான கொடுப்பனவு | 6,000 |
| 3. | இலத்திரனியல் நிறுவைத் தராசு | 400,000 |
| 4. | காசு விற்பனை | 25,000 |
| 5. | கடன் வட்டி | 12,000 |

**அமுதன்மைப் பதங்கள் / எண்ணக்கரு :**

- மொத்த முதலீடு
- அன்றாடக் கருமங்களுக்காக தன்னிடம் வைத்திருக்க வேண்டிய காசு (தொழிற்படு மூலதனம்)

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- தரம் 11 இன் பாடநூலில் பாட அலகு
- இணைப்பு 5.6.1 குழுத் தேடியறிதல் அறிவுறுத்தல் பத்திரத்தின் பிரதிகள்
- இணைப்பு 5.6.2 இன் விடய ஆய்வின் பிரதிகள்
- பாடத்தைத் திட்மிடுவதற்கான ஆலோசனைகள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- வணிகமொன்றின் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான உதாரணங்களை முன்வைப்பார்.
- வழங்கப்பட்ட வணிகமொன்றின் தகவல்களின் உதவியுடன் மொத்த முதலீட்டுத் திட்டமொன்றினைத் தயாரிப்பார்.
- வணிகமொன்றின் அன்றாடக் கருமங்களை நடாத்திச் செல்வதற்குத் தேவைப்படும் செலவுகளுக்கான உதாரணங்களை முன்வைப்பார்.

## குழுத் தேடியறிதல் ஆலோசனைப்படிவம்

- மொத்த முதலீட்டு மதிப்பீட்டினைத் தயாரிப்போம்.
- நதி கொமினிகேஷன் வணிகத்திற்கான விடய ஆய்வினை நன்றாக விளங்கி அவ்வணிகத்திற்குத் தேவையான நடைமுறையல்லாச் சொத்துக்கள், செயற்பாட்டிற்கு முன்னரான செலவுகள் என்பவற்றை இனங்காணவும்.
- பின்வரும் தலைப்புக்களில் உங்களது குழுவிற்கு கிடைக்கும் தலைப்பு தொடர்பில் கவனஞ் செலுத்தவும்.
  - பொருள் உற்பத்தி வணிகம்
  - சேவை வழங்கும் வணிகம்
- அதன் பின்னர் உங்களுக்குக் கிடைக்கும் தலைப்பிற்கேற்ப ஆரம்பிப்பதற்குப் பொருத்தமான வணிகத்தைத் தீர்மானிக்கவும். அவ்வணிகத்திற்கான பெயரொன்றினைப் குறிப்பிடவும்.
- அவ்வணிகத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடைமுறையல்லாச் சொத்துக்கள், வணிகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஏற்படக்கூடிய செலவுகள் என்பவற்றை இனங்காணவும்.
- அந்நடைமுறையல்லாச் சொத்துக்களையும், வணிகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஏற்படக்கூடிய செலவுகளுடன் அன்றாடக் கருமங்களை மேற்கொள்வதற்குத் தன்னிடம் வைத்திருக்க வேண்டிய பணத்தொகையினையும் (தொழிற்படு மூலதனம்) தீர்மானிக்கவும்
- வணிகத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடைமுறையல்லாச் சொத்துக்கள், செயற்பாட்டிற்கு முன்னரான செலவுகள், தொழிற்படு மூலதனம் என்பனவற்றைப் பெறுமதிகளுடன் சுட்டிக்காட்டி அட்டவணையொன்றைத் தயாரிக்கவும்.
- உங்களது வணிகத்திற்குத் தேவையான உத்தேச நிலையான மூலதன உருப்படிக்காக உங்களால் பங்களிப்புச் செய்யக் கூடியதும், வங்கியால் எதிர்பார்க்கப்படும் கடன் தொகையினையும் குறிப்பிட்டு மொத்த முதலீட்டு மதிப்பீடொன்றைத் தயாரிக்கவும். இதற்காகப் பின்வரும் மதிப்பீட்டு மாதிரியினைப் பயன்படுத்தவும்.

| | உரிமையாளரினால் ஈடுபடுத்தப்படும் நிதி | உத்தேசக் கடன்கள் | மொத்த முதலீடு |
|---|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்**<br>........................................<br>........................................ | .........................<br>......................... | .........................<br>......................... | .........................<br>......................... |
| **செயற்பாட்டிற்கு முன்னரான செலவுகள்**<br>........................................<br>........................................ | .........................<br>......................... | .........................<br>......................... | .........................<br>.........................<br>. |
| **தொழிற்படு மூலதனம்**<br>........................................<br>........................................ | | | |

**விடய ஆய்வு**

## செல்வம் கொமினிகேஷன்

- வெளிநாட்டில் வேலை செய்த செல்வம் தான் சேமித்த பணத்திலிருந்து சொந்தமாக வணிகமொன்றை நடத்திச் செல்லத் தீர்மானித்தான். அப்பிரதேசத்தில் மேற்கொண்ட சந்தை ஆய்வில் பெறப்பட்ட தகவல்களுக்கேற்ப அவ்வணிகத்தை ‘‘செல்வம் கொமினிகேஷன் ‘‘ என்ற பெயரில் பதிவு செய்து ஆரம்பிப்பதற்கு அவன் தீர்மானித்தான். தொலைபேசி, தொலைபேசி உதிரிப்பாகங்கள், தொலைபேசி பழுதுபார்த்தல், தொலைபேசி அழைப்புச் சேவை முற்கொடுப்பனவுச் சேவை, டுப்லோ பிரதி கட்டுதல் (Binding) போன்ற சேவைகளை வழங்குவதற்கு அவர் எதிர்பார்க்கின்றார். இதுவரையில் சந்தைப்படுத்தல், செயற்பாட்டு, மனிதவளத் திட்டங்களைத் தயாரித்த அவனுக்கு நிதித் திட்டத்தினைத் தயாரிக்க வேண்டியேற்பட்டது. நிதித் திட்டத்தின் பகுதியொன்றான மொத்த முதலீட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பெற்றுக் கொண்டான்.

| | |
|---|---|
| • தேவையான நடைமுறையல்லாத சொத்துக்கள் | ரூபா |
| • காணி | 200,000 |
| • கட்டடம் | 100,000 |
| • இயந்திர உபகரணங்கள் | 150,000 |
| • தளபாடம் | 25,000 |
| • ஏனைய உபகரணங்கள். | 50,000 |
| • செயற்பாட்டுக்கு முன்னரான செலவுகள் | |
| • சந்தை ஆய்வு | 15,000 |
| • பதிவு செய்தல் | 1,500 |
| • வணிகத் திட்டம் தயாரித்தல் | 10,000 |
| • வணிகத்தை ஆரம்பிக்கும் செலவு | 8,500 |

- ஆரம்ப நிலையான மூலதனத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ரூபா 50,000 பெறுமதியான வங்கிக் கடனொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்ப்பதுடன், அத்தொகையினை இயந்திர உபகரணங்களில் ஈடுபடுத்துவதற்கும் எதிர்பார்க்கப்டுகின்றது. தற்போது ரூபா 300000 பெறுமதியான காணி, ரூபா 100,000 பெறுமதியான கட்டடம் என்பவை அவருக்கே உரித்தாகக் காணப்படுவதுடன், ஏனைய நடைமுறையல்லாத சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கும், செயற்பாட்டுக்கு முன்னரான செலவுகளை மேற்கொள்வதற்கும் தேவையான நிதி ரூபா 210,000 என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், அத்தொகையினை செல்வத்தின் சேமிப்புப் பணத்திலிருந்து ஈடுசெய்வதற்கும் எதிர்பார்க்கின்றார். வணிகத்தின் அன்றாடக் கருமங்களுக்காக இரண்டு வாரங்களுக்கு ரூபா 48,000 ஐ தன்னிடம் வைத்திருக்க வேண்டுமென அவர் கூறுகின்றார்.

**தேர்ச்சி 5.0** : வணிகமொன்றை ஆரம்பிப்பதற்காகத் திட்டமொன்றைத் தயாரிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 5.7:** உத்தேச காசு உட்பாய்ச்சல், காசு வெளிப்பாய்ச்சல் என்பவை உள்ளடக்கப்பட்ட அட்டவணையைத் தயாரிப்பார்.

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்** :

இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாடவேளையின் இறுதியில் மாணவர்கள்

- உத்தேச வணிகமொன்றின் காசு உட்பாய்ச்சல்களை உதாரணங்களுடன் சுட்டிக்காட்டுவார்.
- உத்தேச வணிகமொன்றின் காசு வெளிப்பாய்ச்சல்களை உதாரணங்களுடன் சுட்டிக்காட்டுவார்.
- வழங்கப்பட்ட வணிகமொன்றின் காசு உட்பாய்ச்சல்கள் காசு வெளிப்பாய்ச்சல்களை உள்ளடக்கிய அட்டவணையொன்றைத் தயாரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :**

இத்தேர்ச்சி மட்டத்திற்கான பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற பாட உள்ளடக்கத்தினையும், அதனுடன் தொடர்புடையதாக பாடநூலில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடவிடயங்கள் தொடர்பாகவும் கூடிய விளக்கமொன்றைப் பெற்றுக் கொள்ளவும். அதன் பின்னர் கீழே குறிப்பிடப்படுகின்ற ஆலோசனைகள் தொடர்பில் கவனஞ் செலுத்தவும்.

- இத்தேர்ச்சி மட்டத்தினடிப்படையில் ஆரம்பத்தில் பாட அலகில் பிரவேசிப்பதற்காக மாணவர்களினால் நன்கு இனங்காணப்பட்ட வணிகமொன்றை உதாரணமாகக் கொண்டு (சிற்றுண்டிச்சாலையொன்று, புத்தக எழுதுகருவிகள் விற்பனையகமொன்று) இவ்வணிகத்திற்கு காசு உள்வரும் காசு வெளிச்செல்லும் வழிகளையும் மாணவர்களிடம் கேட்டறிந்து சிந்தனைக் கிளறலொன்றில் ஈடுபடச் செய்யவும்.
- வணிகத் திட்டமொன்றில் பின்வரும் ‘‘சுதாகர் முடி திருத்தும் நிலையம் ‘‘ வணிக விடய ஆய்வினை முன்வைத்து அவ்வணிகத்திற்குக் காசு உட்பாய்ச்சல், காசு வெளிப்பாய்ச்சல் இடம்பெறுகின்ற முறையினைக் காட்டும் அட்டவணையொன்றைத் தயாரிக்கவும்.
- முடி திருத்தும் நிலையத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கும் சுதாகரர் அதனை ‘‘சுதாகர் முடிதிருத்தும் நிலையம் ‘‘ எனும் பெயரில் பதிவு செய்வதற்கு எண்ணியுள்ளார். முடிவெட்டுதல்களுக்காக 15 நபர்களும் மீசை சிரைப்பதற்காக 10 நபர்களும் ஒவ்வொரு தினந்தோறும் வருவார்கள் என எதிர்பார்க்கின்றார். முடிவெட்டுதலுக்காக ஒருவருக்கு ரூபா 125 வீதமும் மீசை சிரைப்பதற்காக ரூபா 75 வீதமும் அறவிடுவதற்கு எதிர்பார்க்கின்றார். ஒரு மாதத்திற்கான மின்சாரக் கட்டணமாக ரூபா 1800, நீர் கட்டணமாக 6000, உம் நிலையான வாடகை ரூபா 6000 எனும் வகையில் செலவிட வேண்டிய ஏற்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் ஏனைய செலவுகள் எனும் வகையில் நாளொன்றுக்கு ரூபா 100 வீதம் செலவு ஏற்படும் எனவும் மாதத்தில் 5 நாட்கள் வணிகத்தை மூடிவிடுவதற்கும் அவர் எண்ணியுள்ளார்.
- அதன் பின்னர் இணைப்பு 5.7.1 இல் உள்ளடக்கப்பட்டுள்ள குழுத் தேடியறிதல் ஆலோசனைப் பத்திரத்துடன் இணைப்பு 5.7.2 இல் உள்ளடக்கப்பட்டுள்ள சாரங்கன் சுற்றுலாச் சேவை விடய ஆய்வின் தேவையான அளவிலான பிரதிகளையும் மாணவர் குழுக்களுக்கு வழங்கவும்.

- ‘‘சாரங்கன் சுற்றுலாச் சேவை’’ எனும் விடய ஆய்வினைப் பற்றிய விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடச் செய்யவும்.
- ‘‘ சாரங்கன் சுற்றுலாச் சேவை’’ வணிகத்தில் காசு உட்பாய்ச்சல், காசு வெளிப்பாய்ச்சல் உள்ளடக்கப்பட்ட மதிப்பீட்டினைப் பின்வருமாறு முன்வைக்க முடியும்.

எதிர்வரும் வருடத்திற்கான உத்தேச காசுப் பாய்ச்சல் திட்டம்

| **உருப்படிகள்** | ரூபா | ரூபா |
|---|---|---|
| **காசு உட்பாய்ச்சல்கள்** | | |
| உரிமையாளரின் முதலீடு | 800,000 | |
| சேவை வழங்கல் வருமானம் | 550,000 | |
| வங்கியிடமிருந்து பெற்ற கடன் | 1,500,000 | |
| மொத்தக் காசு உட்பாய்ச்சல் | | 2,850,000 |
| **காசு வெளிப்பாய்ச்சல்கள்** | | |
| எழுதுகருவிச் செலவுகளுக்கான கொடுப்பனவுகள் | 10,000 | |
| மோட்டார் பழுதுபார்த்தல் செலவுகள் | 50,000 | |
| மோட்டார் பராமரிப்புச் செலவுகள் | 40,000 | |
| மோட்டார் வாகனக் கொள்வனவு | 1,000,000 | |
| பணியாளர் சம்பளக் கொடுப்பனவுகள் | 120,000 | |
| கடன் வட்டி செலுத்தல் | 150,000 | |
| ஏனைய செலவுகளுக்கான கொடுப்பனவுகள் | 25,000 | |
| சந்தை ஆய்வுச் செலவுகள் | 12,000 | |
| மொத்தக் காசு வெளிப்பாய்ச்சல்கள் | | (1,407,,000) |
| காசில் ஏற்பட்ட தேறிய மாற்றம் | | 1,443,000 |

- இத்தேர்ச்சி மட்டத்திற்கான கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கின்போது விடயம் சார்ந்த அல்லது கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகையிலான வினாக்களைப் பயன்படுத்தி பொருத்தமான மதிப்பீடுகளை மாணவர்களுக்கு வழங்கவும்.

உதாரணம் :

நளினா புத்தகசாலையின் 2015ஆம் ஆண்டிற்கான உத்தேச தகவல்கள் பின்வருமாறு:

| | ரூபா |
|---|---|
| புத்தகக் கொள்வனவு | 40,000 |
| புத்தகங்கள் கடனுக்கு கொள்வனவு | 25,000 |
| போக்குவரத்துச் செலவுக் கொடுப்பனவு | 4,000 |
| கொடுத்த சம்பளம் | 6,000 |
| மின்சாரப் பட்டியலுக்கான கொடுப்பனவு | 1,200 |
| மரத்திலான அடுக்கணி கொள்வனவு | 10,000 |
| புத்தகங்கள், எழுதுகருவிகள் விற்பனை மூலம் பெறுவனவு | 125,000 |

- உத்தேச காசு உட்பாய்ச்ச்ல், காசு வெளிப்பாய்ச்சல் தொடர்பான மதிப்பீடொன்றைத் தயாரிக்கவும்.

**முதன்மைப் பதங்கள் / எண்ணக்கரு :**

- காசு உட்பாய்ச்சல்.
- காசு வெளிப்பாய்ச்சல்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- தரம் 11 இன் பாடநூலில் குறித்த பாட அலகு.
- இணைப்பு 5.7.1 இற்குரிய குழுத் தேடியறிதல் ஆலோசனைப் பத்திரம்
- இணைப்பு 5.7.2 இற்குரிய சாரங்கன் சுற்றுலாச் சேவை விடய ஆய்வின் பிரதிகள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- காசு உட்பாய்ச்சல், காசு வெளிப்பாய்ச்சல் அட்டவணையொன்றில் உள்ளடக்கப்படுகின்ற உருப்படிகளைப் பெயரிடுவார்.
- வழங்கப்பட்ட வணிகமொன்றின் தகவல்களினூடாக காசு உட்பாய்ச்சல், காசு வெளிப்பாய்ச்சல் தொடர்பான மதிப்பீடொன்றைத் தயாரிப்பார்.
- காசு உட்பாய்ச்சல், காசு வெளிப்பாய்ச்சல் என்பவற்றைக் கருத்திற் கொண்டு தேறிய காசில் ஏற்பட்ட வேறுபாட்டினைக் கணிப்பிடுவார்.

இணைப்பு 5.7.1

**குழுத் தேடியறிதல் ஆலோசனைகள்**

**“உள்வரும், வெளிச் செல்லும் காசு”**

- உங்களுக்கு கிடைத்த சாரங்கா சுற்றுலா சேவை வணிகத்திற்கான வாசிப்பபுப் படிவத்தை நன்றாக வாசித்து விளங்கிக் கொள்ளவும்.
- பின்வரும் தலைப்புக்களில் உங்கள் குழுவிற்குக் கிடைக்கும் தலைப்பின் மீது கவனஞ் செலுத்தவும்.
    - வணிகத்தினுள் காசு உட்பாய்தல்.
    - வணிகத்திலிருந்து காசு வெளிப்பாய்தல்.
- உங்களின் தலைப்பிற்குரிய உருப்படிகளை சாரங்கன் சுற்றுலாச் சேவை வணிகத்திலிருந்து வெளிப்படுத்திக் காட்டவும்.
- மொத்த காசு உட்பாய்ச்சல், காசு வெளிப்பாய்ச்சல் என்பவற்றைக் கருத்திற் கொண்டு தேறிய காசு மீதியினைக் கணிக்கவும்.
- பொருத்தமான மாதிரியொன்றினூடாக உங்களது ஆக்கங்களை முழு வகுப்பிற்கும் முன்வைப்பதற்கு ஆயத்தமாகவும்.

இணைப்பு 5.7.2

**"சாரங்கன் சுற்றுலாச் சேவை"**

- சாரங்கன் சுற்றலாச் சேவையினை ஆரம்பிப்பதற்கு ஜோசப் பெர்ணான்டோ எண்ணியுள்ளார். இவர் வேறு வணிக நடவடிக்கைகளிலும் ஈடுபடும் அதேவேளை இதன் மேலதிக படிமுறையாக போக்குவரத்துச் சேவையினையும் நடாத்திச் செல்வதற்கு எண்ணுகிறார். இதற்கான உத்தேசத் தகவல்கள் பின்வருமாறு :

  உரிமையாளர் ரூபா 800,000 மூலதனமிட்டு வணிகத்தை ஆரம்பித்தார். அம்முதலீடு போதாமையினால் வங்கியிலிருந்து 10% வருட வட்டியில் ரூபா 1,500,000 வங்கிக் கடனைப் பெறுவதற்குத் திட்டமிட்டுள்ளார். சேவை வழங்கல் மூலம் வருடாந்த வருமானம் காசாக 550,000 உம் கடனாக ரூபா 150,000 உம் கிடைக்கும் என அவர் எதிர்பார்க்கின்றார்.

  ரூபா 2,000,000 இற்கு வாகனமொன்றைக் கொள்வனவு செய்ததுடன், அதில் ரூபா 1,000,000 ஐ உடன் காசாகச் செலுத்தியதுடன், எஞ்சிய தொகையினை பின்னர் செலுத்துவதற்கும் திட்டமிட்டுள்ளார். எழுதுகருவிச் செலவுகள் ரூபா 12500 ஆக காணப்படுவதுடன், அதில் ரூபா 10000 காசாக உடன் செலுத்தப்பட்டதுடன் எஞ்சிய தொகையினை பின்னர் செலுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளார். வாகனப் பராமரிப்பு, மற்றும் வாகன பழுதுபார்த்தலுக்காக முறையே ரூபா 40,000 ரூபா 50,000 செலவுகள் ஏற்படுமெனவும் ஊழியர் சம்பளத்திற்கு ரூபா 120,000உம், கடனுக்கான வட்டி ரூபா 150,000 ஏற்படுமெனவும் மதிப்பிட்டுள்ளார். மோட்டார் வாகனத்திற்காகக் கொள்விலையில் வருடாந்தப் பெறுமானத் தேய்வாக 20% இனை மேற்கொள்வதற்கு எண்ணியுள்ள அதேவேளை, ஏனைய செலவுகளுக்கு ரூபா 25,000 உம் சந்தை ஆய்விற்கு ரூபா 12,000 உம் செலவாகுமென அவர் கருதுகின்றார்.

**தேர்ச்சி 5.0** : வணிகமொன்றை ஆரம்பிப்பதற்காகதத் திட்டமொன்றைத் தயாரிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 5.8 :** உத்தேச வருமானங்கள் செலவுகளைக் கருத்திற்கொண்டு வணிக நடவடிக்கைகளின் பெறுபேற்றினைக் கணிப்பிடுவார்.

**பாடவேளைகள்** : 06

**கற்றற் பேறுகள்** :

இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாடவேளையின் இறுதியில் மாணவர்கள்

- குறித்த காலப் பகுதியொன்றின் வணிகப் பெறுபேற்றினைக் கணிப்பதற்குத் தேவையான உருப்படிகளை உதாரணங்களுடன் சுட்டிக்காட்டுவார்.
- வழங்கப்பட்ட வணிகமொன்றின் பெறுபேற்றினைக் கணிப்பதற்குத் தேவையான உருப்படிகளை பெறுமானங்களுடன் சுட்டிக்காட்டுவார்.
- வழங்கப்பட்ட வணிகமொன்றின் குறித்த காலப்பகுதியொன்றிற்கான பெறுபேற்றினைக் கணிப்பிடுவார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :

இத்தேர்ச்சி மட்டத்திற்கான பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற பாட உள்ளடகத்தினையும், அதனுடன் தொடர்புடையதாக பாடநூலில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடவிடயங்கள் தொடர்பாகவும் கூடிய விளக்கமொன்றைப் பெற்றுக் கொள்ளவும். அதன் பின்னர் கீழே குறிப்பிடப்படுகின்ற ஆலோசனைகள் தொடர்பில் கவனஞ் செலுத்தவும்.

- இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாட அலகில் ஆரம்பத்தில் பிரவேசிக்கும்போது இணைப்பு 5.8.1 இல் காணப்படும் ‘‘ஜீவாவின் இளநீர் வணிகம்’’விடய ஆய்வினை வகுப்பில் முன்வைத்து அதில் காணப்படுகின்ற வருமானங்கள், செலவுகளைக் கவனத்திற் கொண்டு நாளொன்றிற்கான இலாபத்தைக் கணிப்பதில் மாணவர்களை ஈடுபடுத்தவும்.
- பின்னர் வருமானங்கள், செலவுகள் என்பன தொடர்பிலான எண்ணக்கரு பற்றி மாணவர்களுக்குச் சரியான விளக்கத்தை வழங்கவும். இங்கு வணிகமொன்றின் வருமானக்கூற்றினைத் தயாரிக்கும் போது கவனத்திற் கொள்ளப்படும் உருப்படிகள் தொடர்பாகவும் மாணவர்களுக்குப் போதுமானளவு விளக்கத்தை வழங்கவும்.
- வணிகத் திட்டத்திற்காக தேறிய இலாபத்தினை மதிப்பீடு செய்யும்போது குறித்த காலப்பகுதிக்கான வணிகத்தின் மொத்த விற்பனைகள் கிரயம், செலுத்த வேண்டிய வரி என்பவை கவனத்திற் கொள்ளப்பட வேண்டும் என்பதை மாணவர்களுக்கு அறியச் செய்யவும்.
- உற்பத்திக் கிரயம், உற்பத்தியல்லாக் கிரயம் போன்ற உருப்படிகளின் சேர்க்கையே மொத்தக் கிரயம் என்பதை தெளிவுபடுத்தவும்.
- வணிகத் திட்டத்திற்காக தேறிய இலாபத்தை மதிப்பீடு செய்யும் போது குறித்த காலமொன்றிற்காக வணிகத்தின் மொத்த விற்பனைகள், மொத்தக் கிரயம் என்பவை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதனையும் இதில் உற்பத்திக்கிரயம், உற்பத்தியல்லாத கிரயம் போன்ற உருப்படிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் அறியச் செய்யவும்.
- இணைப்பு 5.8.2 இல் உள்ளடக்கப்பட்டுள்ள ராம சாமி வணிகம் எனும் விடய ஆய்வினைக் கருத்திற் கொள்ளவும்.

- ராமசாமி வணிகத்தின் தகவல்களிலிருந்து தேறிய இலாபத்தைப் பின்வருமாறு மதிப்பீடு செய்ய முடியும் என்பதைச் சுட்டிக்காட்டவும்.

| **மதிப்பிடப்பட்ட வருமானக்கூற்று** | **ரூபா** | **ரூபா** |
|---|---|---|
| விற்பனை வருமானங்கள் | | 150,000 |
| **கழி : மொத்த உற்பத்திக் கிரயங்கள்** | | |
| மூலப்பொருள் கிரயம் | 75,000 | |
| கூலிக் கிரயம் | 20,000 | |
| ஏனைய செலவுக் கிரயம் | 15,000 | (110,000) |
| | | 40,000 |
| **கழி : மொத்த உற்பத்தியல்லாத கிரயங்கள்** | | |
| விற்பனை விநியோகக் கிரயம் | 3,000 | |
| நிர்வாகச் செலவுகள் | 2,000 | |
| நிதிச் செலவுகள் (கடன் வட்டி) | 5,000 | |
| பதிவழிக்கப்பட்ட செயற்பாட்டிற்கு முன்னரான செலவுகள் | 3,000 | (13,000) |
| **தேறிய இலாபம்** | | 27,000 |

- மேற்குறிப்பிட்ட செயற்பாட்டின் பின்னர் இணைப்பு 5.8.4 இலுள்ள ''பிரபா வணிகம் '' எனும் விடய ஆய்வினை மாணவர்ளுக்கு வழங்கி இணைப்பு 5.8.3 இல் குறிப்பிடப்படும் தேடியறிதலில் ஈடுபடவும்.
- இத்தேர்ச்சி மட்டத்திற்கான கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கின்போது விடயம் சார்ந்த அல்லது கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகையிலான வினாக்களைப் பயன்படுத்தி பொருத்தமான மதிப்பீடொன்றினை மாணவர்களுக்கு வழங்கவும்.

  உதாரணம் : சுமதி தொடர்பாடல் நிறுவனத்தின் எதிர்வரும் காலப்பகுதிக்கான தகவல்கள் பின்வருமாறு

| | ரூபா |
|---|---|
| சேவை வழங்கலினால் கிடைத்த வருமானம் | 60,000 |
| எழுதுகருவிகள். | 20,000 |
| ஊழியர் சம்பளம் | 15,000 |
| மின்சாரக் கட்டணம் | 2,000 |
| கடன் வட்டி | 10,000 |
| விளம்பரச் செலவுகள் | 500 |
| பதிவழிக்கப்பட்ட செயற்பாட்டிற்கு முன்னரான செலவுகள் | 500 |

''சுமதி வணிகத்தின் '' தகவல்களிலிருந்து தேறிய இலாபத்தை மதிப்பீடு செய்து சமர்ப்பிக்கவும்.

**முதன்மைப் பதங்கள் / எண்ணக்கரு :**

- வணிகப் பெறுபேறு
- வருமானங்கள்
- செலவுகள்
- உத்தேச இலாபம்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- தரம் 11 இன் பாடநூலில் குறித்த பாட அலகு
- இணைப்பு 5.8.1 இல் உள்ள ''ஜீவாவின் இளநீர் வணிகம்'' விடய ஆய்வின் பிரதிகள்
- இணைப்பு 5.8.2 இல் உள்ளடக்கப்பட்டுள்ள ''ராமசாமி வணிகம்'' என்ற விடய ஆய்வு பிரதிகள்
- இணைப்பு 5.8.3 இல் உள்ள சுமதி வணிகம் விடய ஆய்வின் பிரதிகள்.
- இணைப்பு 5.8.4 உள்ளடக்கப்பட்டுள்ள ''பிரபா வணிகம் '' விடய ஆய்வின் பிரதிகள்

**கணிப்பீட்டு மதிப்பீடு நியதிகள் :**

- வணிகமொன்றின் பெறுபேற்றினை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் செயற்பாட்டுத் தகவல்களை முன்வைப்பார்.
- வழங்கப்பட்ட தகவல்களைக் கவனத்திற் கொண்டு வணிகத் திட்டமொன்றிற்கான மதிப்பிடப்பட்ட வருமானக் கூற்றொன்றினைத் தயாரிப்பார்.
- வணிகமொன்றின் மொத்த வருமானம் அல்லது செலவுகள் அதிகரித்தல் அல்லது குறைதலுக்கான காரணங்களை முன்வைப்பார்.

## "ஜீவாவின் இளநீர் வணிகம்"

- உலகில் நம்பகத்தன்மை கொண்ட தரமான பானமொன்றாக செவ்விள நீர் காணப்படுகின்றது. தற்காலச் சந்தையில் செவ்விள நீருக்கான சிறந்த கேள்வி நிலைமைகள் காணப்படுவதை அறிந்த ஜீவா தனது வீட்டுக்கருகில் அமைந்துள்ள செவ்விளநீர்த் தோட்டங்களிலிருந்து சில செவ்விள நீர் குலைகளை கொள்வனவு செய்து வாராந்தச் சந்தைக்குக் கொண்டு சென்று விற்பனை செய்கின்றார். வியாபாரம் நடைபெறும் நாளொன்றிற்கான தகவல்கள் பின்வருமாறு

    - செவ்விள நீர் காய் ஒன்றின் கொள்வனவு விலை ரூபா 10.
    - கொள்வனவு செய்யப்பட்ட காய்களின் எண்ணிக்கை 500 காய்கள்.
    - செவ்விள நீர் காய் ஒன்றின் விற்பனை விலை ரூபா 20
    - போக்குவரத்துச் செலவுகள் ரூபா 700
    - சந்தைக் கட்டணம் (வரி) ரூபா 200
    - இடத்தைத் துப்பரவு செய்வதற்காக ஊழியருக்கு வழங்கப்பட்ட கூலி ரூபா 100

## "ராமசாமி வணிகம்"

- பித்தளையால் செய்யப்பட்ட கதவு இடுக்கிகளையும், கொழுவிகளையும் உற்பத்தி செய்யும் வணிகமொன்றை நடாத்திச் செல்லும் ராமசாமி அவ்வணிகத்தினை விருத்தி செய்யும் பொருட்டு வணிகத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும் என தீர்மானித்தார். இதற்காக முயற்சியாண்மைப் பாடத்துடன் தொடர்புடைய ஆலோசகர் ஒருவரை சந்தித்து அவர் வழங்கிய ஆலோசனைனக்கேற்ப தனது வணிகத்தின் தேறிய இலாபத்தை மதிப்பிட வேண்டிய தேவை அவருக்கு ஏற்பட்டது. இதற்காக பின்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றன.

| **உருப்படிகள்** | | **பெறுமதி ரூபா** |
|---|---|---|
| • விற்பனை வருமானங்கள் | | 150,000 |
| • <u>மூலப்பொருள் கிரயம்</u> | | |
| பித்தளை | 70,000 | |
| இரசாயனப் பொருட்கள். | 2,000 | |
| ஏனையவை | 3,000 | 75,000 |
| • கூலிக்கிரயம் | | |
| • பயிற்சி பெற்ற ஊழியர் சம்பளம் | | 12,000 |
| • பயிற்சி பெறாத ஊழியர் சம்பளம் | | 8,000 |
| • நேரில் ஏனைய செலவுகள் | | 15,000 |
| • விற்பனை விநியோகச் செலவுகள் | | 3,000 |
| • நிர்வாகச் செலவுகள் | | 2,000 |
| • நிதிச் செலவுகள் (கடன் வட்டி) | | 5,000 |
| • செயற்பாட்டுக்கு முன்னரான செலவுகள் | | 3,000 |

- கட்டளைகளைப் பெற்று உற்பத்தி செய்யும் போது எஞ்சிய இருப்புக்கள் காணப்படுவதில்லை.

## “குழுத் தேடியறிதலுக்கான ஆலோசனைப் பத்திரம்

**செலவுகள் வருமானங்களைச் செம்மைப்படுத்தி இலாபத்தைக் கணிப்போம்.**

- இணைப்பு 5.8.4இல் உள்ளடக்கப்பட்ட “பிரபா வணிகத்தின்” விடய ஆய்வின் விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளவும்.
- இவ்வணிகம் தொடர்பில் கவனம் செலுத்தி உங்களது உற்பத்திப் பொருட்களுக்குரிய பின்வரும் தகவல்களை இனங்காணுங்கள்.
  - ஒரு மாதத்தில் விற்பனை செய்வதற்கு எதிர்பார்க்கும் உற்பத்திப் பொருட்களின் அளவு.
  - அத்தொகையினை உற்பத்தி செய்வதற்காக நேரடியாக மேற்கொள்ளப்படும். செலவுகளாவன.
    - மூலப்பொருட்களுக்கான செலவுகள்.
    - ஊழியர்களுக்கான செலவுகள்.
    - உற்பத்தி செய்யப்படும் அளவுகளுக்கு நேரடியாக பங்களிப்புச் செய்யாத கூலியும் மற்றும் ஏனைய செலவுகளின் வகைகள்.
    - விற்பனை விநியோகச் செலவுகள்.
    - நிர்வாகச் செலவுகள்
    - நிதிச் செலவுகள்
- பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் ஒரு மாதத்திற்குக் கிடைக்கும் மொத்த விற்பனை வருமானம்
- விற்பனை வருமானம் மொத்தச் செலவுகள் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு மாதத்திற்கான இலாபத்தினைக் கணிப்பிட்டுக் காட்டுங்கள்.
- உங்களது தேடியறிதல்களை முழு வகுப்பிலும் முன்வைப்பதற்கு ஆயத்தப்படுத்தச் செய்யவும்.

## “பிரபா வணிகம்”

சமைக்கப்பட்ட உணவு வகைகளை வீடுகளுக்குக் கொண்டு சென்ற விற்பனை செய்யும் வணிகமொன்று தொடர்பாக அறிந்து கொண்ட வினீதா என்பவர் அது தொடர்பிலான வணிகமொன்றினை ஆரம்பிப்பதற்கு எண்ணம் கொண்டார். அவளது சித்தி இடியப்பம் விற்பனை செய்யும் வணிகமொன்றை நடத்திச் சென்றமையினால் அவ்வனுபவங்களும் அவளிடம் காணப்பட்டது. சந்தை தொடர்பாக ஆய்வு செய்த போது பின்வரும் தகவல்கள் தொடர்பான விபரங்களையும் அறிந்து கொள்ள முடிந்தது.

| | இடியப்பம் | அப்பம் | முட்டை அப்பம் |
|---|---|---|---|
| நாளொன்றில் விற்பனை செய்யக்கூடிய அளவு | 3,000 | 500 | 50 |
| அலகொன்றின் விற்பனை விலை | 2.50 | ரூ.10 | ரூ.30 |
| தேவையான மாவின் அளவு | 50கி.கி | 10 கி. கி | |

**நாளொன்றுக்குத் தேவைப்படும் பொருட்கள்**

| | ரூபா |
|---|---|
| ஒரு கிலோ அரிசி மாவின் விலை | 75 |
| முட்டையொன்றின் விலை | 12 |
| தேங்காயொன்றின் விலை | 50 (10 தேங்காய்கள் தேவைப்படுகிறது) |

**ஏனைய செலவுகள்**

நாளொன்றிற்குச் சம்பளமாக ரூபா 1000 வீதம் இரு ஊழியர்கள் தேவைப்படுகின்றனர்.

| | |
|---|---|
| எண்ணெய் செலவுகள் நாளொன்றிற்கு | ரூபா 5000 |
| ஏனைய செலவுகள் நாளொன்றிற்கு | ரூபா 600 |
| கட்டட வாடகை மாதத்திற்கு | ரூபா 1500 |
| நீர்க்கட்டணம் மாதத்திற்கு | ரூபா 1200 |
| மின்சாரக் கட்டணம் மாதத்தற்கு | ரூபா 1800 |
| வங்கிக் கடன்வட்டி | ரூபா 1200 (உத்தேச கடனுக்கு) |
| வணிகத்தின் விளம்பரப் பதாதைக்கு | ரூபா 1500 |
| உபகரணத்தின் பெறுமானம் | ரூபா 20000 (வருடப் பெறுமானத் தேய்வு 20%) |
| வணிகத்தின் உரிமையாளரின் பங்களிப்பிற்காக நாளொன்றுக்கு | ரூபா 2000 ஒதுக்கப்படும். |

**தேர்ச்சி 6.0 :** வணிகத்தைஆரம்பிப்பதற்கு பொருத்தமான வணிக அமைப்புக்களைத் தேடியறிவார்.

**தேர்ச்சி மட்டம் 6.1 :** வணிக அமைப்பு வகைகளை அறிந்து கொள்வார்.

**பாடவேளைகள் :** 03

**கற்றற் பேறுகள் :**


இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாட வேளைகளின் இறுதியில் மாணவர்கள்.

- வணிக அமைப்புக்களை உதாரணங்களுடன் விளக்குவார்.
- வணிக அமைப்புக்களை அவற்றின் நோக்கத்தின் அடிப்படையில் வகைப்படுத்தி அதற்காக உதாரணங்களைச் சுட்டிக்காட்டுவார்.
- வணிக அமைப்புக்கான உரிமையின் அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுவார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :

இத்தேர்ச்சி மட்டத்திற்கான பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற பாட உள்ளடக்கத்தினையும், அதனுடன் தொடர்புடையதாக பாடநூலில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடவிடயங்கள் தொடர்பாகவும் கூடிய விளக்கமொன்றைப் பெற்றுக் கொள்ளவும். அதன் பின்னர் கீழே குறிப்பிடப்படுகின்ற ஆலோசனைகள் தொடர்பில் கவனம் செலுத்தவும்.

- இத்தேர்ச்சி மட்டத்திற்கேற்ப ஆரம்பத்தில் பாடஅலகில் பிரவேசிக்கும் போது பாடசாலையை உதாரணமாகக் கொண்டு அமைப்புக்கள் தொடர்பாக தெளிவுபடுத்தலாம். பின்னர் பிரதேசத்தில் காணப்படுகின்ற அரச, மற்றும் தனியார் துறை வணிக அமைப்புக்களுக்கான உதாரணங்களை முன்வைக்கவும்.
- இதற்கமைய ஏதேனும் நோக்கமொன்றை நிறைவேற்றும் எதிர்பார்ப்புடன் செயற்படுகின்ற குழுவொன்றே அமைப்பாகும் என அறிமுகப்படுத்தவும்.
- வணிக அமைப்புக்களை வகைப்படுத்தி விளக்குவதற்குப் பின்வரும் பாய்ச்சல் கோட்டு அட்டவணையைப் பயன்படுத்தவும்.



- மேற்காட்டிய பாய்ச்சல் கோட்டு அட்டவணையில் ஒவ்வொரு வணிகத்துறைகளின் கீழ் செயற்படும் வணிகங்களுக்கான உதாரணங்களை முன்வைக்கவும்.
- தனியார் துறை வணிகம் தொடர்பாக இதன் பின்னர் கூடுதலாக கலந்துரையாடப்படுவதனால் இங்கு எளிமையான அறிமுகமொன்றை மாத்திரம் முன்வைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- பொதுத்துறை வணிகங்கள் தொடர்பில் இம்மட்டத்தில் கலந்துரையாடவுள்ளதனால் மாட்டாது என்பதைக் கருத்திற் கொள்ளவும்.
- இத்தேர்ச்சி மட்டத்தில் கற்றல் கற்பித்தல் செயலொழுங்கின் போது விடயம் சார்ந்த அல்லது கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகையிலான வினாக்களைப் பயன்படுத்தி பொருத்தமான மதிப்பீடொன்றை உருவாக்கவும்.

  உதாரணம் :
    - வணிக அமைப்புக்களை நோக்கத்தின் அடிப்படையிலும், உரிமையின் அடிப்படையிலும் வகைப்படுத்திக் காட்டுங்கள்.
    - இலாப நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்புக்களுக்கும் சமூக நலன்புரியை நோக்கமாகக் கொண்ட அமைப்புக்களுக்கும் 3 உதாரணங்கள் வீதம் முன்வைக்கவும்.

**முதன்மைப் பதங்கள் / எண்ணக்கரு :**

- வணிக அமைப்புக்கள்
- இலாபத்தை நோக்காகக் கொண்ட வணிகங்கள்
- சமூக நலன்புரியை நோக்காகக் கொண்ட வணிகங்கள்
- அங்கீகார வணிகம்
- தனியாள் உரிமை வணிகம்
- பங்குடமை வணிகம்
- கூட்டிணைக்கப்பட்ட வணிகங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- தரம் 11 இன் பாடநூலில் குறித்த பாட அலகு
- வணிக அமைப்பினை வகைப்படுத்தலைக் காட்சிப்படுத்தக்கூடிய பாய்ச்சல் கோட்டு அட்டவணை.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- வணிக அமைப்புக்களை அறிமுகப்படுத்துவார்.
- வணிக அமைப்புக்களை வகைப்படுத்திக் காட்டுவார்.
- வணிக அமைப்புக்களுக்கான உதாரணங்களைக் குறிப்பிடுவார்.

**தேர்ச்சி 6.0** : வணிகத்தை ஆரம்பிப்பதற்குப் பொருத்தமான வணிக அமைப்புக்களைத் தேடியறிவார்.

**தேர்ச்சி மட்டம் 6.2** : தனியாள் உரிமை வணிக அமைப்பை அறிந்து கொள்வார்.

**பாடவேளைகள்** : 06

**கற்றற் பேறுகள்** :

இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாட வேளைகளின் இறுதியில் மாணவர்கள்.

- தனியாளுரிமை வணிகங்களின் அடிப்படைப் பண்புகளுக்கான உதாரணங்களைக் குறிப்பிடுவார்.
- தனியாளுரிமை வணிகங்களை ஆரம்பிப்பதற்கான விதிமுறைகளை விளக்குவார்.
- தனியாளுரிமை வணிகங்களில் காணப்படும் அனுகூலங்கள், வரையறைகளை முன்வைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :**

இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாடத்திட்டத்திலுள்ள பாட விடயத்தினையும் அதனுடன் தொடர்புடைய பாட நூலில் உள்ளடக்கப்பட்டு பாட விடயங்கள் தொடர்பாகவும் சிறந்த விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ளவும். பின்னர் பின்வரும் ஆலோசனைகள் மீது கவனம் செலுத்தவும்.

- இத்தேர்ச்சி மட்டத்திற்கு முதலாவது பாடஅலகில் பிரவேசிக்கும் போது மாணவர்கள் அறிந்த வணிகங்கள் தொடர்பில் அவர்களிடம் கேட்டறிய முடியும். மாணவர்களின் துலங்கல்களை கரும்பலகையில் எழுதிக் கொள்ளவும். அத்தகவல்களின் துணையுடன் தனியாள் உரிமை வணிகங்களை இனங்கண்டு அதனை மாணவர்களுக்கு முன்வைக்கவும்.
- அதன் பின்னர் தனியொருவரின் உரிமை, முகாமை என்பவற்றின் கீழ் நடத்திச் செல்லப்படும் வணிக அமைப்பு தனியாள் உரிமை வணிகமாகும் என்பதை அவர்களுக்கு விளக்கவும். இவ்வணிகம் அதிகமாகக் காணப்படுவதுடன் மிக இலகுவாக ஆரம்பித்து நடத்திச் செல்ல முடியும் என்பதை விளக்கவும்.
- தனியாள் உரிமை வணிகத்தின் அடிப்படைப் பண்புகள், அதன் நன்மைகள், தீமைகள் என்பன தொடர்பில் மாணவர்களுக்கு விளக்கத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக இணைப்பு 6.2.1 இல் உள்ளடக்கப்பட்டுள்ள தேடியறிதல் ஆலோசனைப் பத்திரத்தையும் இணைப்பு 6.2.2 இல் உள்ள விடய ஆய்வினையும் மாணவர் குழுக்களுக்கும் பெற்றுக் கொடுத்து செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.
- மாணவர்களின் தேடியறிதல்களை முன்வைத்தன் பின்னர் தனியாள் உரிமை வணிகங்களின் அடிப்படைப் பண்புகளையும் அவற்றில் காணப்படுகின்ற அனுகூலங்கள், பிரதிகூலங்கள் தொடர்பிலும் மாணவர்களுக்குத் தெளிவான விளக்கமொன்றை வழங்கவும்.
- இத்தேர்ச்சி மட்டத்தின் கீழ் கற்றல் கற்பித்தல் செயலொழுங்கின் போது விடயம் சார்ந்த அல்லது கட்டமைக்கப்பட்ட வினாக்களைப் பயன்படுத்திப் பொருத்தமான மதிப்பீடுகளை மாணவர்களுக்கு வழங்கவும்.

உதாரணம் :

பின்வரும் கூற்றுக்களில் தனியாள் உரிமை வணிகத்துடன் தொடர்புடைய எத்தகைய அடிப்படைப் பண்புகளுடன் ஒத்துப் போகின்றது.

1. வணிகத்தின் உரிமையாளரின் பெயரில் வழக்குத் தொடர்தல்.
2. வெளிக் கடன்களை தீர்ப்பதற்காக தனது சொத்துக்களை இழக்க வேண்டியேற்படல்
3. வணிகத்தின் உரிமையாளர் இறப்பாராயின் அவரின் வணிக நடவடிக்கைகள் தடைப்படும்.

- நீங்கள் வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு ஆயத்தமாயுள்ளீர்கள் எனக் கருதவும். அதனை தனியாளுரிமை வணிகமொன்றாக நடத்திச் செல்வதனால் உங்களுக்கு கிடைக்கக்கூடிய அனுகூலங்கள், பிரதிகூலங்களை தலா 03 வீதம் எழுதிக் காட்டுங்கள்.

**முதன்மைப் பதங்கள் / எண்ணக்கரு :**

- பொறுப்புக்கள்.
- சட்ட ரீதியான தனி மனித அந்தஸ்து
- உரிமை
- மூலதனத்தைப் பெற்றுக் கொள்ளல்.
- நிலைப்புத் தன்மை
- பதிவு செய்தல்
- முகாமைத்துவம்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- 11ஆம் ஆண்டு பாடநூலில் குறித்த பாட அலகு
- குழுத் தேடியறிதல் ஆலோசனைப் படிவத்தின் பிரதிகளையும் இணைப்பு 6.2.2. இன் பிரதிகள்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- தனியாளுரிமை வணிகத்தினை அறிமுகப்படுத்துவார்.
- தனியாளுரிமை வணிகத்தில் காணப்படக்கூடிய அடிப்படைப் பண்புகளை வெளிப்படுத்துவார்.
- தனியாளுரிமை வணிகங்களுக்கே உரித்தான சாதக, பாதகப் பண்புகளைச் சுட்டிக்காட்டுவார்.

இணைப்பு 6.2.1

## குழுத் தேடியறிதலுக்கான ஆலோசனைகள்

- ஊடகவியலாளர்களுக்கும், முயற்சியாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடலை நன்றாக வாசித்து பின்வரும் விடயங்களில் விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளவும்.
- ஜபின் வணிகத்தில் காணக்கூடிய பண்புகள் யாவை?
  - அக்கலந்துரையாடலில் வெளிப்படும் வணிகத்துடன் தொடர்புடைய சிறந்த பண்புகள் எவை?
  - அவ்வணிகத்துடன் இணைந்த பாதகமான பண்புகள் எவை?
  - நீங்கள் ஜபீன் ஆயின் ஊடகவியலாளர் வினவிய வினாக்களுக்கு மேலதிகமாக வழங்கக்கூடிய விடைகளைக் குறிப்பிடுக.
- குழுக்களிடம் தேடல்களை வகுப்பறையில் முன் வைப்பதற்குத் தயாராகவும்.

இணைப்பு 6.2.2

இளம் முயற்சியாளர்களைத் தெரிவு செய்யும் போட்டியில் சிறந்த முயற்சியாளராகத் தெரிவு செய்யப்பட்ட ஜபீனுக்கும் ஊடகவியயாளருக்குமிடையே இடம்பெற்ற உரையாடலின் பகுதியொன்று கீழே தரப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் : நீங்கள் இதுவரை வணிகத்தை ஆரம்பித்து நடாத்தி வந்த வழிமுறையினை விளக்கினீர்கள். உங்கள் வணிகத்தின் பதிவு தொடர்பாக நான் அறிந்து கொள்ள விரும்புகின்றேன்.

ஜபீன் : ஆரம்பத்தில் நான் வணிகத்தைப் பதிவு செய்திருக்கவில்லை. ஆயினும் பிற்காலத்தில் இடம்பெற்ற சில விடயங்களின் காரணமாக பதிவு செய்தலின் முக்கியத்துவம் தொடர்பாக எனக்கு விளங்கியது. அதற்கமைய “ ஜபீன் அட்வடைசிங் “ எனும் பெயரில் சொந்த வணிகமொன்றாக பிரதேச செயலாளர் காரியாலயத்தில் பதிவு செய்தேன்.

ஊடகவியலாளர் : வணிகத்திற்குத் தேவையான நிதியினை எவ்வாறு பெற்றுக் கொண்டீர்.

ஜபீன் : எனது பெற்றோர்களிடம் பெற்றுக் கொண்ட பணம், வங்கியிலிருந்து பெற்ற பணம், வணிகக் கருமங்களினூடாகச் சேமித்த பணம் என்பவற்றை இதற்காகப் பயன்படுத்தினேன்.

ஊடகவியலாளர் : நீங்கள் தனியாக நடத்திச் செல்லும் வணிகமாக இருக்கிறது. இது தொடர்பில் உங்களது மனப்பாங்கு யாது?

ஜபீன் : நான் தான் வணிகத்தின் பொஸ் (Boss) வணிகத்தின் அனைத்துக் கருமங்களும் எனது அறிவிற்கமைய இடம்பெறுகின்றன. நான் பெற்ற கடனையும் ஏனைய கொடுப்பனவுகளையும் கொடுக்க வேண்டி உள்ளது. அவற்றை உரியவாறு மேற்கொள்கிறேன்.

ஊடகவியலாளர் : ஏதாவது எதிர்பாராத இடையூறொன்று ஏற்படுமாயின் உங்களது திட்டம் என்ன?

ஜபின் : அவ்வாறானதொரு இடரொன்று காணப்படுகின்றது. அதற்கு நான் இப்போதே குடும்பத்தில் இருக்குமொருவருக்கு வணிகக் கருமங்களை மேற்கொள்வதற்கான பயிற்சிகளையும் அனுபவங்களையும் வழங்கி வருகின்றறேன்.

ஊடகவியலாளர் : வணிகக் கருமங்களின் எதிர்காலம் தொடர்பில் நீங்கள் யாது குறிப்பிட விரும்புகிறீர்

ஜபின் : வணிகத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டும். அனைத்துக் கருமங்களையும் தானே செய்ய வேண்டி இருப்பதால் எனக்கு ஓய்வில்லை. வங்கிகளும் என் போன்ற தனியாக வணிகத்தை நடாத்திச் செல்லும் வியாபாரிகளுக்கும் உதவி செய்வதற்கு அக்கறை செலுத்துவதில்லை. அதிகமான ஊழியர்களை இணைத்து அவர்களுக்குச்சம்பளம் கொடுபபதும், சிரமமானது. எவ்வாறாயினும் வணிகத்தை விருத்தி செய்து கொள்வேன்.

**தேர்ச்சி 6.0** : வணிகத்தை ஆரம்பிப்பதற்குப் பொருத்தமான வணிக அமைப்புக்களைத் தேடியறிவார்.

**தேர்ச்சி மட்டம் 6.3** : பங்குடமை வணிக அமைப்பை அறிந்து கொள்வார்.

**பாடவேளைகள்** : 06

**கற்றற்பேறுகள்** :

இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாட வேளைகளின் இறுதியில் மாணவர்கள்.

- பங்குடமை வணிகங்களின் அடிப்படைப் பண்புகளுக்கான உதாரணங்களை வழங்குவார்.
- பங்குடமை வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கான விதிமுறைகளை விளக்குவார்.
- பங்குடமை வணிகங்களில் காணப்படும் அனுகூலங்களையும், வரையறைகளையும் முன்வைப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :

இத்தேர்ச்சி மட்டத்திற்கான பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற பாட உள்ளடகத்தினையும், அதனுடன் தொடர்புடையதாக பாடநூலில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடவிடயங்கள் தொடர்பாகவும் கூடிய விளக்கமொன்றைப் பெற்றுக் கொள்ளவும். அதன் பின்னர் கீழே குறிப்பிடப்படுகின்ற ஆலோசனைகள் தொடர்பில் கவனம் செலுத்தவும்.

- இத்தேர்ச்சி மட்டத்தில் ஆரம்பத்தில் பாட அலகில் பிரவேசிக்கும் போது இராகபவனும் - பாலனும்.

  ''இலாபம் பெருகுவதற்கு - நட்டமடையாதிருப்பதற்கும் நம்மிருவரும் வணிகமொன்றை நடத்துவோமா''

எனும் பாடலை மாணவர்களுக்கு நினைவிற்குக் கொண்டு வந்து அவ்வணிகத்தின் தன்மை தொடர்பான விளக்கத்தை வழங்கவும். அவ்வாறின்றேல் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கையொன்று தொடர்பாக நீங்கள் அறிந்த கவிதை /பாடல் /கதையொன்றையேனும் முன்வைக்க முடியும்.

- இருவர் அல்லது அதிலும் கூடிய நபர்கள் ஒன்றிணைந்து இலாபம் பெறும் எதிர்பார்ப்பில் நடாத்தப்படும் வணிகம் பங்குடமை வணிகம் என்றழைக்கப்படும்.
- பங்குடமை வணிகங்களின் அடிப்படைப் பண்புகள் தொடர்பான விளக்கத்தை மாணவர்களுக்கு வழங்குவதற்காக வேண்டி இணைப்பு 6.3.1 இல் உள்ளடக்கப்பட்டுள்ள குழுத் தேடியறிதல் ஆலோசனைப் பத்திரத்துடன் இணைப்பு 6.3.2 இல் உள்ளடக்கப்பட்டுள்ள விடய ஆய்வினையும் பயன்படுத்தி மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடச் செய்யவும்.
- மாணவர்களது தேடியறிதல்களைக் கவனத்திற் கொண்டு பங்குடமை வணிகமொன்றின் அடிப்படைப் பண்புகளையும் அவற்றின் அனுகூலங்கள், பிரதிகூலங்களை முன்வைக்கவும்.
- இத்தேர்ச்சி மட்டத்தினடிப்படையில் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கின் போது விடயம் சார்ந்த அல்லது கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகையிலான வினாக்களைப் பயன்படுத்திப் பொருத்தமான மதிப்பீடுகளை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கவும்.

  உதாரணம் :

  தனியாள் உரிமை வணிகத்துடன் ஒப்பிடும் பொழுது பங்குடமை வணிகமொன்றில் காணப்படும் சாதகமான பாதகமான பண்புகள் இரண்டு வீதம் சுட்டிக்காட்டவும்.

**முதன்மைப் பதங்கள் / எண்ணக்கரு :**

- பதிவு செய்தல்.
- உரிமை
- பொறுப்பு
- சட்ட ரீதியான தனி மனித அந்தஸ்து
- நிலைப்புத்தன்மை
- மூலதனமிடல்
- முகாமைத்துவம்.

## தரவிருத்தி உள்ளீடு

- தரம் 11 இற்கான பாடநூலில் குறித்த பாட அலகு
- இணைப்பு 6.3.1 இன் குழுத் தேடியறிதல் ஆலோசனைப்படிவம்
- இணைப்பு 6.3.2 மாயா மணமகள் அழகு நிலையம் - விடய ஆய்வு

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- தனியாள் உரிமை, பங்குடமை வணிகங்களது அடிப்படைப் பண்புகளை ஒப்பிடுவார்.
- பங்குடமை வணிகமொன்றில் காணப்படும் அடிப்படைப் பண்புகளை முன்வைப்பார்.
- பங்குடமை வணிகமொன்றில் காணப்படும் அனுகூலங்கள், பிரதிகூலங்களைச் சுட்டிக்காட்டுவார்.

இணைப்பு 6.3.1

### குழுத் தேடியறிதலுக்கான ஆலோசனைகள்

- ‘‘மாயா மணமகள்’’ எனும் விடய ஆய்வினை நன்றாக வாசிக்கவும்.
- அமலின் வணிகத்திற்கு நிஹாலை இணைத்துக் கொள்வதன் மூலம் கிடைக்கப்பெறும் பயன்கள் யாவை?
- வணிக நடவடிக்கைகள் தொடர்பாக அவர்கள் இருவரிடத்திலும் காணப்படும் பலம்கள் எவை?
- இவ்வணிகம் எவ்வாறான வகையில் மூலதனத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.
- இவ்வணிகமானது எவ்வகையான வணிக அமைப்பு வகையைச் சார்ந்தது. அதற்கான காரணங்களைச் சமர்ப்பிக்குக.
- இவ்வணிகத்தைப் பதிவு செய்தல் தொடர்பாக உங்களது கருத்துக்களை முன்வைக்கவும்.
- இவ்வணிகத்தின் எதிர்கால நிலைப்பாடு தொடர்பாக உங்களது கருத்துக்களை முன்வைக்கவும்.
- இவ்வாறான வணிகமொன்றை மேலும் வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்கு உங்களால் முன்வைக்கக் கூடிய ஆலோசனைகளைக் குறிப்பிடுங்கள்.
- உங்களது தேடியறிதல்களை முழு வகுப்பிலும் முன்வைக்கவும்.

இணைப்பு 6.3.2

## மாயா மணமகள் அழகு நிலையம்

உயர் தரக் கல்வியைக் கற்றதன் பின்னர் மாயா தனக்கே உரித்தான தொழிலொன்றாக சிகையலங்கார நிலைய வணிகமொன்றை ஆரம்பித்தார். சில காலத்தின் பின்னர் அழகுக் கலைப் பாட விதானத்தைக் கற்ற தனது தோழியான ரம்யாவையும் வணிக நடவடிக்கைகளில் இணைத்துக் கொண்டாள். இவ்விருவரினதும் ஒத்துழைப்பு ஒருமைப்பாடு அர்ப்பணிப்பு என்பன காரணமாக இவ்வணிகமானது நாளுக்கு நாள் விருத்தியடையலாயிற்று. அவர்களிருவரும் அவ்வணிகத்தை எவ்விதக் கருத்து முரண்பாடுகளுமின்றி நடத்திச் சென்றனர்.

அவ்வணிகத்திற்குச் சேவையை நாடிவருவோர்களின் எண்ணிக்கையானது நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதைக் கண்ட இவர்கள் இதனை மேலும் விருந்ததி செய்வதற்காகக் கடனொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்தார்கள். இதற்காக வணிகத்தைப் பதிவு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டதுடன் அக்கடன் ரம்யாவின் பெயரிலேயே பெற்றுக் கொள்ளப்பட்டது. அத்துடன் வணிக நடவடிக்கைகளுக்காக வணிகத்தின் பணத்தைக் கொண்டு மோட்டார் வானொன்றைக் கொள்வனவு செய்ததுடன் அது மாயாவின் பெயரிலேயே பதிவு செய்யப்பட்டது.

அவர்கள் சம்பளம் பெறாதவர்களாக இருந்ததுடன் வணிகத்தின் அனைத்துச் செலவுகளும் போக எஞ்சிய இலாபத்தினை அவர்களிருவரும் தமது இணக்கப்பாட்டிற்கமைய பகிர்ந்து கொண்டனர். எதிர்பாராத வகையில் ரம்யாவிற்கு ஏற்பட்ட அங்கவீனம் காரணமாக சிறிது காலம் வணிகத்திற்கு அவளது பங்களிப்பு கிடைக்காது போயிற்று. அத்துடன் இக்காலப்பகுதியினுள் பெற்றுக் கொண்ட வங்கிக் கடனைச் செலுத்த முடியாமல் போனதன் காரணமாக அதனை மாயாவின் சொந்தப் பணத்திலிருந்து செலுத்த வேண்டி ஏற்பட்டது. எவ்வாறாயினும் இவ்வணிகத்திற்கு மேலதிகமாகப் பணியாளர்களை இணைத்துக் கொண்டு மேலும் விருத்தி செய்து கொள்வதற்கு அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

**தேர்ச்சி 6.0** : வணிகத்தை ஆரம்பிப்பதற்கு பொருத்தமான வணிக அமைப்புக்களை தேடியறிவார்.

**தேர்ச்சி மட்டம் 6.4** : கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளை அறிந்து கொள்வார்.

**பாடவேளைகள்** : 06

**கற்றற் பேறுகள்** :

இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாட வேளைகளின் இறுதியில் மாணவர்கள்.

- கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றின் அடைப்படைப் பண்புகளுக்கான உதாரணங்களை குறிப்பிடுவார்.
- வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளை ஆரம்பிப்பதற்கான விதிமுறைகளை தெளிவுபடுத்துவார்.
- வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றில் காணப்படுகின்ற அனுகூலங்களையும், வரையறைகளையும் முன்வைப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :

இத்தேர்ச்சி மட்டத்திற்கான பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற பாட உள்ளடக்கத்தினையும், அதனுடன் தொடர்புடையதாக பாடநூலில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடவிடயங்கள் தொடர்பாகவும் கூடிய விளக்கமொன்றைப் பெற்றுக் கொளள்வும். அதன் பின்னர் கீழே குறிப்பிடப்படுகின்ற ஆலோசனைகள் தொடர்பில் கவனம் செலுத்தவும்.

- இத்தேர்ச்சி மட்டத்தின் கீழ் ஆரம்பத்தில் பாடத்தில் பிரவேசிக்கும் போது உங்களுக்குத் தெரிந்த கம்பனிகள் இரண்டினைக் கரும்பலகையில் எழுதிக்காட்டுங்கள். பின்னர் மாணவர்களுக்குத் தெரிந்த வேறு கம்பனிகளின் பெயர்களைக் கேட்டு எழுதிக் காட்டுங்கள்.
- அத்தகவல்களின் உதவியுடன் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் தொடர்பில் சிறிய கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளவும். அதேபோன்று வணிகத்தின் பெயர் வரையறுக்கப்பட்ட எனும் பதம் பயன்படுத்தப்பட்டிருப்பதனால் கம்பனி வகைகளை இலகுவாக அடையாளம் காணலாம் என்பதைக் குறிப்பிடுக.
- 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்ற வணிக நிறுவனங்கள் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாகும் என்பதனை அறிமுகப்படுத்துங்கள்.
- வரையறுக்கப்பட்ட பொறுப்பு சட்டத்தின் முன் தனி மனித அந்தஸ்து, நீடித்த வாழ்வு என்பவை கம்பனிகளில் காணப்படும் பிரதான பண்புகளாகும் என்பதை உறுதிப்படுத்துங்கள்.
- பல்வேறு வகையான கம்பனி வகைகள் காணப்பட்டாலும் இத்தேர்ச்சி மட்டத்தில் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் தொடர்பில் மாத்திரமே கவனம் செலுத்தப்படும் என்பதனை மாணவர்கள் அறியச் செய்யவும்.
- பின்னர் இணைப்பு 6.4.1 இல் உள்ளடக்கப்பட்டுள்ள தேடியறிதல் ஆலோசனைப் படிவத்தையும் இணைப்பு 6.4.2 உள்ளடக்கப்பபட்டுள்ள உரையாடலின் பிரதியினையும் குழுக்களுக்குப் பெற்றுக் கொடுத்து செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.
- மாணவர்களின் தேடியறிதல்களைக் கவனத்திற் கொண்டு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளின் அடிப்படைப் பண்புகள் தொடர்பாகவும், அவற்றின் அனுகூலங்கள் பிரதிகூலங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடவும்.

- இத்தேர்ச்சி மட்டத்தில் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கின் போது விடயம் சார்ந்த அல்லது கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகை வினாக்களைப் பயன்படுத்திப் பொருத்தமான மதிப்பீட்டினை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கவும்.

  உதாரணம் :

  - வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றின் அடிப்படைப் பண்புகளைப் பெயரிடவும்.
  - தனியாளுரிமை பங்குடமை வணிகங்களுடன் ஒப்பிடும் போது வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்று அவற்றிலிருந்து வேறுபடுகின்ற முறையினைப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் ஒப்பிட்டுக் காட்டுக.
    - பதிவு செய்தல்
    - உரிமை
    - பொறுப்பு
    - சட்ட ரீதியான தனி மனித அந்தஸ்து
    - நிலைப்புத்தன்மை
    - மூலதனத்தைத் திரட்டுதல்

**முதன்மைப் பதங்கள் / எண்ணக்கரு :**

- பதிவு செய்தல்
- உரிமை
- பொறுப்பு
- சட்ட ரீதியான தனிமனித அந்தஸ்து
- நிலைப்புத்தன்மை
- மூலதனத்தைத் திரட்டுதல்
- முகாமை
- தனியார் கம்பனிகள்

## தரவிருத்தி உள்ளீடுகள்

- தரம் 11 பாடநூலில் குறித்த பாட அலகு.
- இணைப்பு 6.4.1 இன் குழுத் தேடியறிதல் ஆலோசனைப் படிவம்
- இணைப்பு 6.4.2 இன் உரையாடலின் பிரதி

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- கூட்டிணைக்கப்பட்ட கம்பனியினை அறிமுகப்படுத்துவார்.
- பங்குடமைக்கும், வரையறுக்கப்பட்ட தனி கம்பனிகளுக்கும் இடையிலான வேறுபாடுகளை ஒப்பிடுவார்.
- வரையறுக்கப்பட்ட தனிக் கம்பனிகளில் காணப்படும் அனுகூலங்களையும், வரையறைகளையும் கலந்துரையாடுவார்.

இணைப்பு 6.4.1

## குழுத் தேடியறிதலுக்கான ஆலோசனைகள்

குமார் என்பவருக்கும் வணிக ஆலோசகரொருவருக்கு இடம்பெற்ற செவ்வியினை நன்றாக அவதானித்து பின்வரும் விடயங்கள் தொடர்பிலான தகவல்களை முன்வைக்கவும்.

1. உரையாடலுக்கு அடிப்படையாக அமைந்த வணிக வகைகள்
2. அவ்வமைப்பு வகைகளின் விசேட பண்புகள்
3. நீங்கள் இதற்கு முன்னர் கற்ற வணிக அமைப்புக்களிலிருந்து இவ்வமைப்புக்கள் வேறுபடும் பண்புகள்.
4. வணிகத்தில் ஈடுபடுவதற்காக இவ்வமைப்பு வகையானது பொருத்தமாக இருப்பதற்கு அல்லது பொருத்தமற்றிருப்பதற்கான காரணங்கள்.
5. இவ்வமைப்பு வகைகளைப்பதிவு செய்தல்.

இணைப்பு 6.4.2

## உரையாடல்

கம்பனியாகப் பதிவு செய்யப்பட்டுள்ள சிற்றளவு, நடுத்தரவளவு முயற்சியாளர்களுக்கு மிக இலகுவான நிபந்தனைகளின் கீழ் கடன்களையும், வரி விடுதலையையும் வழங்கும் வேலைத்திட்டமொன்றை (செயற்றிட்டம்) நடைமுறைப்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

தனியாள் உரிமை வணிகமொன்றாகப் பதிவு செய்யப்பட்டுள்ள குமார் சித்தம்பலத்தின் வணிகத்தை கம்பனியொன்றாகப் பதிவு செய்வதற்கான தேவை ஏற்பட்டது. அது தொடர்பிலான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வணிக ஆலோசகர் ஒருவரின் உதவி நாடப்பட்டது. குமாருக்கும், வணிக ஆலோசகருக்குமிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

குமார் : எனது வணிகம் ஒரு பெரிய வணிகமல்ல. எனினும் இதனைக் கம்பனியொன்றாகப் பதிவு செய்ய முடியுமா?

வணிக ஆலோசகர் : கம்பனியொன்றாகப் பதிவு செய்வதற்கு வணிகத்தின் அளவு தொடர்பில் எந்தப் பிரச்சினையும் இல்லை. தனியொருவருக்கும் வணிகத்தை கம்பனியொன்றாகப் பதிவு செய்யலாம். ஆனால் அதற்குச் சில சட்டவிதிமுறைகள் காணப்படுகின்றன.

குமார் : நான் இதற்கு முன்னர் பிரதேச செயலாளர் காரியாலயத்திலேயே என்ற வணிகத்தைப் பதிவு செய்தேன். கம்பனியொன்றை அக்காரியாலயத்தில் பதிவு செய்ய முடியுமா?

வணிக ஆலோசகர் : கம்பனிகளைப் பதிவு செய்வதற்குக் கம்பனிப் பதிவாளர் அலுவலகம் எனும் தனியான அலுவலகமொன்று காணப்படுகின்றது.

குமார் : தற்போது நான் ஈடுபட்டுள்ள வணிகத்திற்கும் அந்த கம்பனிக்கும் இடையில் காணப்படும் வேறுபாடுகள் என்ன?

வணிக ஆலோசகர் : கூடுதலான வேறுபாடுகள் காணப்படுகின்றன. கம்பனியானது சட்டத்தின் முன் தனிமனிதனாக கருதப்படுகின்றது. அதனால் கம்பனியின் பெயரில் பல்வேறு விடயங்களை மேற்கொள்ள முடியும். கம்பனியின் பெயரிலேயே கடன் எடுப்பதற்கு, வணிகக் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கும் முடியும். கம்பனியின் பெயரிலேயே சட்டத்தின் முன் செல்லலாம். வணிக நடவடிக்கைகளின் வெபளியகப் பொறுப்புக்கள் கம்பனிக்கு ஒப்படைக்கப்படுகின்றன. மூலதனத்தை அதிகரித்துக் கொள்ளும் தேவையேற்படின் இன்னொரு நபரின் பங்களிப்பினையும் பெற்றுக் கொள்ளலாம். வணிகத்திற்குச் சிறந்த அங்கீகாரம் கிடைக்கும். வணிகத்தின் உரிமையாளர்கள் மாறினாலும், கம்பனியில் மாற்றம் செய்யாது தொடர்ந்து நடாத்திச் செல்லலாம். ஏனைய வணிகங்களைப் போலன்றி இதனை நடாத்திச் செல்லும் போது நிறைவேற்ற வேண்டிய சில சட்ட நடைமுறைகள் காணப்படுகின்றன.

குமார் : அப்படியென்றால் கம்பனியொன்றாகப் பதிவு செய்வதற்கு என்ன செய்ய வேண்டும்.

வணிக ஆலோசகர் : கம்பனிப் பதிவாளர் காரியாலத்திற்குச் சென்று,

- கம்பனியின் அகவிதி
- கம்பனியின் பெயர் வேறொரு கம்பனியின் பெயர் இல்லை என்பதற்கான உறுதிக்கூற்று
- கம்பனியின் இயக்குநர்களாக கடமையாற்றுவதற்கு விருப்பத்தை தெரிவிக்கும் கூற்று
- கம்பனியின் செயலாளராக கடமையாற்ற விரும்புவதற்கான கூற்று

போன்ற ஆவணங்களைப் பூரணப்படுத்திச் சமர்ப்பிக்க வேண்டும். இதனை எனக்கும் செய்து தரமுடியும். அவ்வாறில்லாமல் இணைய வலையமைப்பு வசதியைப் பயன்படுத்தியும் மேற்குறிப்பிட்டவற்றை மேற்கொள்ளலாம். பதிவு செய்யப்பட்ட பின்னர் கம்பனிப் பதிவுச் சான்றிதழொன்று கிடைக்கப்பெறும் அதன்பின்னர், கம்பனியாக நிறுவனத்தை நடாத்திச் செல்லலாம்.

**தேர்ச்சி 6.0** : வணிகத்தை ஆரம்பிப்பதற்கு பொருத்தமான வணிக அமைப்புக்களைத் தேடியறிவார்.

**தேர்ச்சி மட்டம் 6.5** : அங்கீகார வணிகத்தினை அறிந்து கொள்வார்.

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்** :

இத்தேர்ச்சி மட்டத்திற்குரிய பாடவேளைகளின் இறுதியில் மாணவர்கள்.

- அங்கீகார வணிகமொன்றின் அடிப்படைப் பண்புகளை விளக்குவார்.
- அங்கீகார வணிகங்களை ஆரம்பிப்பதற்கான விதிமுறைகளைச் சுட்டிக்காட்டுவார்.
- அங்கீகார வணிகங்களில் காணப்படும் அனுகூலங்கள், வரையறைகளை முன்வைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள்** :

இத்தேர்ச்சி மட்டத்திற்கான பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற பாட உள்ளடக்கத்தினையும், அதனுடன் தொடர்புடையதாக பாடநூலில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடவிடயங்கள் தொடர்பாகவும் கூடிய விளக்கமொன்றைப் பெற்றுக் கொள்ளவும். அதன் பின்னர் கீழே குறிப்பிடப்படுகின்ற ஆலோசனைகள் தொடர்பில் கவனம் செலுத்தவும்.

- இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாட அலகில் முதலில் பிரவேசிக்கும் பொழுது உங்களால் நன்றாக அறியப்பட்ட அங்கீகார வணிகங்கள் சிலவற்றை உதாரணங்களாகக் காட்டுங்கள்.
- நடைமுறையில் இருக்கின்றதும், வெற்றிகரமாக இயங்கும் வணிகமொன்றின் பெயர், வியாபாரக் குறி, வியாபார முறைகள் என்பவற்றைப் பயன்படுத்திச் செயற்படுகின்றவை (Franchise, A business that uses the names, Logo and trading of an existing success ful business) அங்கீகார வணிகங்கள் என எளிமையாகக் குறிப்பிட முடியும். இது அங்கீகாரத்தை வழங்குபவருக்கும், அதனைப் பெற்றுக் கொள்பவருக்கும் இடையே ஏற்படும் உடன்படிக்கையாகும். இதற்கமைய, வணிகரொருவருக்கு அங்கீகார முறையில் வணிகத்தை நடாத்திச் செல்ல முடியும். இவ்வகையான வணிக முறைகள் இன்று பிரபல்யமடைந்து வருகின்ற அமைப்புக்களாக இருக்கின்றன.

  உதாரணமாகக் குறிப்பிடுவதாயின் சந்தோஸ் எனும் பெயரில் பிரபல்யமிக்க இனிப்புப் பண்ட வகையிலான வணிகமொன்று இருப்பதாகக் கருதிக் கொள்ளுங்கள். அவரது உற்பத்திப் பொருளுக்கு சந்தோஸ் எனும் பெயரில் வேறு முயற்சியாளரொருவருர் இப்பெயரிலேயே தனது மூலதனத்தை இட்டு மற்றோர் பிரதேசத்தில் வணிகத்தை ஆரம்பித்து நடாத்திச் செல்வதற்கு ஒப்பந்தம் செய்து கொள்ள முடியும்.
- அங்கீகார வணிகமொன்றின் அடிப்படைப் பண்புகள், ஆரம்பிக்கும் முறைகள், அதன் அனுகூலங்கள், பிரதிகூலங்கள் என்பவை தொடர்பில் மாணவர்களுக்கு விளக்கமளிக்கவும்.
- இத்தேர்ச்சி மட்டத்தினடிப்படையில் கற்றல் கற்பித்தல் செயலொழுங்கின் போது விடயம் சார்ந்த அல்லது கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகையிலான வினாக்களைப் பயன்படுத்தி பொருத்தமான மதிப்பீடொன்றை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கவும்.

  உதாரணம்
  - அங்கீகார வணிகத்தை விளக்குவார்.
  - அங்கீகார வணிகமொன்றை ஆரம்பிக்கும் வணிகரொருவருக்கு இதன் மூலம் கிடைக்கும் அனுகூலங்களைச் சுட்டிக்காட்டுவார்.

**முதன்மைப் பதங்கள் / எண்ணக்கரு :**

- அங்கீகார வணிகம்
- அங்கீகாரம் வழங்குபவர்
- அங்கீகாரம் பெற்றவர்

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- தரம் 11 இன் பாடநூலில் குறித்த பாட அலகு

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- அங்கீகார வணிக முறையின் விசேட பண்புகளைச் சுட்டிக்காட்டுவார்.
- அங்கீகார வணிகமுறையில் காணப்படும் அனுகூலங்கள், பிரிதிகூலங்களைக் குறிப்பிட்டுக் காட்டுவார்.
- அங்கீகார வணிகங்களுக்கான உதாரணங்களைச் சுட்டிக்காட்டுவார்.

**தேர்ச்சி 7.0** : இலங்கையில் முயற்சியாண்மைக் கலாச்சாரமொன்று தோன்றுவதற்கான சந்தர்ப்பங்களைத் தேடியறிவார்.

**தேர்ச்சி மட்டம் 7.1** : இலங்கையின் முயற்சியாண்மைக் கலாச்சாரமொன்று உருவாவதில் காணப்படும் சந்தர்ப்பமும் அது தொடர்பாகக் காணப்படும் வரையறைகளையும் தேடியறிவார்.

**பாடவேளைகள்** : 06

**கற்றற் பேறுகள்** :

இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாடவேளைகளின் இறுதியில் மாணவர்கள்

- இலங்கையின் முயற்சியாண்மைக் கலாச்சாரமொன்றின் தேவைப்பாட்டினை காரணங்களோடு சுட்டிக்காட்டுவார்.
- முயற்சியாண்மைக் காலாச்சாரமொன்று தோன்றுவதில் செல்வாக்குச் செலுத்தும் பொருளாதார, சமூக காரணங்களுக்கான உதாரணங்களை உதவிகளுடன் சுட்டிக்காட்டுவார்.
- இலங்கையின் முயற்சியாண்மைக் கலாச்சாரமொன்று தோன்றுவதில் தடையாகவிருக்கும் காரணங்களை விளக்குவார்.


## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :

இத்தேர்ச்சி மட்டத்திற்கான பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற பாட உள்ளடகத்தினையும், அதனுடன் தொடர்புடையதாக பாடநூலில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடவிடயங்கள் தொடர்பாகவும் கூடிய விளக்கமொன்றைப் பெற்றுக் கொள்ளவும். அதன் பின்னர் கீழே குறிப்பிடப்படுகின்ற ஆலோசனைகள் தொடர்பில் கவனம் செலுத்தவும்.

- இத்தேர்ச்சி மட்டத்தின் அடிப்படையில் பாட அலகில் முதலில் பிரவேசிக்கும் போது பின்வரும் வினாக்களை மாணவர்களுக்கு முன்வைத்து சிந்தனைக் கிளறல் பயிற்சியொன்றில் ஈடுபடச் செய்யவும்.
    - கலாச்சாரம் என்பதன் கருத்து என்ன?
    - கலாச்சாரத்தில் காணக்கூடிய பண்புகள் எவை?
- முயற்சியாண்மைக் கலாச்சாரம் தொடர்பாக விளக்கவும்.

    உதாரணம் : யாதேனும் மக்கள் குழுவொன்றினால் தம்மிடையே பகிர்ந்து கொள்ளும் நம்பிக்கைகள் பெறுமானங்கள் என்பவற்றை உள்ளடக்கிய கலவையே கலாச்சாரம் என அழைக்கப்படும்.
- Calture can be defirned of the make by norms, values and beliefs that are shared by a particular community
- சமூகமொன்றை எடுத்து நோக்கும் பொழுது இங்கு கலாசாரச் செயல்முறை .... அமைப்பாக்கப்பட்ட முறையில் காணப்படுவதுடன் அதனைப் பின்வரும் வகையில் முன்வைக்க முடியும்.

செயற்படுவோர் (Actors)
உதாரணம் :
ஆசிரியர், மதத்தலைவர்கள்,
ஊடகவியலாளரக்ள்,
கலைஞர்கள், வணிகர்கள்



கலாசாரங்கள் (Culture)
உதாரணம் :
மரபுரிமை வாதங்கள்,
நடத்தை வாதங்கள்,
நம்பிக்கைவாதங்கள்

உருவாக்குபவர்கள் (Stuctures)
உதாரணம் :
அரசியல், பொருளாதாரம்,
சமயம், மதம், குலம்

- தனி நபர்கள் உருவாக்கி விருத்தியடையச் செய்யும் கலாச்சாரமொன்றில் அவர்களின் எண்ணங்கள், நம்பிக்கைகள், மனப்பாங்கு நடத்தைகள் என்பன மீது தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் கலாச்சாரமொன்றினால் தனி நபர்களின் அறிவு ஞானத்தை முறைமைப்படுத்தக் கூடிய பலன்கள் ஏற்படுகின்றன.
- வாழ்வாதாரமெனும் வகையில் தனக்குச் சொந்தமான வணிகமொன்று நடாத்திச் செல்லப்படுகின்றதா அல்லது சம்பளம் பெறும் தொழிலொன்றில் ஈடுபடுகின்றார்களா என்ற தீர்மானமானது கலாச்சாரத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும்
- இலங்கைக் கலாச்சாரத்தில் சம்பளம் பெறும் தொழிலொன்றில் ஈடுபடுதலானது சமுகத்தினால் கூடுதலாக அங்கீகரிக்கப்படுகின்றது.
- யாதேனும் கலாச்சாரமொன்றில் எண்ணிலடங்காத துணைக் கலாச்சாரங்கள் காணப்படுகிறது.

உதாரணமாக : முயற்சியாண்மைக் கலாச்சாரமானது துணைக் கலாச்சாரமொன்றாகும். இக்கலாசாரத்தில் முயற்சியாளர்களின் அங்கீகாரம் நம்பிக்கைகள், பெறுமானங்கள், மனப்பாங்குத் தொடர்புகள் இடம்பெற வேண்டியவைகள் என்பன உள்ளடங்கும.

- இப்பாடத்தில் இலங்கையின் முயற்சியாண்மைக் கலாசாரமொன்று உருவாவதற்கான தேவைப்பாட்டினை காரணங்களோடு விளக்கவும்.

உதாரணம் :

- தொழில் வழங்கல் குறைந்து செல்லும் போக்கு
- கற்ற ஊழியர்படையொன்று காணப்படல்
- கற்காத பிரிவினரை விட கற்ற இளைஞர் பிரிவினர்களிடையே வேலையில்லாமை கூடுதலான வீதத்தில் இருத்தல்.
- இலங்கை மிகக் கூடிய பொருளாதார அபிவிருத்தியினை பெற்றுக் கொள்ள வேண்டியிருத்தல்.
- தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தொழிலை உருவாக்குனர்களை உருவாக்க வேண்டியிருத்தல்.
- பொருத்தமான அரசியல், பொருளாதாரச் சூழலொன்று காணப்படல்.
- வளங்கள் அருமையாகக் காணப்படல்.
- சமூக ஒருமைப்பாட்டை ஏற்படுத்திச் செல்லும் தேவைப்பாடு

- முயற்சியாண்மைக் கலாச்சாரமொன்று உருவாவதற்கு பாதகமாகவுள்ள நிலைமையினைக் காட்டுவதற்கும் இலங்கையில் காணப்படும் சமூக, பொருளாதார, காரணிகள் தொடர்பிலான தெளிவொன்றை வழங்குவதற்குப் பாடமொன்றைப் பயன்படுத்த முடியும்.
- இதற்கமைய இத்தேர்ச்சி மட்டத்தின் கீழ் பாடத்தில் காட்டப்பட்டுள்ள சமூக, பொருளாதாரம், காரணங்கள் தொடர்பில் கவனத்தைச் செலுத்தவும்.
- பின்னர் தனி நபர்கள் முயற்சியாண்மை தொடர்பில் நாட்டம் கொள்வதைத் தடுப்பதற்காகவும் சமூக நடவடிக்கை தொடர்பான விளக்கத்தை வழங்குவதற்கும் பாடத்தைத் திட்டமிடுங்கள்.
- இங்கு தனிநபர்கள் எக்காரணத்தினால் வணிகச் செயற்பாடுகளில் ஈடுபடாதிருக்கின்றார்கள் என்ற வினாவை வகுப்பில் முன்வைத்துச் சிந்தனைக் கிளறல் பயிற்சியொன்றில் மாணவர்களை ஈடுபடுத்தி உரையாடலொன்றை மையமாகக் கொண்டு கலந்துரையாடலை தெறிப்படுத்தித் தேவையான பாடவிடயங்களை வெளிப்படுத்திக் கொள்ள முடியும்.

  உதாரணம்
  - சம்பளம் பெறும் தொழில் தொடர்பில் காணப்படும் கூடிய அங்கீகாரம்
  - இடர்கள் அல்லது சவால்களை பொறுப்பேற்பதற்குள்ள விருப்பமின்மை
  - கல்வியின் மூலம் ஊக்குவிப்புக்கள் மேற்கொள்ளப்படாமை
  - அரசின் ஊக்குவிப்புக்கள் தேவையானளவு கிடைக்கப் பெறாமை
  - வணிகங்களில் ஈடுபடுவோர் தொடர்பில் சமூக ரீதியான ஏற்றுக்கொள்ளும் தன்மை குறைவாகக் காணப்படல்.
  - தனிநபர்கள், உளரீதியாக மற்றோர்களின் மீது தங்கியிருத்தல்.
- இத்தேர்ச்சி மட்டத்தின் அடிப்படையில் கற்றல் கற்பித்தல் செயன்முறையின் போது புறவயமானதும், கட்டமைக்கப்பட்ட கட்டுரை வினாக்களை வழங்கி பொருத்தமான மதிப்பீடுகளை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கவும்.

  உதாரணம்
  - முயற்சியாண்மைக் கலாச்சாரமொன்றின் பண்புகளை சுருக்கமாக விளக்கவும்.
  - இலங்கைக்கு முயற்சியாண்மைக் கலாச்சாரத்தின் தேவைப்பாட்டுக்கான 4 காரணங்களைக் குறிப்பிடுக.
  - சமூகமொன்று பிரதானமாக மூன்று பிரிவுகளைக் கொண்டதாகக் காணப்படுகிறது. அப்பிரிவுகளை உதாரணங்களுடன் விளக்கவும்.

**முதன்மைப் பதங்கள் / எண்ணக்கரு :**
- முயற்சியாண்மைக் கலாச்சாரம்
- பொருளாதார சமூகக் காரணிகள்

## தரவிருத்தி உள்ளீடுகள்
- தரம் 11 இற்கான பாடநூலில் குறித்த பாட அலகு

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**
- இலங்கைக்கு முயற்சியாண்மைக் கலாச்சாரமொன்று தேவைப்படுவதற்கான காரணங்களை முன்வைப்பார்.
- முயற்சியாண்மைக் கலாச்சாரமொன்று தோன்றுவதில் தாக்கம் செலுத்தும் காரணிகளுக்கான உதாரணங்களை முன்வைப்பார்.
- இலங்கையின் முயற்சியாண்மைக் கலாச்சாரமொன்று தோன்றுவதற்குத் தடையாக

அமையும் காரணங்களை அகற்றுவதற்கான ஆலோசனைகளை முன்மொழிவார்.

**தேர்ச்சி 7.0** : இலங்கையின் முயற்சியாண்மைக் கலாசாரமொன்று தோன்றுவதற்கான சந்தர்ப்பங்களைத் தேடியறிவார்.

**தேர்ச்சி மட்டம் 7.2 :** இலங்கையின் முயற்சியாண்மைக் சூழலொன்று உருவாக்குவதில் பெண்களது வகிபங்கின் தேவைப்பாட்டினை விமர்சிப்பார்.

**பாடவேளைகள்** : 06

**கற்றற் பேறுகள்** :

இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாட வேளைகளின் இறுதியில் மாணவர்கள்.

- பெண்கள் முயற்சியாண்மையில் ஈடுபடுவதன் தேவைப்பாட்டினை உறுதிப்படுத்துவார்.
- முயற்சியாண்மைக் கருமங்களை மேற்கொள்வதற்கு பெண்களிடம் காணப்படும் பலங்களைக் கலந்துரையாடுவார்.
- பெண்கள் முயற்சியாண்மையில் ஈடுபடுவது தொடர்பில் இலங்கையில் சமூகங்களில் காணப்படும் வரையறைகளுக்கான உதாரணங்களைக் குறிப்பிடுவார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :

இத்தேர்ச்சி மட்டத்திற்கான பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற பாட உள்ளடகத்தினையும், அதனுடன் தொடர்புடையதாக பாடநூலில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடவிடயங்கள் தொடர்பாகவும் கூடிய விளக்கமொன்றைப் பெற்றுக் கொள்ளவும். அதன் பின்னர் கீழே குறிப்பிடப்படுகின்ற ஆலோசனைகள் தொடர்பில் கவனம் செலுத்தவும்.

- இத்தேர்ச்சி மட்டத்திற்குரிய பாட அலகில் முதலில் பிரவேசிக்கும் போது சுயமாக முன்வரும் இரு மாணவர்களை அழைத்து ஆணினதும் பெண்ணினதும் இன்முகத்துடான உருவமொன்றை கரும்பலகையில் வரைவதற்கு ஆலோசனை வழங்கவும். பின்னர் ஆணையும் பெண்ணையும் ஒருவரிலிருந்து மற்றொருவர் வேறுபடுவதற்கானதும் அவர்களுக்கே உரித்தானதுமான பண்புகளைக் கேட்டறியவும். பெண்ணுடன் தொடர்புடைய பண்புகள் அவளின் முயற்சியாண்மைப் பாத்திரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதனை தெளிவுபடுத்தவும். முயற்சியாளராகக் கவனத்திற் கொள்ளப்படும் வணிகத்தில் ஈடுபடும் பெண்கள் தொடர்பான தகவல்களை முன்வைப்பதற்கு இடமளித்து பெண் முயற்சியாளர்களை அறிமுகப்படுத்தவும்.
- இப்பாடத்தில் பிரவேசிக்கும் போது பெண் முயற்சியாளர்கள் தொடர்பான தகவல்களை மாணவர்கள் தேடியறிவதற்குச் சந்தர்ப்பமளிப்பதன் மூலம் பெண் முயற்சியாளர்கள் தொடர்பான உண்மையான அனுபவங்களைப் பெற்றுக் கொடுக்க முடியும்.
  உதாரணம் :
  - பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளியாகும் பெண் முயற்சியாளர்களின் தகவல்கள்
  - இணைய வலையமைப்பினைப் பரீட்சித்து அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட பெண் முயற்சியாளர்களின் வாழ்க்கைத் தகவல்கள்.
  - மாணவர்களுக்குத் தெரிந்த உண்மையான பெண் முயற்சியாளர்கள் தொடர்பான தகவல்கள்.
- மேற்குறிப்பிட்ட முறைகளில் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களை வகுப்பறையில் முன் வைப்பதற்குச் சந்தர்ப்பமளிக்கவும்.

- சந்தர்ப்பம் கிடைக்குமாயின் நீங்கள் நன்றாக அறிந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட முயற்சியாண்மைப் பெண் ஒருவரை வளவாளராக வகுப்பறைக்கு அழைத்து அவர் வணிகத்தில் ஈடுபட்ட முறை தொடர்பாக மாணவர்கள் அறிந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தை அளிக்கவும்.
- அவளது விரிவுரையின் போது பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனத்தைச் செலுத்துவதற்கு அவளுக்கு முதலில் ஆலோசனை வழங்கவும்.

  உதாரணம்
  - வணிகத்தில் ஈடுபட்டமைக்கான காரணங்கள்
  - சுயமான வணிகத்தில் ஈடுபடுவதற்கு அவளிடமிருந்த பலங்களும், தடைகளும்.
  - மாணவர்களுக்கு நன்மையளிக்கக்கூடிய அவளது அனுபவங்கள்
- மேற்குறிப்பிட்ட முறையில் பெற்றுக் கொள்ளக்கூடிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பெண் முயற்சியாண்மைப் பாத்திரம் தொடர்பான விளக்கமொன்றைப் பெற்றுக் கொடுக்கவும்.
- இங்கு முயற்சியாண்மைக் கலாசாரமொன்று இலங்கையில் உருவாவதில் முயற்சியாளர்களின் பங்களிப்பினை வெளிப்படுத்திக் காட்டுவது முக்கியமானதாகும்.
- வளவாளரொருவராக முயற்சியாளரொருவரைப் பயன்படுத்துவதாயின் அவளது உரையினை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்த முடியும். இதற்காகப் பின்வரும் விடயங்கள் தொடர்பில் தகவல்களை முன்வைப்பதில் மாணவர்களை ஈடுபடுத்தவும்.
  - அவளது முயற்சியாண்மையின் தன்மை
  - அவள் வணிகத்தில் ஈடுபடுவதற்கான காரணங்கள்
  - அவளது கல்வியும் பயிற்சியும்
  - குடும்பப் பின்னணி
  - எதிர்கால இலக்கு
  - அவள் எதிர்கொண்ட தடைகளும், அவற்றை வெற்றி கொண்ட முறைகளும்
  - வணிகத்திற்குச் சாதகமாக அவளிடம் காணப்பட்ட பலங்கள்
  - அவளின் உரையின் மூலம் உங்களுக்கு பயனளிக்கக்கூடிய அவளது அனுபவங்கள்.

- பெண்கள் வணிக முயற்சியில் ஈடுபடுவதற்கான தேவைப்பாடும் அதற்காக் காணப்படும் சந்தர்ப்பங்கள் தொடர்பான பாட விடயங்களைக் குறிப்பிட்டுக் காட்டுவது மிக முக்கியமானதாகும்.

  தேவையானது என்பதற்காக

  உதாரணம்
  - சனத்தொகையில் கூடுதலான பங்கினர் பெண்களாக இருக்கின்றனர்
  - பெண்களிடையே அதிகமானோர் வேலை வாய்ப்பின்றி இருத்தல்.
  - பெண்களின் பங்களிப்புத் தேவையாக இருக்கும் வணிகங்கள் காணப்படல்.
  - பெண்கள் உயர்கல்வியைப் பெற்றுக் கொள்ளும் போக்கு காணப்படல்.

- சந்தர்ப்பங்கள் இருப்பதற்கான உதாரணங்கள்.
    - பொருளாதாரத்தில் ஊழியர்களுக்கான கூடிய கேள்வி இருப்பது மட்டுமன்றி பெண்களின் சேவையின் பங்களிப்பானது இங்கு மிக அத்தியாவசியமானதாக இருப்பது பிரவேசிக்கக்கூடிய சிற்றளவு வணிகங்கள் காணப்படல்.
    - விசேட ஊக்குவிப்புக்களான முன்மொழிவுகள் அறிமுகப்படுத்தப்படல்.
    - சமூக அங்கீகாரம் மனப்பாங்கு என்பன சாதகமான முறையில் மாற்றமடைந்து வருகின்றமை
    - குடும்பத்தினது வணிக உரிமை தனக்கு உரித்துடையதாக மாறல்.
- பெண் முயற்சியாளர்கள் எனும் வகையில் பெண்களிடம் காணப்படும் பலங்களையும், அவர்கள் வணிகத்தில் ஈடுபடுதல் தொடர்பாகக் காணப்படும் வரையறைகள், சவால்கள், என்பன தொடர்பாக மாணவர்களை அறியச் செய்வது மிக முக்கியமானதாகும்.
- பெண்களிடம் காணப்படும் பலங்களுக்கான உதாரணங்கள்
    - சிக்கனத் தன்மை
    - நேரத்தை ஒழுங்கான முறையில் பயன்படுத்தல்.
    - சுய ஒழுக்கம்
    - நம்பகத்தன்மை கொண்டவர்களாக இருத்தல்.
- பெண்கள் வணிகம் செய்வது தொடர்பாகக் காணப்படும் வரையறைகளும், சவால்களுக்குமான உதாரணங்கள்.
    - ஆணாதிக்க வாதம்
    - பாரம்பரியத்தை பின்பற்றல்.
    - குடும்பம் தொடர்பாகக் காணப்படும் பொறுப்பு
    - சில வணிகங்களில் ஈடுபடுதல் தொடர்பாக சமூக ரீதியான மனப்பாங்கு சாதகமாகதானக் காணப்படாமை
- இத்தேர்ச்சி மட்டத்தினடிப்படையில் கற்றல் கற்பித்தல் செயலொழுங்கின் போது விடயம் சார்ந்த அல்லது அமைக்கப்பட்ட கட்டுரை வினாக்களைப் பயன்படுத்தி பொருத்தமான மதிப்பீடொன்றை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கவும்.
    - இலங்கை போன்ற நாடொன்றின் பொருளாதாரத்திற்கு பெண்களின் முயற்சியாண்மையின் பங்களிப்புத் தேவையாக இருப்பதற்கான காரணங்களை முன்வைக்கவும்.
    - பெண்கள் வணிகத்தில் ஈடுபடுதல் தொடர்பாக சமூகத்தின் சிலரிடையே சிறந்த மனப்பாங்கொன்று இல்லாதிருக்கின்றது. இது தொடர்பாக உங்களது கருத்துக்களை முன்வைக்கவும்.

**முதன்மைப் பதங்கள் / எண்ணக்கரு :**
- பெண் முயற்சியாளர்கள்
- பலங்களும், வரையறைகளும்.

## தரவிருத்தி உள்ளீடுகள்
- தரம் 11 இற்கான பாடநூலில் உரிபாட அலகு

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :
- பெண்கள் குறைவாக ஈடுபடும் வணிகங்களுக்கான உதாரணங்களைச் சுட்டிக்காட்டுவார்.
- வணிகக் கலாசாரமொன்றை உருவாக்குவதில் பெண்களின் பங்களிப்பினை மதிப்பீட்டிற்கு உட்படுத்துவார்.
- பெண்கள் வணிகத்தில் ஈடுபடுதலும், அதனுடன் தொடர்புடைய வரையறைகளையும் சுட்டிக்காட்டுவார்.

**தேர்ச்சி 7.0** : இலங்கையில் முயற்சியாண்மைக் கலாச்சாரமொன்று தோன்றுவதற்கான சந்தர்ப்பங்களைத் தேடியறிவார்.

**தேர்ச்சி மட்டம் 7.3** : சமூக பொறுப்புக்கள் விழுமியங்களைப் பின்பற்றிச் சிறந்த முயற்சியாண்மைக் கலாசாரமொன்றைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்வதில் அக்கறையினை காட்சிப்படுத்துவார்.

**பாடவேளைகள்** : 03

**கற்றல் பேறு** :

இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாட வேளைகளின் இறுதியில் மாணவர்கள்.

- வணிக, சமூக பொறுப்புக்கள், விழுமியங்கள் தொடர்பாகச் சுயமான கருத்தினை விளக்குவார்.
- வணிகங்கள் மூலம் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குக் கடப்பாடுள்ள பிரிவினர்களை உதாரணங்களுடன் விளக்குவார்.
- வணிகங்களில் சமூகப் பொறுப்புக்கள் விழுமியங்கள் பின்பற்றப்பட வேண்டியதன் தேவைப்பாட்டினை கலந்துரையாடுவார்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :

இத்தேர்ச்சி மட்டத்திற்கான பாடதிட்டத்தில் பாணப்படுகின்ற பாட உள்ளடக்கத்தினையம், அதனுடம் தொடர்புடையதுமாக பாடநூலில் உள்ளடக்கப்பட்டுள்ள பாட விடயங்கள் தொடர்பாகவும் கூடிய விளக்கமொன்றைப் பெற்றுக் கொடுக்கவும். பின்னர் கீழே குறிப்பிடப்படுகின்ற ஆலோசனைகள் தொடர்பில் கவனம் செலுத்தவும்.

இத்தேர்ச்சி மட்டத்தின் அடிப்படையில் பாடத்தில் பிரவேசிக்கும் பொழுது வகுப்பு மாணவர்களை பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரித்துக் கொள்ளவும். (நான்கு குழுக்களாகப் பிரிப்பது மிகவும் பொருத்தமானதாகும். )

- பின்வரும் ஒவ்வொரு தலைப்புக்களையும் அக்குழுக்களுக்கும் வழங்கி மாணவர்களது துலங்கல்களைப் பெற்றுக் கொள்ளவும்.
    1. தனது பிள்ளைகள் மீதுள்ள பெற்றோர்களின் பொறுப்புக்கள்.
    2. பெற்றோர்களின் மீதுள்ள பிள்ளைகளின் பொறுப்புக்கள்.
    3. மாணவர்களின் மீதான ஆசிரியர்களின் பொறுப்புக்கள்.
    4. ஆசிரியர்கள் மீதான மாணவர்களின் பொறுப்புக்கள்.
- மாணவர்களின் துலங்கல்களை கரும்பலகையில் எழுதிக் காட்டுங்கள். (இதற்காக எட்டு நிமிடங்கள் போதுமானது)
- பின்னர் சமூகத்தின் மீதான மாணவர்களின் பொறுப்புக்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதனை மாணவர்களுக்கு முன்வைத்து அவர்களது கருத்துக்களைக் கேட்டறியவும்.
- இணைப்பு 7.3.1 உள்ளடக்கப்பட்டுள்ள ரொக்ஹில் ஹோட்டல் எனும் விடய ஆய்வினை மாணவர் குழுகளுக்கு வழங்கி அது தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் வினாக்களுக்கான விடையினைப் பெற்றுக் கொள்வதில் ஈடுபடச் செய்யவும்.
    - இவ்விடய ஆய்விற்கமைய வணிகர்கள் மூலம் சமூகத்திற்கு நிறைவேற்றப்படும் சிறந்தவைகள் எவை?
    - அவ்வணிகர்களின் பொறுப்புக்களைச் சரியாக நிறைவேற்றப்படும் பிரிவினர்கள்

யாவர்?

- அவர்களினால் நிறைவேற்றப்படும் பொறுப்புக்கள் யாவர்
- நல்லதைச் செய்தல், தீயவற்றைச் செய்யாதிருத்தல் என்பன தொடர்பாக வணிகர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய முன்மாதிரிகள் எவை?
- இவ்விடய ஆய்விற்கமைய வணிகத்துடன் தொடர்புபடும் பிரிவினர்கள் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பிரிவினர்கள் யாவர்?

- வணிகர்களால் பின்பற்றப்படும் சிறந்த ஒழுங்கு முறைகள் காரணமாக அவர்களுக்கு கிடைக்கும் அனுகூலங்கள் தொடர்பில் குறிப்பிடக்கூடியது என்ன என்பதனைக் குறிப்பிட்டுக் காட்டுங்கள்.
- குழுத் தேடியறிதல்களை முழு வகுப்பிலும் முன்வைப்பதில் ஈடுபடுத்தச் செய்யவும்.
- சமூகப் பொறுப்புக்கள் விழுமியங்களைப் பின்பற்றுவதினூடாக வணிகர்களுக்குக் கிடைக்கும் அனுகூலங்களுக்கான உதாரணங்கள்.
    - வணிகம் தொடர்பான நல்லெண்ணம் உருவாகும்.
    - வாடிக்கையாளர்களின் நம்பிக்கையில் விருத்தி ஏற்படும்.
    - ஊழியர்களின் மன தைரியம் ஏற்படுவதுடன் வணிகத்தின் மீதுான விருப்பு அதிகரிக்கும்.
    - வணிகத்திற்கான பாதுகாப்புக் கிடைக்கும்.
- இத்தேர்ச்சி மட்டத்தின் அடிப்படையில் கற்றல் கற்பித்தல் செயலொங்கில் புறவயமான கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகையிலான வினாக்களைப் பயன்படுத்தி பொருத்தமான மதிப்பீடுகளை மாணவர்களுக்கு வழங்கவும்.
    - சமூகம் மீதான வணிகர்களின் பொறுப்புக்கள் என்பதனால் யாது கருதப்படும் என்பது தொடர்பாக உங்களது கருத்துக்கள் என்ன?
    - வணிகர்களின் மூலம் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் தேவைப்பாட்டினைச் சுட்டிக்காட்டுங்கள்.

**முதன்மைப் பதங்கள் / எண்ணக்கரு :**

- வணிகத்தின் சமுகப் பொறுப்புக்கள்.
- வணிக ஒழுக்க விழுமியங்கள்
- வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்கள்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- தரம் 11 இற்கான பாடநூலில் குறித்த பாட அலகு
- இணைப்பு 7.3.1 இன் ரொக்ஹில் ஹோட்டல் விடய ஆய்வின் பிரதிகள்

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- வணிக சமூகப் பொறுப்புக்கள், விழுமியங்கள் எனும் எண்ணக்கருக்களின் கருத்துக்களை விபரிப்பார்.
- வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கான உதாரணங்களைக் குறிப்பிட்டு அப்பிரிவினர்கள் வணிகத்தின் மீது அக்கறை செலுத்துவதற்கான காரணங்களை முன்வைப்பார்.
- வணிக சமூகப் பொறுப்புக்கள் விழுமியங்கள் என்பவற்றைப் பின்பற்றும் வணிகர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூலங்களைக் குறிப்பிட்டுக் காட்டுவார்.

இணைப்பு 7.3.1

## ரொக்ஹில் ஹோட்டல்

கண்டி மஹியாவ வீதிக்கருகில் நடத்திச் செல்லும் சிறியளவிலான சிற்றுண்டிச்சாலையே இராசா குடும்பத்தின் வணிகமாக இருந்தது. இதனருகே ஊற்றெடுத்துச் செல்லும் நீரூற்றானது இவ்விற்பனையகத்திற்கு வாடிக்கையாளர்கள் வருகை தருவதற்கான காரணமாக இருந்தது, ஆரம்பத்திலிருந்து கிதுல் கருப்பட்டியுடன் (வெல்லம்) தேனீர், பசும் பால், தேங்காய் ரொட்டி ,அப்பம், மற்றும் பல்வேறு சிற்றுணவு வகைகளை சூடான நிலையில் உண்பதற்கு பெறக் கூடியதாக இருப்பது இவ்விற்பனையத்தின் விசேட பண்பாகக் காணப்பட்டது. இவ்வீதி வழியாகப் பயணிக்கும் அனேக பேருந்து வாகனங்கள் இங்கு நிறுத்தப்பட்டு பயணிகள் தேநீர் அருந்திவிட்டுச் செல்வது வழக்கமாகும். இராசா பாடசாலை விடுமுறை காலங்களில் தந்தையின் வணிக நடவடிககைகளுக்குத் துணையாக இருந்தான். இராசாவினது தந்தையின் திடீர் மரணத்தின் காரணமாக அவன் தனது தாயுடன் இணைந்து வணிகத்தில் முழு நேரமும் கருமமாற்ற வேண்டிய நிலையேற்பட்டது.

இராசா பருவ வயதை அடையும்போது வணிகத்தின் விருத்தியில் குறிப்பிட்டளவு முன்னேற்றம் ஏற்பட்டது. அவன் தனது வணிகத்தை விரிவடையச் செய்து இரு மாடிக் கட்டிடம் எனும் நிலைக்கு மாற்றியதுடன் கீழ் மாடியானது தேநீர் அருந்துவதற்கும், மேல் மாடியானது காலை, மதியம், இரவு உணவுகளைப் பெற்றுக் கொள்வதற்குமாக ஒதுக்கப்பட்டது. அவனது உணவகத்தில் உணவு பான வகைகளுக்காக சுததமான பசுமையான நிலையிலுள்ள பொருட்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் உணவகத்தில் சுகாதாரத் தன்மையுடன் கூடிய உணவு குடிபானங்கள் தயாரிக்கப்பட்டன. உணவகத்தின் அகற்றப்படுகின்ற அனைத்துக் கழிவுப் பொருட்களையும் பயன்படுத்தி அவற்றைக் கொண்டு மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான இயற்கை வாயு அலகொன்று நிறுவப்பட்டுள்ளது. உணவகம் மிகச் சுத்தமாகப் பராமரிக்கப்பட்டு வருவருடன், ஊழியர்கள் இன்முகத்துடன் சேவைகளை வழங்குவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. பணியாளர்களுக்கு உரியவாறு சம்பளம், கொடுப்பனவு, சீருடை உணவு, குடிபானம் என்பவை சரியான முறையில் வழங்கப்படுகின்றன. உணவகத்திற்குத் தேவையான பொருட்களை விநியோகிப்போர்களுக்கு உரியவாறு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதுடன், கொடுக்கல் வாங்கல்களையும் சரியான முறையில் அறிக்கைப்படுத்தப்பட்டு செலுத்த வேண்டிய வரிகளும் ஒழுங்குமுறையாகச் செலுத்தப்படுகின்றன. அவரது உணவகத்திலுள்ள உணவு, குடிபான வகைகள் மிகவும் நியாயமானது என வாடிக்கையாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

உணவகத்திற்கு அருகில் பாய்ந்து செல்லும் நீருற்றைச் சுற்றியுள்ள பிரதேசமானது மனதைக் கவரக்கூடிய சூழலொன்றான நிலைக்கு மாற்றி வாடிக்கையாளரது தாகத்தினையும் பூர்த்தி செய்வதற்குப் பொருத்தமானவாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. அவர் தனது இலாபத்தைப் பற்றி மட்டுமன்றி அவரினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள்தொடர்பாகவும் அடிக்கடி நினைவுகூருவார். மேலும் பருவ வயதைக் கடந்து செல்லும் இராசாவின் எதிர்காலமானது மிகவும் பிரகாசமான நிலைக்கு மாறும் என்பது உறுதியானது.

**தேர்ச்சி 7.0** : இலங்கையில் முயற்சியாண்மைக் கலாச்சாரமொன்று தோன்றுவதற்கான சந்தர்ப்பங்களைத் தேடியறிவார்.

**தேர்ச்சி மட்டம் 7.4** : புதிய வணிகங்களை ஆரம்பிப்பவர்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள், அவைகளது வேலைத்திட்டங்கள் என்பன தொடர்பாக தேடியறிதலில் நாட்டம் செலுத்துவதை வெளிப்படுததுவார்.

**பாடவேளைகள்** : 06

**கற்றல் பேறுகள்** :

இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாட வேளைகளின் இறுதியில் மாணவர்கள்.

- புதிய வணிகங்களுக்கான ஊக்குவிப்புக்களைப் பெற்றுக் கொள்வதன் தேவைப்பாட்டினைக் கலந்துரையாடுவார்.
- இலங்கையில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்படும் நிதி மற்றும் நிதி சாராத ஊக்குவிப்புக்களுக்கான உதாரணங்களைச் சமர்ப்பிப்பார்.
- இலங்கையில் முயற்சியாளர்களுக்கு நிதி மற்றும் நிதியல்லாத ஊக்குவிப்புக்களை வழங்கும் நிறுவனங்களுக்கான உதாரணங்களைக் குறிப்பிட்டுக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகள் :**

இத்தேர்ச்சி மட்டத்துக்குரிய பாடத்திட்டத்திலுள்ள பாட உள்ளடக்கத்தினையும் அதனுடன் இணைந்த பாட விடயங்கள் தொடர்பிலும் சிறந்த தெளிவினைப் பெற்றுக் கொள்ளவும். பின்னர் ஆலோசனை தொடர்பில் கவனம் செலுத்தவும்.

- இத்தேர்ச்சி மட்டத்தின் அடிப்படையில் ஆரம்பத்தில் பாட அலகில் பிரவேசிக்கையில் வணிகமொன்றைத் ஆரம்பிக்கும் பொழுது முயற்சியாளரொருவருக்கு ஏற்படும் தேவைகள் எவை? எனும் வினாவினை வகுப்பில் முன்வைத்து மாணவர்களைச் சிந்தனைக் கிளறல் பயிற்சியொன்றில் ஈடுபடுத்தச் செய்யவும்.
- மாணவர்களினால் முன் வைக்கப்படும் தகவல்களைக் கருத்திற் கொண்டு புதிய வணிகமொன்றை ஆரம்பிக்கும் முயற்சியாளர்களுக்காகக் காணப்படும் ஊக்குவிப்புக்களையும், அவ்வாறான ஊக்குவிப்புக்களை வழங்கும் நிறுவனங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடலொன்றைக் கட்டியெழுப்புங்கள்.
- இங்கு வணிகங்களை ஆரம்பிப்போர்களுக்கு அரசின் ஊக்குவிப்புக்கள் தேவைப்படுகின்றது என்பதற்கான காரணங்களைத் தெளிவுபடுத்தவும்.

  உதாரணம் :
  - தனி நபர்கள் வணிகங்களில் ஈடுபடுவதற்குள்ள விருப்பத்திற்கான சந்தர்ப்பம் வழங்குங்கள்.
  - தனி நபர்களது வணிகக் கருத்துக்கள் வணிகம் எனும் நிலைக்கு மாற்றப்படுவதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுத்தல்.
  - வணிகங்களை ஆரம்பிப்பவர்களுக்கு வெற்றிகரமான ஆரம்பமொன்றைப் பெற்றுக் கொடுத்தல்.
  - வணிகங்களை ஆரம்பிப்பவர்களுடன் சாதகமான தொடர்புகளைப் பேணல்.
  - வணிகங்களை மேற்கொள்வோர்களிடம் தன்னம்பிக்கையினையும் நேரான மனப்பாங்கினையும் ஏற்படுத்துதல்.

- அரசினால் வழங்கப்படும் ஊக்குவிப்புக்களைப் பின்வருமாறு வகைப்படுத்தி விளக்க முடியும்.

ஊக்குவிப்புக்கள்
- நிதி ஊக்குவிப்புக்கள்
  - வணிகத்தின் கடன் வசதிகள்
  - ஏனைய வங்கிக் கடன் வசதிகள்
- நிதியல்லாத ஊக்குவிப்புக்கள்
  - ஆலோசனை சேவை
  - தொழில் நுட்பசேவை
  - சந்தை வசதி

- நிதி வசதிகளை வழங்குவதன் தேவைப்பாடு தொடர்பில் மாணவர்களை அறியச் செய்யவும்.

  உதாரணம் :
  - இயந்திர உபகரணக் கொள்வனவு செய்தல்
  - அலுவலக உபகரணக் கொள்வனவு செய்தல்.
  - நிர்மாண நடவடிக்கைகளுக்காக
  - வணிகத்தை விரிவுபடுத்துவதற்காக
  - பொருட்களை இறக்குமதி செய்வதற்காக

- நிதியல்லாத ஊக்குவிப்புக்களுக்கான உதாரணங்களைப் பெற்றுக் கொடுக்கவும்.

  உதாரணம் :
  - முயற்சியாளர்களைப் பயிற்றுவித்தல்.
  - பணியாளர்களைப் பயிற்றுவித்தல்.
  - சந்தைப்படுத்தல் பயிற்சி
  - சட்ட சேவை
  - தரக்கட்டுப்பாடு
  - பண்டப் பொதியிடல்
  - வணிகத்திட்டங்களைத் தயாரித்துக் கொடுத்தல்.
  - வணிக ஆலோசனைச் சேவைகளை வழங்கல்

- நிதி நிதியல்லாத ஊக்குவிப்புக்களை வழங்கும் நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை முன்வைக்கவும். நிதி ஊக்குவிப்புக்களை வழங்கும் நிறுவனங்கள்

  உதாரணம் :
  - சகல உள்நாட்டு வணிக வங்கிகள்
  - வணிக வங்கியல்லாத ஏனைய நிதி நிறுவனங்கள்.
  - DFCC வங்கி
  - பிரதேச அபிவிருத்தி வங்கி

- நிதியல்லாத ஊக்குவிப்புக்களை வழங்கும் நிறுவனங்கள்

  உதாரணம் :
  - தொழில் அபிவிருத்திச் சபை
  - ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
  - சிற்றளவு வணிக அபிவிருத்திச் சபை அலகு
  - இளைஞர் நடவடிக்கைகள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு
  - இலங்கைத் தொழில் பயிற்சி அதிகார சபை
  - இலங்கை வியாபார அபிவிருத்தி அதிகார சபை
  - தேசிய வடிவமைப்பு மத்திய நிலையம்

- தொழில் நுட்ப நிறுவனங்கள்.
- தேசிய நுட்ப சபை
- இலங்கை நெசவுக் கைத்தொழிற் சபை
- சிற்றளவு கைத்தொழிற் திணைக்களம்.

- இத்தேர்ச்சி மட்டத்தின் அடிப்படையில் குறித்த பாட அலகுக் கற்றல் கற்பித்தல் செயலொழுங்கின் போது வளவாளர்களின் உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும்.
- இதனுடன் தொடர்புடைய விசேட நிபுணத்துவம் பெற்ற அதிகாரிகள் அனைத்துப் பிரதேச செயலாளர் காரியாலயங்களிலும் நியமிக்கப்பட்டுள்ளனர். தேவைப்படுமாயின் அவ்வதிகாரியின் உதவியினைப் பெற்றுக் கொள்வதற்கு ஆலோசனை வழங்கவும்.
- இத்தேர்ச்சி மட்டத்தினடிப்படையில் கற்றல் கற்பித்தல் செயலொழுங்கின் போது விடயம் சார்ந்ததாகவும், கட்டமைக்கப்பட்ட கட்டுரை வகை வினாக்களைப் பயன்படுத்தி பொருத்தமான கணிப்பீடொன்றை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கவும்.
  உதாரணம் :
  - வணிகங்களை ஆரம்பிப்பவர்களுக்கு ஊக்குவிப்புக்கள் தேவைப்படுவதற்கான காரணங்கள் ஐந்தினைக் குறிப்பிடுங்கள்.
  - வணிகத்திற்காக வழங்கப்படும் நிதி, நிதியல்லாத ஊக்குவிப்புக்களுக்கு இரண்டு உதாரணங்கள் வீதம் முன்வைக்கவும்.

**முதன்மைப் பதங்கள் / எண்ணக்கரு :**

- வணிகத்திற்கான காணப்படும் ஊக்குவிப்புக்கள்
- நிதி, நிதியல்லாத ஊக்குவிப்புக்கள்.
- ஊக்குவிப்புக்களை வழங்கும் நிறுவனங்கள்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- தரம் 11 இற்கான பாடநூலில் குறித்த பாட அலகு

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- புதிய வணிகங்களை ஆரம்பிப்போர்களுக்கான ஊக்குவிப்புக்களின் தேவைப்பாட்டினைச் சுட்டிக்காட்டுவார்.
- இலங்கையில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்படும் நிதி, நிதியல்லாத ஊக்குவிப்புக்களுக்கான உதாரணங்களை குறிப்பிடுவார்.
- முயற்சியாளர்களுக்கு நிதி, நிதியல்லாத ஊக்குவிப்புக்களை வழங்குவதற்காக இலங்கையில் காணப்படும் நிறுவனங்களைப் பெயரிட்டுக் காட்டுவார்.